**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 16-6-2014 Issued : 16-6-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

## TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, பிப்ரவரி 3, 2014—தொகுதி 60—எண் 3**

**Monday, the 3rd February, 2014—Volume 60—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**3-2-2014**

## உள்ளடக்கம்


*பக்கங்கள்*

**1. வினாக்கள்—விடைகள்—**

*உடுக்குறியிட்ட வினாக்கள்* 337-406

**2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** 406-407

*தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 407

**3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதமும் பதிலுரையும்—** 407-464

*திரு. க. பாலகிருஷ்ணன்* 408-409, 461-462

*திரு. இரா. அண்ணாதுரை* 409

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* 409-458

*திரு. சு. குணசேகரன்* 458-459

*முனைவர் செ.கு. தமிழரசன்* 459-460

*திரு. ஜே.ஜி. பிரின்ஸ்* 460-461

*திருமதி எஸ். விஜயதரணி* 462-463

| | | |
|---|---|---|
| | | *பக்கங்கள்* |
| **4.** | **அரசினர் தீர்மானங்கள்—** | 464-465<br>467-468 |
| | *(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்* | 464-465 |
| | *(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்* | 467-468 |
| **5.** | **அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—** | 465-467 |
| | *தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014* | |
| | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 465-466 |
| **6.** | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 468-469 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, தை 21, திருவள்ளுவர் ஆண்டு–2045

## 2014 பிப்ரவரி 3, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்.”*

*நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**31—**

### துணை மின் நிலையம்

***5687—திரு. பி.கே. வைரமுத்து:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருமயம் தொகுதி, நச்சாந்துப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமயம் தொகுதி, நச்சாந்துப்பட்டி பகுதிக்கு, புதுக்கோட்டை 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனினும், இப்பகுதியில் பெருகிவரும் மின் பளுவை நிறைவு செய்ய புதுக்கோட்டை 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தில் உள்ள மின்மாற்றிகளின் திறனை உயர்த்த ரூ.131.17 இலட்சம் செலவில் அனுமதி வழங்கப்பட்டு, புதிய மின்மாற்றி 28–2–2013–லிருந்து இயக்கத்தில் உள்ளது. எனவே, திருமயம் தொகுதி, நச்சாந்துப்பட்டியில் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், அங்கு துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

**திரு. பி.கே. வைரமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானாக விரிந்த புகழாக, தேனாக இனிக்கும் தமிழாக, வடக்கு வழி பார்த்து காத்திருக்கும் வருங்காலப் பாரதமாக வாழ்கின்ற வாகையே, (மேசையைத் தட்டும் ஒலி) வறியோரை வாழ்விக்க வரமாக வந்திட்ட ஈகையே, 'கன்றின் குரலும், கன்னித் தமிழும், சொல்லும் வார்த்தை அம்மா, அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) கருணை தேடி அலையும் உயிர்கள் உருகும் வார்த்தை அம்மா, அம்மா; எந்த மனதில் பாசம் உண்டோ, அந்த மனமே அம்மா, அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) இன்பக் கனவை அள்ளித்தரவே இறைவன் தாயைத் தந்தான் அம்மா'. இந்த இந்திய தேசத்தை வல்லரசாக்க இறைவன் அம்மாவை இந்திய பிரதமராக அமர்த்தி ஆசியும் தருவான் அம்மா. இது சத்தியம், இது சத்தியம் என்றுரைத்து மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த நலத் திட்டங்களில் திருமயம் தொகுதிக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், பொன்னமராவதி காவல் துறை துணைக்





கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடமும், திருமயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடமும் அறிவித்ததற்கும், திருமயம் பனையப்பட்டி சாலை 12 கி.மீ. தூரத்திற்கு மேம்பாடு செய்யவும், புலிவலம்–செங்கீரை, புலிவலம்–விராச்சிலை சாலையை 16 கி.மீ. அகலப்படுத்தி மேம்பாடு செய்யவும் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வெளியிட்டதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, திருமயம் தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினை அம்மா அவர்களின் பாத மலர்களுக்கு காணிக்கையாக்கி, நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நச்சாந்துப்பட்டி சுற்று வட்டாரத்தில் 15–க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் உள்ளன. ஒரு தனியார் நூற்பாலையும் உள்ளது. 500–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். தனியார் பருப்பு மில்லும் உள்ளது. 15–க்கும் மேற்பட்ட கல் உடைக்கும் கிரஷ்ஷர்கள் உள்ளன. விவசாயப் பம்பு செட்டுகளும் அதிகமாக உள்ளன. தற்போது புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள 110/22 கி.வோ. திருவாப்பூர் துணை மின் நிலையத்திலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள வெள்ளாற்றின் குறுக்கே மின் தடம் அமைக்கப்பட்டு நச்சாந்துப்பட்டி பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் இப்பகுதிக்கு மின்சாரம் குறைவாக வருகிறது. வருங்காலத்தில் திருமயம் தாலுகாவில், நச்சாந்துப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி நச்சாந்துப்பட்டிக்கு சீரான மின்சாரம் வழங்கும் வகையில் கூடுதல் மின்மாற்றி அமைத்துக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, கூடுதல் துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 3

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தொகுதி நச்சாந்துப்பட்டி பகுதிக்கு, 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புதுக்கோட்டை 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அந்தத் துணை மின் நிலையத்தினுடைய உச்சபட்சத் தேவை 20.3 M.V.A. ஆகும். 10 M.V.A. திறன் கொண்ட 2 மின்மாற்றிகளும் அங்கே இயங்கி வருகின்றன. ஆகமொத்தம் அங்கே இருக்கின்ற 20 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகள் இயங்கி வந்தன. மின்தேவை அந்த இடத்தில் சற்று அதிகமாக இருக்கின்ற காரணத்தால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, கேட்காமலேயே அந்தப் பகுதியினுடைய தேவையை அறிந்து, இப்போது அங்கேயிருந்த 20.3 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றியை, தேவைக்கேற்ப 26 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றியாகத் தரம் உயர்த்தியிருக்கிறது. அதாவது, 10 M.V.A. திறன் கொண்ட 2 மின்மாற்றிகளில், ஒன்றை 16 M.V.A. திறன் கொண்ட மின் மாற்றியாக மாற்றி, ஆக மொத்தம் 26 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகளுடன் இப்பொழுது இயங்கி வருகிறது. தேவையே 20.3 M.V.A.-தான். தேவைக்கேற்ப இப்பொழுது தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, தற்போதைய சூழ்நிலையில், அங்கே புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே புதிய தொழிற்சாலைகள் இருக்கின்றன; நூற்பாலைகள் இருக்கின்றன; பல்வேறு தொழிற்சாலைகளெல்லாம் வந்துகொண்டிருக்கின்றன; தேவை பெருகிக்கொண்டேயிருக்கிறது என்று சொல்கிறார்கள். வருங்காலத்திலே அதிகரிக்கின்ற மின் தேவைக்கேற்ப அங்கே ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப அந்தப் பகுதியிலே புதியதாக, கூடுதலாக ஒரு துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

**திரு. பி.கே. வைரமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி, நச்சாந்துப்பட்டியில் மின்சாரப் பற்றாக்குறைக்குத் தீர்வு காணும் வகையில் கூடுதல் மின்மாற்றியை அமைத்துக்கொடுத்திருக்கின்ற, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் வேறு எங்காவது துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதியை மட்டும் பார்க்காமல், ஒட்டுமொத்தமாக அந்த மாவட்டத்தின் தேவையைக் கருத்தில்கொண்டு, மாவட்ட மக்களுக்குப் பயனுள்ள வகையிலே இங்கே கேள்வியைக் கேட்டிருக்கின்றார். அவர் கேட்டபடி, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதியதாக இச்சடி என்ற இடத்திலே 110/22/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதேபோல அம்மாசத்திரம் என்ற பகுதியிலே 110/22/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. காத்தக்குறிச்சியில் 110/22/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10—10

அதேபோல, புதுக்கோட்டை அர்பன் பகுதியிலே 110/22 கிலோ வோல்ட் திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கும் இப்போது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அறந்தாங்கியிலே 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு அந்தப் பணிகள் முடிவுற்று தற்போது இயக்கத்தில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மலையூரிலே 110/22 கிலோ வோல்ட் திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாகவே முடிவடைய இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைவாகச் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவையெல்லாம் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய துணை மின் நிலையங்கள் ஆகும்.

[2014 பிப்ரவரி 3

இது தவிர புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை, கீரமங்கலம், கொடிக்குளம் ஆகிய மூன்று ஊர்களிலே இருக்கின்ற துணை மின் நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் கீரமங்கலத்திலே இந்த மாத இறுதிக்குள்ளாகவே பணி முடிக்கப்படவிருக்கிறது. கொடிக்குளத்திலே ஏற்கெனவே பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. கந்தர்வக்கோட்டையிலே பணிகள் தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகமொத்தம், புதுக்கோட்டையிலே 9 இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், இருக்கின்ற துணை மின் நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் டெல்லியில் அமைந்த ஆம் ஆத்மி அரசு, மின் கட்டணத்தை 50 சதவீதம் குறைத்திருக்கிறது என்கின்ற தகவல்களை நாம் பார்க்கின்றோம். அதேபோல, குஜராத் போன்ற மாநிலங்களில் மின் கட்டணம் குறைவாக உள்ளதால் வளர்ச்சி சிறப்பாக இருப்பதாக அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலேயும் அதுபோன்று மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா? அதற்கான வழிவகை ஏதேனும் செய்யப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். டெல்லியிலே 400 யூனிட்டிற்குக் குறைவாகப் பயன்படுத்துகின்ற மின் நுகர்வோர்களுக்கு பாதி விலையாகக் குறைக்கப்பட்டிருக்கிறதே, இங்கேயும் குறைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இங்கே



2014 பிப்ரவரி 3]

அந்த அவசியமே எழவில்லை. காரணம், ஏற்கெனவே டெல்லியிலே இருக்கின்ற அந்த மின் கட்டணத்தைவிட புரட்சித் தலைவி ஆளுகின்ற தமிழகத்திலே குறைவாகத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே குறைத்தது பெரிய செய்தியாக இருக்கிறது. இங்கு அதைவிடக் குறைவாக இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய கட்டணத்தைப் பார்த்துகூட டெல்லியிலே குறைத்திருக்கலாம். ஏனென்று சொன்னால் டெல்லியிலே இருக்கின்ற கெஜ்ரிவால்–ஆம் ஆத்மி கட்சி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மின்சாரக் கட்டணத்தை பாதியாகக் குறைப்போம் என்று சொன்னார்கள். 400 யூனிட் அளவிற்குக் குறைவாக மின்சாரம் பயன்படுத்துகின்றவர்களுக்குத்தான் 50 சதவீதக் கட்டணத்தைக் குறைத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்குக் குறைக்கவில்லை.

இதிலே ஒப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இங்கே தமிழ்நாட்டிலே இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட் வரை 1 ரூபாய் 20 பைசாதான் மின் கட்டணம் செலுத்துகிறார்கள். ஆனால், டெல்லியிலே மின் கட்டணம் குறைக்கப்பட்டதற்கு பின்பு மின் கட்டணம் 2 ரூபாய் 75 பைசா. வித்தியாசம் பாருங்கள். டெல்லியிலே ஆம் ஆத்மி கட்சி மின் கட்டணத்தைக் குறைத்ததற்குப் பின்பு பார்த்தாலும், இங்கு அதைவிட ஒரு ரூபாய் 55 பைசா ஒரு யூனிட்டுக்குக் குறைவாகத்தான் விதிக்கிறோம். அதேபோல, இப்போது 200 யூனிட்டிற்கு நாம் நிர்ணயித்துள்ள கட்டணம் 3 ரூபாய் 20 பைசா. டெல்லியிலே குறைக்கப்பட்டதற்குப் பின்பு நிர்ணயித்துள்ள கட்டணம் 4 ரூபாய் 70 பைசா. யூனிட்டுக்கு அதைவிட ஒரு ரூபாய் 50 பைசா குறைவாகத்தான் நாம் நிர்ணயித்துள்ளோம். அதேபோல, இங்கே இரண்டு மாதத்திற்கு 300 யூனிட் வரை பயன்படுத்துகின்ற நுகர்வோர் செலுத்துகின்ற மின் கட்டணத் தொகை 730 ரூபாய்.

முற்பகல் 10–15

ஆனால், டெல்லியில் எவ்வளவு கட்டுகிறார்கள் என்றால், 785 ரூபாய் கட்டுகிறார்கள். அதைவிட 55 ரூபாய் குறைவாகத்தான் நாம் வசூலிக்கிறோம். ஒரேயொரு திருத்தத்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். ஒரு ரூபாய் 55 பைசா கட்டணம் என்று சொன்னது தவறு. 100 யூனிட் வரை ஒரு யூனிட்டுக்கு தமிழகத்தில் கட்டுகிற தொகை ஒரு ரூபாய் 20 பைசா. டெல்லியில் 2 ரூபாய் 75 பைசா. அதனால் அவர்கள் கட்டுகிற கட்டணத் தொகையைவிட

[2014 பிப்ரவரி 3

இங்கு 155 ரூபாய் குறைவாகத்தான் கட்டுகிறார்கள். அதேபோல, 200 யூனிட் வரைக்கும் ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 20 பைசா இங்கு கட்டுகிறார்கள். அங்கு 4 ரூபாய் 70 பைசா கட்டுகிறார்கள். அதெல்லாம் நான் சொன்னது அப்படியேதான். ஆனால், பணம் கட்டுகிறபோது 150 ரூபாய் நமக்குக் குறைவாக இருக்கிறது. அவர்கள் 150 ரூபாய் கூடுதலாகத்தான் கட்டுகிறார்கள். 300 யூனிட் வரைக்கும் 730 ரூபாய் நம் நுகர்வோர்கள் கட்டுகிறார்கள். அங்கு இருக்கிறவர்கள் ரூபாய் 785 கட்டுகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே நாம் குறைவாகத்தான் இருக்கிறோம். ஆகவே, குறைவாக இருப்பதை மீண்டும் குறைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டெல்லியில் கட்டணத்தைக் குறைத்துவிட்டார்கள் குறைத்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். டெல்லியில் இலவச மின்சாரம் இருக்கிறதா? டெல்லியில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் இருக்கிறதா? அங்கு விவசாயமே கிடையாது; அது நகரப் பகுதி. அங்கே இலவச மின்சாரம் கிடையாது. இங்கே இருக்கிறது. 13.69 இலட்சம் குடிசைகளுக்கு நாம் இலவச மின்சாரம் கொடுக்கிறோம். அங்கே, இலவச மின்சாரம் கிடையாது. அதேபோல, விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவசமாகவும், சலுகை விலையிலும் மின் கட்டணம் இங்கே வசூலிக்கிறோம். டெல்லியில் அதுவும் கிடையாது. ஆகவே, நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பல்வேறு சலுகைகளும், இலவசங்களும் வழங்கப்பட்டதற்குப் பின்பும், டெல்லியில் இருப்பதைவிட இங்கு நாம் குறைவாகத்தான் மின் கட்டணத்தை வசூலிக்கிறோம். அங்கே இலவசங்கள் எதுவும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், இன்றைக்கும் சொல்கிறேன், டெல்லியில் மட்டுமல்ல; மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்தில்தான் மின் கட்டணம் இன்றைக்கும் குறைவாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் மேலெழுந்தவாரியாகச் சொல்லவில்லை. உதாரணத்திற்கு வேண்டுமானால், சில மாநிலங்களுடனான ஒப்பீட்டுப் பட்டியலைக் காட்டுகிறேன். தமிழ்நாட்டில் 100 யூனிட் வரை பயன்படுத்தும் நுகர்வோர்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் 20 பைசாதான் வசூலிக்கப்படுகிறது. ஆனால், ஆந்திரப் பிரதேசத்தில் யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் 94 பைசாவும், இப்போது நான்



2014 பிப்ரவரி 3]

சொன்னதுபோல், டெல்லியில் 2 ரூபாய் 75 பைசாவும், குஜராத்தில்—எதற்கெடுத்தாலும், குஜராத், குஜராத் என்கிறார்களே, அந்த குஜராத்தில் 3 ரூபாய் 45 பைசா உள்ளது. இங்கு ஒரு ரூபாய் 20 பைசா. அங்கு இரண்டு மடங்கு அதிகம். அதேபோல, குஜராத் கிராமப்புறங்களில் 3 ரூபாய் 5 பைசாவும், ஹரியானாவில் 3 ரூபாய் 52 பைசாவும், கர்நாடகாவில் 4 ரூபாய் 18 பைசாவும், கர்நாடக கிராமப் பகுதியில் 3 ரூபாய் 60 பைசாவும், மணிப்பூரில் 3 ரூபாய் 40 பைசாவும், மிசோரமில் 2 ரூபாய் 20 பைசாவும், இமாச்சலப் பிரதேசத்தில் 2 ரூபாய் 10 பைசாவும், மேகாலயாவில் 3 ரூபாய் 30 பைசாவும், மகாராஷ்டிராவில் 4 ரூபாய் 16 பைசாவும் வசூலிக்கப்படுகின்றன. ஆக, பணம் கட்டுவதில் எவ்வளவு வித்தியாசம் என்று பாருங்கள். இதேமாதிரி 200 யூனிட் வரை உள்ள கட்டணத்தைச் சொல்கிறேன். நான் சொல்வதை முழுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். டெல்லி மாத்திரமல்ல, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, தமிழ்நாட்டில்தான் மின் கட்டணம் குறைவு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்திற்கு இது தேவை என்கிற காரணத்தினால், விரிவான பதிலாகத்தான் இது இருக்கும் என்றாலும், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் 200 யூனிட் வரைக்கும் ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 20 பைசா, ஆந்திராவில் 6 ரூபாய் 83 பைசா, டெல்லியில் 4 ரூபாய் 70 பைசா, குஜராத் நகர்ப் பகுதியில் 7 ரூபாய் 25 பைசா, குஜராத் கிராமப் பகுதியில் 6 ரூபாய் 45 பைசா, ஹரியானாவில் 8 ரூபாய் 70 பைசா, கர்நாடகாவில் 8 ரூபாய் 58 பைசா, கர்நாடக கிராமப் பகுதியில் 7 ரூபாய் 50 பைசா, மணிப்பூரில் 5 ரூபாய் 60 பைசா, மிசோரமில் 4 ரூபாய் 30 பைசா, இமாச்சலப் பிரதேசத்தில் 3 ரூபாய் 40 பைசா, மேகாலயாவில் 5 ரூபாய் 90 பைசா, மகாராஷ்டிராவில் 7 ரூபாய் 52 பைசா, நம்முடைய தமிழ்நாட்டில் 3 ரூபாய் 20 பைசா. ஆகவே, நம்மைவிட கட்டணம் இரண்டு மடங்கு அங்கு அதிகமாக இருக்கிறது.

[2014 பிப்ரவரி 3

முற்பகல் 10–20

அதேபோல, தமிழ்நாட்டிலே 300 யூனிட்கள் வரை, நுகர்வோர் கட்டுகிற பணம் எவ்வளவு என்று பார்த்தீர்களென்றால், இரண்டு மாதங்களுக்கு 730 ரூபாய் கட்டுகிறார்கள். ஆனால் ஆந்திரப் பிரதேசத்திலே 1,220 ரூபாய் கட்டுகிறார்கள்; டில்லியிலே 785 ரூபாய் கட்டுகிறார்கள். குஜராத்திலே நகரப் பகுதியில் 1,190 ரூபாய் கட்டுகிறார்கள். குஜராத் கிராமப் பகுதியில் 1,070 ரூபாய் கட்டுகிறார்கள். அரியானாவிலே 1,532 ரூபாய் கட்டுகிறார்கள். கர்நாடகாவில் நகரப் பகுதிகளில் 1,413 ரூபாயும், கிராமப் பகுதிகளில் 1,255 ரூபாயும் கட்டுகிறார்கள். மணிப்பூரில் 830 ரூபாயும், மிசோரமில் 710 ரூபாயும், இமாச்சலப் பிரதேசத்தில் 540 ரூபாயும், மேகாலயாவில் 890 ரூபாயும், மகாராஷ்டிராவில் 1,537 ரூபாயும் கட்டுகிறார்கள். ஆனால், நமது தமிழ்நாட்டில் வெறும் 730 ரூபாய்தான். ஆகவே, எல்லா வகைகளிலும் இன்றைக்கு மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி ஆளுகின்ற இந்தப் புண்ணிய பூமியில், தமிழகத்தில் மட்டும்தான் மின் கட்டணம் குறைவு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மீண்டும் ஒரு முறை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். மின் கட்டணம் உயர்வாக இருக்கிறது என்று யாராவது சொன்னால், அவர்களுக்கு இதுதான் பதில். நேற்றுங்கூட சில பேர் சொன்னார்கள். இங்கே மின்சாரக் கட்டணம் கூடுதலாக இருக்கிறது; மின்சாரமும் கொடுக்கப்படுவதில்லை என்று அவர்கள் கற்பனையில், எந்த நினைவில் இருந்துகொண்டு சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. உண்மை நிலவரம் இப்படி இருக்கும்பொழுது, இதற்கு மாறாக சிலர் பேசுகிறார்கள். எனவே, இந்தச் செய்திகளை மக்கள் மத்தியிலே நமது அன்புக்குரிய உறுப்பினர்கள் எடுத்துச் செல்ல வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாக்குறையை மனதில் வைத்துக்கொண்டு தமிழகத்தில் அரசியல் செய்துவிடலாம் என்று எண்ணியவர்கள் முகத்தில் கரியைப் பூசுகிற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சீர்மிகு, சிறப்பான நடவடிக்கையின்மூலம் தமிழகத்தில் தங்கு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டுவரும்



2014 பிப்ரவரி 3]

இந்த நல்ல வேளையில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பேரையூர் அருகில் இருக்கக்கூடிய, சிலமலைப்பட்டியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சி அமைந்தவுடன், 12–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட அந்தத் துணை மின் நிலையத்திற்கான இடங்கள் எல்லாம் மின் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலே அந்தத் துணை மின் நிலையம் துவங்குவதற்கு அனுமதி வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதி, கீரைப்பட்டி பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதன் மூலமாக சித்தேரி பகுதிக்கு மின்சாரம் கிடைக்கும் என்றும், இதுநாள் வரை மின்சாரத்தையே அறியாத சிட்லிங் பஞ்சாயத்துக்குட்பட்ட காரைப்பாடி கிராமத்திற்கும் மின்சாரம் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு அறிவித்தார்கள். இந்த ஆண்டிலாவது அது அமல்படுத்தப்படுமா? அதேபோல், மேட்டூர் பாலமலை, திருமூர்த்திமலை, குழிப்பட்டி, மாவடாப்பு, குருமலை போன்ற மலைகளிலே வாழக்கூடிய மக்கள் இன்றும் மின்சாரத்தையே அறியாமல் இருக்கின்றனர். ஏறக்குறைய நான் அறிந்த வரையில் இந்தியாவில் 5 சதவிகித கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை என்று மத்திய அரசாங்கத்தின் புள்ளிவிவரம் கூறுகிறது. தமிழகத்திலே 600–க்கும் மேற்பட்ட கிராமங்களில் மின்சார வசதி இல்லை என்று ஒரு விவரம் கூறுகிறது. இவர்களெல்லாம் பழங்குடி மக்களாகத் தான் இருப்பார்கள். எனவே, இதை சிறப்பு நிகழ்வாகக் கருதி,

சிறப்புத் திட்டம் உருவாக்கி அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளித்த மாநிலமாகத் தமிழகத்தைக் கொண்டு வர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையினுடைய அனுமதி கிடைக்காததால் மின்சாரம் வழங்க முடியாத பகுதிகளைத் தவிர, மற்ற அனைத்து கிராமங்களுக்கும் 100 சதவிகிதம் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்ற ஒரே மாநிலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற நமது தமிழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பீகார், உத்தரப் பிரதேசம், ஜார்க்கண்ட் போன்ற பல்வேறு மாநிலங்களில் சாதாரண கிராமப்புறங்களிலே, பல கிராமங்களுக்கு இன்னும் மின் இணைப்புக் கிடைக்காமல் இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு 100 சதவிகிதம் கிராமங்களுக்கு நாம் மின் இணைப்புக் கொடுத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு சொன்னதுபோல, மலைப் பகுதியிலுள்ள ஓரிரு கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கமுடியாமல் இருக்கின்றது. அதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் பல்வேறு தொடர் முயற்சிகளை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது.

முற்பகல் 10—25

குறிப்பாக, அடர்ந்த காட்டுப் பகுதிகளில் இருக்கின்ற கிராமங்களுக்கு மின் வழித் தடம் அமைக்கின்றபொழுது மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையினுடைய அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அவர்கள் அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். எந்த விதத்திலும் அங்கே அனுமதி கிடைக்காதபட்சத்திலே நாம் அங்கே மின் இணைப்பு கொடுக்க முடியவில்லையே தவிர, கொடுக்காமல் இருப்பதற்கு மாநில அரசு துளியும் காரணம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இருந்தாலும்கூட, சில இடங்களிலே கேபிள் மூலமாக மின்பாதை அமைத்துக்கொள்ளலாமா என்று முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். கேபிள் மூலமாக அமைக்கின்றபொழுது





பலமடங்கு கூடுதல் செலவினம் ஏற்படுவதால் நடைமுறைச் சிக்கலும் வருகிறது. பல்வேறு வகைகளிலே தொடர் ஆய்வினைச் செய்து மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து துறை செய்து வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், அந்தப் பகுதிகளிலே மின்சாரம் இல்லை என்று சொல்லி அப்படியே விட்டுவிடுவதில்லை. அதற்குப் பதிலாக சூரிய ஒளி மின்சக்தியை, Solar Energy மூலமாக அந்தந்த மலைப் பகுதி கிராமங்களிலே இப்பொழுது வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. பெரும்பாலான கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியாத பகுதிகளிலே தெரு விளக்குகளுக்கு மட்டும் குறைந்தபட்சம் சூரிய ஒளி சக்தி மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் ஓரிரு கிராமங்களுக்கு இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார், அதையும் கருத்திலே கொண்டு, அப்படி மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கின்ற அந்த கிராமங்களுக்கு சூரிய ஒளி சக்தியின்மூலம் மின்சாரத்தை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி தொண்டர்களினுடைய காவல் தெய்வம், தனக்காகவோ, தன் குடும்பத்திற்காகவோ, தன் வாரிசுகளுக்காகவோ அல்லாமல் 7½ கோடி தமிழ் மக்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், பூமலூர் ஊராட்சியில் 33 K.V. துணை மின் நிலையமானது இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதில் மூன்று feeders வழியாக மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மின் மிகையாக இருக்கின்ற நேரத்தில்கூட ஒரு feeder supply—ஐ நிறுத்தி இரண்டு feeders மூலம் supply கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக 110 K.V. துணை மின் நிலையமாக மாற்றிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

[2014 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து, தேவை ஏற்படின் நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மின் விநியோகம், மின் கட்டணம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கமாக இங்கே அறிவித்து இருக்கிறார்கள். எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு இங்கே வழங்கப்பட்டு இருக்கிறது.

தமிழக அரசு சமீபத்தில் தோட்டக்கலைத் துறையை ஊக்கப்படுத்துவதற்கு பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறது. ஆனால், தோட்ட சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதில்லை. இன்னும் சொல்லப்போனால், 20 சென்ட், 30 சென்ட் நிலங்களில் சாகுபடி செய்யக்கூடிய பூ விவசாயிகளுக்குக்கூட இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை. விவசாயம் சார்ந்து இருக்கிற தொழில் என்கிற முறையிலே கோழி வளர்ப்புப் பண்ணைகளுக்கும் இலவச மின்சாரம் வேண்டும் என்கிற கோரிக்கை இருக்கிறது. எனவே, தோட்ட சாகுபடிப் பயிர்களுக்கும், கோழி வளர்ப்புப் பண்ணைகளுக்கும் இலவச மின்சாரத் திட்டத்தை விரிவுபடுத்துவதுபற்றி இந்த அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 18 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். இப்போது 20 இலட்சம் பம்ப்செட்டுகளுக்கு



2014 பிப்ரவரி 3]

இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே தோட்டக்கலைப் பயிர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். தோட்டக்கலைப் பயிர்களுக்கு என்று தனிக்கட்டணத்திலே மின் இணைப்பு இருக்கிறது. இலவச மின்சாரத்தைப் பொறுத்தவரையில் பணப் பயிர்களுக்கு அங்கே மின்சாரம் குறைந்த கட்டணத்திலே, 3–A Tariff என்ற தனி மின் கட்டணத்திலே இணைப்பு வழங்கப்படுகிறது. ஆனால், ஏற்கெனவே இருக்கின்ற சட்ட விதிகள்படி, விவசாயத்திற்கு மட்டும் இலவசமாக மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் ஒன்றியத்தில் 37 ஊராட்சிகளும், அதற்குட்பட்ட 20 குக்கிராமங்களும் இருக்கின்றன. ஆனால் அந்தப் பகுதியில் ஒரே ஒரு துணை மின் நிலையம் மட்டுமே இருக்கின்றது. அதனால் பல கிராமங்களில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால், அலங்காநல்லூர் பகுதிக்கு உட்பட்ட அய்யங்கோட்டை, தனிச்சியம், கல்வேலிப்பட்டி, கொண்டையம்பட்டி, புதுப்பட்டி, அழகாபுரி, தண்டலை, வாவிடமருதூர், அச்சம்பட்டி ஆகிய ஊர்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த அய்யங்கோட்டை, தனிச்சியம் போன்ற பகுதிகளில் இப்போது இருக்கின்ற மின் தேவை என்ன, பெருகிவரும் மின் தேவை என்ன என்பவை குறித்து தொழில்நுட்ப ரீதியாக ஆய்வுகளைச் செய்து, அந்த ஆய்வுகளின் அடிப்படையில் தேவை ஏற்படின், நிதிநிலைக்கேற்ப ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2014 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கின்ற விதமாக சோலார் மின் மோட்டார்கள் பொருத்தப்படும் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. அது எப்போது தொடங்கப்படும், முதற்கட்டமாக எத்தனை மின் மோட்டார்கள் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோலார் மின் மோட்டார்கள் பொருத்துவதற்கான நடவடிக்கை வேளாண்மைத் துறை மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பணிகள் இப்போது முடியும் தருவாயில் இருக்கின்றன. அதி விரைவிலே வேளாண்மைத் துறை அந்தப் பணியினைச் செய்து முடிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு விவசாயிகளுக்கு அந்த சோலார் மின் மோட்டார்கள் வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண்கள் 32, 33, 34 மற்றும் 35 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**36—**

### வேளாண் கல்லூரி

***35751—திரு. பொன். ராஜா:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2014 பிப்ரவரி 3]

பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சிப் பகுதியில் வேளாண் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சிப் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம், நாளைய இந்தியாவின் நம்பிக்கை, தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி விவசாயம் மிகுந்த ஒரு பகுதியாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்புமிக்க திட்டமான பசுமை காய்கறி பண்ணைத் திட்டத்திற்குத் தேவையான காய்கறிகள் மற்றும் அனைத்து விளைபொருட்களையும் அதிக அளவிலே விளைவிக்கக்கூடிய ஒரு மாவட்டமாகத் திருவள்ளூர் மாவட்டம் விளங்கிக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பொன்னேரி தொகுதியில், ஆரணி பேரூராட்சிப் பகுதியில் ஒரு வேளாண் கல்லூரி அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பரிசீலித்து வழங்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதியைப் பொறுத்தவரையில், திருவள்ளூர் மாவட்டம் அருகில் உள்ள வேலூர் மாவட்டம் கலவையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் சார்புக் கல்லூரியான ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி இயங்கி

[2014 பிப்ரவரி 3

வருகின்றது. அதனால், அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் அந்தக் கல்லூரியில் படிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது. ஆரணி பகுதியில் உள்ள மாணவ மாணவிகளும் அந்தக் கல்லூரியில் பயின்றுகொள்ளலாம். மேலும், ஒரு புதிய வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு தொடக்க நிதியாக 50 கோடி ரூபாயும், குறைந்தபட்சம் 100 ஏக்கர் விவசாய நிலமும் தேவைப்படுவதால், அதன் தேவை அறிந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் நீண்ட காலமாகச் செயல்பட்டு வந்த உழவர் பயிற்சி மையம் தற்போது செயலிழந்துவிட்டது. அந்த இடத்தில் தற்போது வேளாண்மை ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகின்றது. அங்கு ஏராளமான நிலமும் இருக்கின்றது. அந்த இடத்தில் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா அல்லது வேளாண்மைக் கல்லூரியாவது அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி அமைப்பதற்கு குறைந்தபட்சம் 100 ஏக்கர் நிலமும் 50 கோடி ரூபாயும், தேவைப்படுகிறது. ஆராய்ச்சி நிலையத்தைப் பொறுத்தவரையிலே, அந்தப் பகுதியிலே சிறப்பாக இயங்கி வருகிறது. அதனால், நம்முடைய விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை அந்த ஆராய்ச்சி நிலையம் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட பவானிசாகருக்குப் பக்கத்தில் 65 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட வேளாண்மை விதைப் பண்ணை செயல்பட்டு வருகிறது. இந்த இடம் வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு தகுதியான இடமாக இருப்பதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கே விவசாயக் கல்லூரி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே 18 வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன. அதேபோல 14 பட்டயப் படிப்புக் கல்லூரிகள் இருக்கின்றன. இதிலே தேவையான அளவிற்கு மாணவர்கள் சேர்க்கை இருப்பதனால், மீண்டும் புதிய கல்லூரி அவசியமா என்பதை அரசு சிந்திக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும்கூட, உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் தேவையிருந்தால் அதுபற்றி பிற்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள்.

**டாக்டர் த. ஹரிதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டப்படாத தங்கம் ஆபரணம் ஆவதில்லை; புடமிடப்படாத தங்கம் அணிகலன் ஆவதில்லை; துளையிடப்படாத மூங்கில் புல்லாங்குழல் ஆவதில்லை; உளியின் வலிக்கு பயந்த கற்கள் சிலையாவதில்லை; எல்லாவற்றுக்கும் மேலாக முயற்சி செய்யாத மனிதனுக்கு வெற்றி என்பது இல்லை. முயற்சி, முயற்சி, முயற்சி. முயற்சி ஒன்றையே தினம் தினம் பயிற்சியாகக் கொண்டு தமிழக மக்களுக்கு எண்ணற்ற நலத் திட்டங்களை (மேசையைத் தட்டும் ஒலி) வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கும் இதய தெய்வம், இந்தியத் தாய், பாரத மாதா, நாளைய பாரதப் பிரதமர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

எனது திண்டிவனம் தொகுதியில் விவசாயம் சார்ந்த பட்டயப் படிப்பு மட்டும் பயிற்றுவிக்கப்படுகிறது. அங்கே ஒரு விவசாயக் கல்லூரி அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்றதாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில் இதற்கும் பொருந்தும். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் போதுமான வேளாண் கல்லூரிகள், வேளாண் பட்டயப் படிப்புக் கல்லூரிகள் இருந்து வருகின்றன. அதனால், அந்தப் பகுதியில் இருக்கின்ற மாணவ, மாணவிகளும் ஏற்கெனவே இருக்கின்ற கல்லூரிகளையும், பட்டயப் படிப்பு கல்லூரிகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர்



2014 பிப்ரவரி 3]

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தில் சிவகங்கை மாவட்டம் ஒரு வறட்சியான மாவட்டமாக விளங்கி வருகிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தட்பவெப்ப சூழ்நிலைக்கேற்ப என்னென்ன பயிர்களைப் பயிரிட வேண்டுமென்ற நிலையை அறிய முடியாத காரணத்தினால், அங்கே விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு, மழை பொய்த்துவிட்டாலும் என்ன பயிர் செய்தால், என்ன வேளாண்மை செய்தால் பயனுள்ளதாக இருக்கும் என்ற வகையில் சிவகங்கை மாவட்டத்தில், மானாமதுரை தொகுதியில் ஏதாவது ஒரு இடத்தில் மண் ஆய்வு மையத்தையும், நீர் ஆய்வு மையத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய வேளாண் அறிவியல் மையங்கள் மதுரையிலே சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அந்த வேளாண் அறிவியல் மையங்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு அருகிலே இருப்பதனால், விவசாயிகளுக்குத் தேவையான அனைத்தையும் அந்த வேளாண் அறிவியல் மையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அதனால் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் அந்த வேளாண் அறிவியல் மையங்களை அணுகித் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, ஒரு வினாவினைத் தங்கள் வாயிலாக எழுப்பிட விழைகிறேன். மத்திய அரசாங்கம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் க்ரிஷி விக்யான்

கேந்திரா என்ற ஒரு அமைப்பை உருவாக்குகிறது. உழவர் பெருமக்களுக்கு அறிவியல், தொழில் சார்ந்த பயிற்சிகள், புதிய தொழில்நுட்பங்கள் போன்றவற்றை வழங்கவேண்டும் என்பதற்காக அந்தக் க்ரிஷி விக்யான் கேந்திரா துவக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டில் சென்ற முறை ஆட்சியில், அதிகாரத்தில் இருந்தவர்கள் பல மாவட்டங்களிலே தனிப்பட்ட முறையில் க்ரிஷி விக்யான் கேந்திராவை உருவாக்கி வைத்திருந்தார்கள். அதன் மூலமாக அவர்கள் அதிக நிதியினை மத்திய அரசிடமிருந்து மானியமாகப் பெற்றார்கள். ஆனால் அந்த க்ரிஷி விக்யான் கேந்திராக்கள் நல்லமுறையில் செயல்படுவதில்லை; உழவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதில்லை; உழவர்களைப் பார்ப்பதற்கு அனுமதி கொடுப்பதில்லை; புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொடுப்பதில்லை. எனவே, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தந்த மாவட்டங்களிலே தனியார்களால் செயல்படுத்த முடியாத க்ரிஷி விக்யான் கேந்திராக்களை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தோடு இணைப்பதற்கான ஒரு புதிய முயற்சியை எடுப்பார்களா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

**திரு. எம். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தை முழக்கமாகக் கொண்டு, நாளைய பாரதத்தை ஆள இருக்கின்ற வருங்கால பாரதப் பிரதமர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண்மைத் துறைக்கென்று மாண்புமிகு அம்மா அவர்களால்



வருங்காலத்தில் தனி பட்ஜெட் அமைக்கப்படும் அந்த நல்ல நாளை தமிழக விவசாயிகள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுடைய வாழ்விலே ஒரு மிகப் பெரிய வசந்தத்தை உருவாக்கக்கூடிய வல்லமை படைத்த, விவசாயிகளுடைய ஒரே பாதுகாவலர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அனைவரும் வியந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையை ஏற்பதற்குத் தயாராகியிருக்கின்றார்கள்.

தஞ்சை மாவட்டம், அதாவது டெல்டா மாவட்டம் முழுமையாக விவசாயிகளைக்கொண்ட மாவட்டமாகும். அப்படிப்பட்ட தஞ்சையிலே ஆடுதுறை நெல் ஆராய்ச்சிப் பண்ணையில், அந்தப் பகுதியினுடைய மேம்பாட்டிற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே ஒரு வேளாண் கல்லூரியை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நான் எற்கெனவே சொன்னதுபோல், நிறைய வேளாண் கல்லூரிகளும், பட்டயப் படிப்பு கல்லூரிகளும் இருக்கின்றன. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலே இருக்கின்ற மாணவ, மாணவிகள் அனைவரும் அந்தக் கல்லூரிகளிலே பயின்றுகொள்ளலாம். தேவையிருப்பின், பிற்காலத்தில் இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மேல்செங்கம் பகுதியில் 10,000 ஏக்கர் நிலப்பரப்பிலே மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு வந்த மத்திய, மாநில விதைப் பண்ணை அலுவலகம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மூடப்பட்டுவிட்டது.

[2014 பிப்ரவரி 3

எனவே, தற்போது நடைபெற்றுவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்த மத்திய, மாநில விதைப் பண்ணை அலுவலகத்தை மீண்டும் திறப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னதுபோல், அங்கே அந்த நிலை இருந்தால், நம்முடைய துறை அலுவலர்களை அனுப்பி, ஆராய்ந்து, அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

## கூட்டுறவு வங்கிக் கிளை

**40646—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கென நாகப்பட்டினத்தில் தனியாக ஒரு வங்கிக் கிளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி, தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் சரகம், திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் சரகம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் முழுவதையும் செயல் எல்லைகளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.



2014 பிப்ரவரி 3]

தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், பட்டுக்கோட்டை மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி சரகங்களைச் செயல் எல்லைகளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கென ஒரு தனி மத்தியக் கூட்டுறவு வங்கி அமைத்தால் கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியும், ஏற்கெனவே நலிவுற்ற நிலையிலுள்ள தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியும் செயலிழந்து போகும் நிலை உருவாகும்.

மேலும், புதிதாக உருவாக்கக் கோரப்பட்டுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கியும் நிதியாதாரங்கள் அதிகமின்றிச் செயல்பட முடியாமல் போய்விடும். எனவே, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கென நாகையில் தனியாக வங்கி அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு பகுதியும் இணைந்துள்ளன. இது நீண்டகாலமாக செயல்பட்டுவரும் பாரம்பரியமான ஒரு வங்கியாகும். தற்போது கும்பகோணத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு நாகை மாவட்டத்தின் கடைக்கோடி பகுதியான வேதாரண்யத்திலிருந்து செல்ல வேண்டுமானால், 100 கிலோ மீட்டருக்குமேல் பயணிக்க வேண்டியுள்ளது. இதனால் விவசாயிகளும், இதர பயனாளிகளும் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, நாகப்பட்டினத்தில் ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியை உருவாக்கினால் விவசாயிகளுக்கும், இதர பயனாளிகளுக்கும் மிகவும் உதவிகரமாக இருக்கும். எனவே, வளர்ந்துவரும் சேவையைக் கணக்கில் கொண்டும், பயனாளிகளின் நீண்ட பயணத்தைத்

[2014 பிப்ரவரி 3

தவிர்க்கும்வகையிலும், நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையிலும், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, நாகையில் ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியை உருவாக்க, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய முடிவை பரிசீலனை செய்து, அந்த வங்கியை உருவாக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், மாவட்ட வங்கியில்தான் ஓர் உறுப்பினர் கடன்பெற வேண்டும் என்ற அவசியம் இல்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மத்திய வங்கியின் உள்ளடக்கத்தில் இருக்கின்றன. ஏறத்தாழ 268 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், கும்பகோணம் வங்கியில் அங்கங்களாக இருக்கின்றன. அதாவது, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்த்து, ஏறத்தாழ 34 மாவட்ட வங்கியினுடைய கிளைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் அல்லாமல் 65 கிலோ மீட்டர் தூரத்தில்தான் கும்பகோணம் வங்கி இருக்கின்றது. மேலும், தனி ஒரு விவசாயி மாவட்ட வங்கியில் கடன் பெறும் நிலை இல்லை. இன்றைக்கு மத்திய ரிசர்வ் வங்கியானது சில வழிகாட்டுதலைக் கொடுத்திருக்கின்றது. மாவட்ட வங்கிகள் எவ்வாறு செயல்பட வேண்டும்; அதன் நிதி ஆதாரம் எப்படி இருக்க வேண்டும்; அதன் பங்கு மூலதனம் எவ்வளவு இருக்க வேண்டுமென்று சில வழிகாட்டுதல்களைக் கொடுத்திருக்கின்றது. அதன் அடிப்படையில் பார்த்தால், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பிரிக்கும்பட்சத்தில், தாய் வங்கியான கும்பகோணம் வங்கியின் நிதி நிலைமை பாதிக்கப்படுவதோடு, புதிதாக உருவாக்கப்படும் வங்கியின் நிதி நிலைமையும் பாதிக்கப்படும்.

குறிப்பாக, எடுத்துக்கொள்வோமானால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், இந்தக் கூட்டுறவு வங்கியானது ரிசர்வ் வங்கியின் உரிமையையே பெற்றிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகு, 11 வங்கிகள் மத்திய



2014 பிப்ரவரி 3]

ரிசர்வ் வங்கியின் உரிமையைப் பெற்றிருக்கின்றன. அதில் கும்பகோணம் கூட்டுறவு வங்கியும் ஒன்று. அருகில் இருக்கின்ற தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மிகவும் நலிந்த நிலையில் இருக்கின்றது. அந்த வங்கி இப்போதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீர்மிகு திட்டத்தால், சிறப்பான நடவடிக்கையால் தொலைநோக்குப் பார்வையோடு உருவாக்கியிருக்கின்ற கணினிமய தொழில்நுட்ப உதவியுடன் புனரமைக்கப்பட்டு, மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு வங்கிகள்மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு, ஏறத்தாழ 2¼ ஆண்டுகளில் 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு டெபாசிட்டாக வங்கிகளுக்கு வந்திருக்கின்றது. மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பான ஆட்சிக்கு இது மிகப் பெரிய சான்று என்பதனை நான் இங்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும் என்பது உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால், இப்பொழுது இருக்கிற கும்பகோணம் வங்கியும் நலிவுற்றுவிடும்; புதியதாகத் தொடங்க வேண்டுமென்று கோரப்படுகின்ற அந்த மாவட்ட வங்கிக்கும் நிதி ஆதாரம் கிடைக்காது; பங்கு மூலதனம் கிடைக்காது; ரிசர்வ் வங்கியின் உரிமையையும் பெற முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கை இது. ஆகவேதான் அந்தக் கோரிக்கையை இங்கே நான் முன்வைத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதை பரிசீலனை செய்து, நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், நாகையிலே ஒரு மத்திய கூட்டுறவு வங்கியை உருவாக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 3

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இப்பொழுது ரிசர்வ் வங்கி, நபார்டு வங்கி ஆகியவை மத்திய கூட்டுறவு வங்கியினுடைய நிதியாதாரம், பங்கு மூலதனம் எவ்வளவு இருக்க வேண்டுமென்று ஒரு தாக்கீது கொடுத்திருக்கின்றன. வருகிற 2015–க்குள் மாவட்ட வங்கியினுடைய பங்கு மூலதனம் 7 சதவீதம் இருக்க வேண்டுமென்றும், 2017 ஆம் ஆண்டிலே அது 9 சதவீதம் இருக்க வேண்டுமென்றும் தாக்கீது கொடுக்கப்பட்டிருக்கிறது. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய தற்போதைய குறைந்தபட்ச பங்கு மூலதனம் 8.52 சதவீதம் என்ற நிலையில் உள்ளது. இது நபார்டு வங்கியினுடைய நிபந்தனையைப் பூர்த்தி செய்வதாக உள்ளது. இதையே இரண்டாகப் பிரிக்கும்பொழுது, நபார்டு வங்கியினுடைய நிபந்தனையை பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், மாவட்ட வங்கிகளைப் பிரிக்க வேண்டுமென்று கோர நினைக்கும் பிற உறுப்பினர்களுக்கும் சொல்வது என்னவென்றால், இன்றைய காலகட்டத்தில் மாவட்ட வங்கிகள் அந்தந்த மாவட்டங்களில் இயங்க வேண்டுமென்ற சூழ்நிலை இல்லை. ஏனென்றால், இன்றைக்குப் பார்த்தோமானால், துரிதமாக பணப் பரிவர்த்தனை செய்யக்கூடிய A.T.M., Core Banking Solution, Mobile Bank மூலம் கூட்டுறவு வங்கிகளை இதர வங்கிகளுடன் இணைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒருவர் எந்த இடத்திலுள்ள வங்கியிலும் தங்களுடைய பணத்தைப் போடலாம், எங்கேயும் எடுத்துக்கொள்ளலாம். அந்த அளவுக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கணினிமயம் துரிதமயமாக்கப்பட்டு, நம்முடைய தமிழகத்திலேதான் அனைத்து மாவட்ட வங்கிகளும் Core Banking Solution–க்கு வந்திருக்கின்றன. இந்தியாவே இதைப் பாராட்டிக்கொண்டிருக்கிறது.

இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாட்டினுடைய கூட்டுறவு வங்கிகள்தான் சிறப்பாக இயங்குகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்திய அளவில் 372 மாவட்ட வங்கிகள் இருக்கின்றன. இந்த 372 வங்கிகளில் திருச்சி மாவட்டத்தினுடைய வங்கிதான் முதல் இடத்தைப் பெற்று, மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



2014 பிப்ரவரி 3]

அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, ஒரு மாவட்டத்திற்கு ஒரு வங்கி வேண்டுமென்று சொன்னாலும்கூட, இந்தியாவை எடுத்துக்கொண்டால் 640 மாவட்டங்கள் இருக்கின்றன. 640 மாவட்டங்கள் இருக்கக்கூடிய இந்தியாவில் 372 வங்கிகள்தான் இயங்குகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற இயலாது. சட்ட ரீதியாக வங்கியினுடைய நிதிநிலை ஆதாரம் கெட்டுவிடும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் அதிகமாக உள்ள மாவட்டம் என்பதனால்தான் இந்தக் கோரிக்கையை எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கேள்வியாக இங்கே எழுப்பியிருக்கிறார். மத்திய ஆட்சி கட்டாயமாக மாற்றப்பட்டுவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசினுடைய பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அத்தகைய ஒரு சூழ்நிலையில், எதிர்காலத்தில், கும்பகோணம் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, இரண்டு மாவட்ட விவசாயிகளும் பயன்பெறும் வகையில், அரசின் அனைத்து சலுகைகளையும் அந்த மாவட்ட மக்கள் பெற வேண்டுமென்ற முறையில் இதனைப் பரிசீலித்து உதவிட தாங்கள் முன்வருவீர்களா? முன்வர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் மாறப் போவது உறுதி. அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. மத்திய சர்க்காருக்கும், இந்தக் கோரிக்கைக்கும் சம்பந்தம் இல்லை. கூட்டுறவு இயக்கங்கள் என்பது உலகம் சார்ந்தது. கூட்டுறவு வங்கி என்பது மக்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வங்கி. ஏழை விவசாயிகள், குறுநில விவசாயிகளின் நன்மைக்காக உருவாக்கப்பட்ட

[2014 பிப்ரவரி 3

வங்கி. இந்த வங்கியின் ஸ்திரத்தன்மை சிறப்பாக இருக்க வேண்டும். ஒரு மாவட்ட வங்கி ஸ்திரமாக இருந்தால்தான் அதனுடைய கிளைகள் சிறப்பாக இருக்கும். வாழ்வாதாரமும் சிறப்பாக இருக்கும். பங்கு மூலதனம் போடுகிற வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை வரவேண்டும். அந்தப் பணத்தை Deposit செய்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவும் வேண்டும், அதை எடுக்கவும் ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் இங்கே ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இது விவசாயிகள் அதிகமாக உள்ள பகுதி, இது குறித்து நீங்கள் ஒரு உறுதியான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லவிரும்புவது என்னவென்றால், அங்கே 34 கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் இருக்கின்றன. கும்பகோணம் மாவட்டக் கூட்டுறவு வங்கியின் 34 கிளைகள் அங்கே இருக்கின்றன. 268 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இதிலே நீங்கள் பார்த்தீர்களென்றால், நாகப்பட்டினம் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் 122 இருக்கின்றன. இதில் வாழ்திறனோடு இருப்பவை 106 மட்டும். வாழ்திறனற்றவை 16 சங்கங்கள்.

அதேமாதிரி, தஞ்சாவூர் சரகத்திலே இந்தக் கூட்டுறவு வங்கிகளின் அடக்கத்தில் 66 சங்கங்கள் இருக்கின்றன. அதிலே 47 சங்கங்கள் வாழ்திறனோடு உள்ளவை. வாழ்திறனற்றவை 19 சங்கங்கள். திருவாரூர் சரகத்தை எடுத்துக்கொண்டால் 80 சங்கங்கள் இருக்கின்றன. இந்த 80 சங்கங்களில் வாழ்திறன் உள்ளவை 51. 29 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாழ்திறனற்றவையாக இருக்கின்றன. நீங்கள் இதை கணக்கிலே எடுத்துப் பார்க்க வேண்டும். அந்த மாவட்டத்திற்கு என்று பிரிக்கும்போது வாழ்திறனற்ற சங்கங்கள் உள்ள தொடக்க கூட்டுறவுச் சங்கங்களினுடைய வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுவிடும். அதனால் அவற்றின் நிதி ஆதாரம் மற்றும் பங்கு மூலதனம் குறைந்துவிடும். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே 101 ஆண்டுக்காலமாக இயங்கிக்கொண்டு இருக்கின்ற பிரசித்திபெற்ற வங்கியாக கும்பகோணம் வங்கி உள்ளது. அந்த வங்கியினுடைய நிதி ஆதாரமும் குறைந்துவிடும். பங்கு மூலதனம் இல்லாமல் போய்விடும். இந்த இரண்டு வங்கிகளும் வாழ்திறனற்றவையாக ஆகிவிடும் என்பதனால்தான், இந்த வங்கிகளைப் பிரிக்க முடியாது



2014 பிப்ரவரி 3]

என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளின் புதிய பணியிடங்களுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பணி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதை மீண்டும் பரிசீலித்து எப்போது துவக்க இருக்கிறீர்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தறவான ஒரு கருத்தை அவையில் சொல்லியிருக்கிறார்கள். அதாவது பணியாளர் நியமனத்தை நாங்கள் நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்கிறார். இந்த அரசு நிறுத்தி வைக்கவில்லை. இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வமாக இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தக் கூட்டுறவு இயக்கம் வலுப்பெற வேண்டும், கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் ஸ்திரமாக இருக்கவேண்டும், சிறப்பாக இயங்கவேண்டும் என்ற நல்ல, உயர்ந்த சிந்தனையோடுதான் வணிக வங்கிகளுக்கு இணையாக இந்தச் சங்கங்களை, இந்த வங்கிகளை நவீனமயமாக்கி, கணினிமயமாக்கி, இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக தமிழகத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பணியாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக, ஏறத்தாழ 3,758 பணியிடங்களுக்கு ஏற்கெனவே தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்வு நடத்தப்பட்டது. இந்தப் பணி நியமனங்கள் அவசரகாலத்தில் ஏற்படுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்டதாக சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றவர்கள் இந்த நியமனத்தில் நிறைய குறைபாடுகள் இருப்பதாக, அதாவது 'நாங்கள் கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருக்கிறோம், எங்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படவில்லை; இரண்டாவது சாதி வாரி ஒதுக்கீடும்,

[2014 பிப்ரவரி 3

வயது வரம்பில் தளர்வும் வழங்கப்படவில்லை' என்றும் கூறியிருக்கிறார்கள். மேலும், கன்னியாகுமரியில் இருப்பவருக்கு இங்கே சென்னையில் எப்படி Posting போடலாம். சென்னையில் இருப்பவர்கள் அங்கே கன்னியாகுமரியில் போய் வேலை பார்க்கமுடியாது. பல குளறுபடிகள் இந்த நியமனத்தில் இருக்கின்றன என்று சொல்லி அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அதை எதிர்த்து இந்தப் பணியாளர் நியமனம் செய்தது சரியென்று அரசுத் தரப்பில் சொன்னோம். ஆனால், மாண்புமிகு நீதிபதி அவர்கள் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு ஓர் ஆண்டாகிவிட்டது. புதிய நிருவாகிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு வந்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி பாதிக்கப்பட்டிருப்பவர்கள் கொடுத்த கோரிக்கையும் நியாயமானதாக இருக்கிறது. அதில் வயதுவரம்பு தளர்த்தப்படவேண்டும். சில சட்ட திட்டங்களைத் திருத்தவேண்டும், மறுபடியும் புதிய பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதி விரைவிலே துறை ரீதியாக ஆய்வு செய்து, அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே தமிழகத்திலே உள்ள இந்தக் கூட்டுறவு இயக்கம், கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவுத் துறையானது முதன்மையான இடத்தை அடைவதோடு மட்டுமல்ல, தமிழக மக்களுக்கு எல்லா விதத்திலும் சிறப்பான சேவையை அளிக்கும் வகையில், வணிக வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு வங்கிகள் உறுதியாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பனிக்கன்குப்பம், தாளம்பட்டு, மாளிக்கம்பட்டு ஆகிய மூன்று கிராமங்களை மையமாகக் கொண்டு, பனிக்கன்குப்பம் கிராமத்தில் புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 3]

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டுமெனில், குறைந்தபட்சம் 4,950 ஏக்கர், அதாவது, 2 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பு இருக்க வேண்டும். இதுதான் சட்ட விதி. அதுமட்டுமல்ல, ஆண்டிற்கு 2 கோடி ரூபாய் அளவுக்கு வணிகம் செய்யக்கூடிய திறன் இருக்க வேண்டும். அத்திறனோடு 60 விழுக்காடு பலதரப்பட்ட கடன் கொடுக்க, கடன் வாங்கக்கூடிய அளவுக்கு அந்தப் பகுதி இருக்குமேயானால், அங்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதில் எந்தவிதக் கருத்து மாறுபாடும் இல்லை. இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையாக அதனை வைத்துக்கொள்ளலாம். அதற்கும் வாய்ப்பு வசதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதியில் வங்கி இயங்கவில்லை, யார் யாருக்குத் தேவை, எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது, எவ்வளவு விவசாயிகள் கடன் வாங்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று சரியான முறையில் எழுதிக் கொடுப்பாரேயானால், அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றுபட்ட மாவட்டமாக இருந்த கோவை மாவட்டம், தற்போது திருப்பூர் மாவட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கோவை மத்திய கூட்டுறவு வங்கி சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. அந்த வங்கியை இரண்டாகப் பிரித்து, புதியதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மாவட்டத்தில் அந்த வங்கியை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 3

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வங்கியைப் பிரிக்கின்றபோது, அந்த வங்கி எந்தெந்த வகைகளில் எல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே ஏற்கெனவே தெளிவாக, விரிவாக சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஏறத்தாழ 9 மாவட்டங்களில் இயங்கும் வங்கிகள் அருகிலுள்ள மாவட்டங்களையும் இணைத்துச் செயல்பட்டு வருகின்றன. உதாரணமாக, மதுரை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் வங்கி தேனி மாவட்டத்தை உள்ளடக்கியும், திருச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் வங்கி அருகிலுள்ள நான்கு மாவட்டங்களை உள்ளடக்கியும், கோவை மாவட்ட வங்கி, திருப்பூர் மாவட்டத்தை உள்ளடக்கியும், ஈரோடு மாவட்ட வங்கி திருப்பூர் மாவட்டத்தை உள்ளடக்கியும் செயல்பட்டு வருகின்றன. இதைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஒவ்வொரு வங்கியையும் பிரிக்கும்போது வங்கியின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடும்; பங்கு மூலதனம் குறையும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதுமட்டுமல்ல, ரிசர்வ் வங்கி, நபார்டு வங்கி போன்றவை, "வங்கிகளைப் பிரிப்பதைவிட கூட்டுறவுக் கடன் சங்கங்களை இணைக்க வேண்டும்; வங்கியைப் பலப்படுத்த வேண்டும், ஒவ்வொரு மாவட்ட வங்கியும் சிறப்பான முதலீடுகளோடு, ஸ்திரத்தன்மையோடு இருக்குமேயானால்தான் அந்த வங்கி எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்படுவதற்கான நம்பிக்கையைக் கொடுப்பதாக இருக்கும், மக்களுக்கு இந்த வங்கியில் பணம் போடலாம், தனியார் வங்கியைக் காட்டிலும் கூட்டுறவு வங்கியில் பணம் போடலாம்" என்ற எண்ணம் ஏற்படும் என்று தாக்கீது கொடுத்திருக்கின்றன. மேலும், பேராசிரியர் வைத்தியநாதன் கமிட்டி தனது அறிக்கையில், "இந்திய அளவுக்கு கூட்டுறவு வங்கிகளைப் பிரிக்கக் கூடாது; கடன் சங்கங்களைப் பிரிக்கக் கூடாது, கூடுமானவரை அதை ஒன்றுபடுத்த வேண்டும்" என்றுதான் கோடிட்டுக் காட்டியிருக்கிறது. இன்றைக்கு Mobile Bank வசதி வந்துவிட்டது; Core Banking Solution இருக்கிறது; A.T.M. வசதிகள் வந்துவிட்டன. ஆகவே, வங்கியின் வசதிகளைப் பெறுவதில் மக்கள் பாதிக்கப்படப் போவதில்லை; வங்கியைப் பிரித்தால்தான் இவை கிடைக்கும் என்ற நிலை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

முற்பகல் 11–05

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது நலிவுற்ற வங்கியாக இருந்து, மூடக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருந்தது. அந்த வங்கியை நிலை நிறுத்த வேண்டும், அதை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.12 கோடியை நிதியாக அளித்து சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியைக் காப்பாற்றினார்கள். ஆனால், இன்றைக்கு மத்திய நிதியமைச்சராக இருக்கக்கூடிய திரு. ப. சிதம்பரம் அவர்கள் பல்வேறு நிலையில் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்கின்றபொழுது, நானும் வங்கியை காப்பாற்றுவதற்கு நிதி ஒதுக்குகிறேன், நிதி ஒதுக்குகிறேன் என்று சொல்லிக் கொண்டே வருகிறார்கள். அவர் 38 ஆண்டுகளாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, சிவகங்கை மாவட்டத்தை ஏமாற்றிக்கொண்டிருக்கின்ற வேளையில், மீண்டும் நான் நிதி ஒதுக்கிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டே வருகிறார். சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு அவர் மத்திய அரசாங்கத்திலிருந்து ஏதாவது நிதி ஒதுக்கியிருக்கிறாரா அல்லது இன்னும் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றாரா? அப்படி அவர் நிதி ஒதுக்கியிருந்தால், அந்தக் கூட்டுறவு வங்கிக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

[2014 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே வேறெதையும் கேட்க முடியாது. (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே இந்த மாதிரியெல்லாம் நீங்கள் கேட்க முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், பத்திரிகைகளில் கேள்வி, பதில்களை நாள்தோறும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இந்த பதிலை அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், எல்லோரும் சொல்வார்கள், உங்களுக்கும் தெரியும். 'குதிரை ஒருவரை குப்புற கீழே தள்ளிவிட்டது மட்டுமல்லாமல், குழி பறித்த' கதை போலத்தான் இன்றைக்கு மத்திய நிதி அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், (குறுக்கீடு) ஒரு நிமிடம், இந்த கேள்விக்கு நான் சொல்கிற பதில் நியாயமானதாக இருக்கும். அதாவது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கேள்விக்குரிய பதிலைச் சொல்லுங்கள்.



2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மத்திய அரசின் நிதி அமைச்சர் அவர்கள் விவசாயக் கடன்களுக்கு நிதி கொடுக்கவில்லை, அவர் கொடுக்கவும் முடியுாது. அவர் அந்த மாவட்டத்திலே தனியார் வங்கிகளைத்தான் தொடர்ந்து திறந்து கொண்டிருக்கிறார். திறப்பு விழாவுடன் சரி, ஒரு வாரத்தில் அது மூடுவிழாவாகிவிடுகிறது என்று சொல்கிறார்கள். அது எனக்குத் தெரியாது. வங்கிகளைத் திறந்து கொண்டிருக்கிறார். ஆனால், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியைப் பொறுத்தளவிற்கு ரிசர்வ் வங்கியின் உரிமையைப் பெறுவதற்கு அவர் தடையாக இருந்தார். அந்த வங்கி சிறப்பாக இயங்குவதற்கு என் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், பணம் கொடுத்து உதவினார் என்பது நிதர்சனமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிக்கு வந்த பிறகு, இப்போதுதான் அந்த வங்கி ரிசர்வ் வங்கியின் உரிமையைப் பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல சகோதரர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக கூடுதலாகத் தகவல் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் கூட்டுறவு வங்கிகள்மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன் கொடுக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்தில் அந்தக் கடனுக்கான வட்டியை கட்டுகிறவர்களுக்கு, வட்டியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு திருப்பிச் செலுத்திக்கொண்டு வருகிறது. இந்தியாவிலே, எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ரிசர்வ் வங்கியானது, தமிழ்நாடு தலைமை வங்கிக்கு 7 சதவிகித வட்டிக்குக் கடன் கொடுக்கிறது. அதிலிருந்து படிப்படியாக மாவட்ட வங்கி, மாவட்ட வங்கியிலிருந்து தொடக்க வேளாண்மை வங்கிக்கும் கொடுக்கப்படுகிறது. ரிசர்வ் வங்கி சிறு, குறு விவசாயிகளின் பயிர்க் கடனுக்கான 4 சதவிகித வட்டியைத் தள்ளுபடி செய்து மானியமாகக் கொடுக்கிறது. மத்திய நிதியமைச்சராக இருக்கின்ற திரு. சிதம்பரம் அவர்கள் இந்த மானியத்தை வணிக வங்கிகளுக்கும் கொடுத்திருக்கிறார்கள். இதுவரையில் இல்லை, இப்போதுதான் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள்.

நான் கேட்கிறேன், மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் இருக்கிறீர்கள். எந்த சிறு, குறு விவசாயியாவது வணிக வங்கிக்குப்

போய் கடன் பெற முடியுமா? அவர்கள் விவசாயக் கடன் தருவார்களா? வணிக வங்கிகள் சிறு, குறு விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில்லை. வேண்டுமானால், அதிகமாகக் கொடுப்பதாகச் சொல்லலாம். ஆனால், உண்மையிலேயே ஏறத்தாழ 60 விழுக்காடு சிறு, குறு விசவாயிகள் கூட்டுறவு வங்கியின் மூலமாகத்தான் கடன் பெறுகிறார்கள். எனவே, கூட்டுறவு வங்கிகள்தான் அவர்களது நம்பிக்கைக்குரியவையாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, இந்தக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 4,500 கோடி ரூபாய் இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள், விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான மானியத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இப்படிக் கூடுதலாகக் கொடுத்து, விவசாயிகளுடைய வாழ்க்கையில் ஒளியேற்றிக் கொண்டிருப்பவர் என் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பால் வழங்குவதற்காக, உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக ஆயிரக்கணக்கான கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கின்றன; நிறுவனங்கள் இருக்கின்றன. அதேபோன்று நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கட்டடத் தொழிற்சங்கங்கள், வேளாண்மைத் தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றுமே ஒரு யூனிட், ஒரு அலகு என்கிற வகையிலே அமைந்திருக்கின்றன. ஒரு அலகு என்று அமைகின்றபோது, அதிலே பணியாளர்களை நியமனம் செய்கிறபோது, இட ஒதுக்கீட்டு முறையை நாம் பின்பற்றுவதற்கான வழியில்லாமல் இருக்கிறது. அதிலும் இப்போதெல்லாம் 200 சதவிகிதம் Roaster–ஐ நாம் வைத்திருப்பதனாலே, 200 சதவிகிதம் அளவிற்கு நாம் அதைப் பின்பற்றுவதனாலே, 10 பேருக்கு மேலே பணி நியமனம் செய்யப்படுகின்றபோதுதான் அந்த இட ஒதுக்கீட்டு முறையைப்





பின்பற்றுவதற்கான வழியே ஏற்படுகிறது. பல்லாயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களிலே இந்த நிலைமை இருக்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, மாநில அளவிலோ, மாவட்ட அளவிலோ மட்டும்தான் இந்த முறையைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பு இருக்கிறதே தவிர, தனி கூட்டுறவுச் சங்கங்களிலே இந்த வாய்ப்பு அமைவதற்கான சூழல் பெருமளவிற்கு இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, இதைக் கருத்திலே கொண்டு, ஒரு புதிய அணுகுமுறையை, ஒரு புதிய கொள்கைத் திட்டத்தை இதற்காக உருவாக்கி, ஒவ்வொரு சங்கத்திலும் வாய்ப்பு வருகின்றபோது அல்லது அப்படியே அதை நிலுவையிலே வைத்திருந்து, பின்னர் வருகின்றபோதாவது, அந்த வாய்ப்பை உருவாக்குவதற்கு ஏதாவது வழி செய்யமுடியுமா? மிகச் சிறப்பாக, ஒரு மானியக் கோரிக்கை விவாதத்தைப்போல கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, இதற்கு ஏதாவது வழி கிடைக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மூத்த உறுப்பினர். அற்புதமான கருத்துகளை இந்தச் சபைக்கு வழங்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார். இப்போது கூட்டுறவுத் துறையின் மூலமாக, பொது விநியோகத் திட்டத்திற்கான பணியாளர்கள், அதாவது, விற்பனையாளர், கட்டுநர் பணியிடங்களில்கூட, மாவட்ட அளவில் இந்த ரோஸ்டர் முறையில்தான் நியமனம் செய்திருக்கிறோம். அந்தந்த விகிதாச்சாரப் பிரகாரம்தான், இந்தப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள், தாக்கீது கொடுத்து, சென்ற ஆண்டு ஏறத்தாழ 6,750 பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போதுகூட 2,358 பணியாளர்களை இந்த அடிப்படையில் எடுப்பதற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாவட்ட அளவிற்குத்தான் இது. சாதி வாரியாக, இன வாரியாக, அதாவது, மாற்றுத் திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர், இஸ்லாமியர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கணவனை இழந்தவர்கள், இப்படி பலதரப்பட்டவர்களுக்கு வாய்ப்பு இந்தக் கூட்டுறவுத்

[2014 பிப்ரவரி 3

துறையின் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது நீதிமன்றத்திலேகூட அதைத்தான் பின்பற்றச் சொல்லியிருக்கிறார்கள். S.R.B.–ன்மூலமாக மாவட்ட அளவிலே இருக்கிற சிறு வங்கிகள்—அதாவது, தொடக்க நிலையிலே இருக்கிற வங்கிகள்—பணியாளர்களை மாவட்ட அளவில் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு நீதிபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை அரசின் மூலமாக, எங்களது கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மூலமாக ஆராய்ந்து, முடிவெடுத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் மூலமாக அது நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**38—**

## வேலைவாய்ப்பு அலுவலகம்

***34238—திருமதி எஸ். விஜயதரணி:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் தனியாக ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் அல்லது கிளை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதியினை உள்ளடக்கிய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பணிநாடுனர்களும் பயன்பெறும் வகையில், மாவட்டத் தலைமையிடமான நாகர்கோவிலில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும், தற்போது வேலைவாய்ப்புத் துறைக்கென கணினி இணையதளம் ஏற்படுத்தப்பட்டு, கல்வித் தகுதிகளை ஆன்லைனிலேயே பதிவு செய்தல், கூடுதல் பதிவு செய்தல் மற்றும் பதிவுகளைப் புதுப்பித்தல் போன்றவற்றை பணிநாடுனர்களே செய்துகொள்வதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால், இவற்றுக்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை. எனவே, விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகமோ அல்லது நாகர்கோவிலில் உள்ள கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் கிளை அலுவலகமோ அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

*முற்பகல் 11–15*

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில், 4 சட்டமன்றத் தொகுதிகளாகிய குளச்சல், பத்மநாபபுரம், கிள்ளியூர், விளவங்கோடு ஆகியவை மார்த்தாண்டத்தை மையமாகக்கொண்டு இயங்குகின்றன.

அலுவலக சம்பந்தமான விசாரணைகள், பதிவு புதுப்பித்தல், வேலைவாய்ப்புத் தன்மை, வேலைவாய்ப்பு விளம்பரப் பதாகைகள், வேலை தேடுவோர் எண்ணிக்கை 75% பேர் மார்த்தாண்டத்தை மையமாக வைத்துள்ளனர். நாகர்கோவில் வேலைவாய்ப்பகத்திற்குச் செல்ல வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் எனது தொகுதிக்குட்பட்ட கடையாலுமூடு அரண்மனை, பாகோடு, இடைக்கோடு, பலுகல் பேரூராட்சிகள் மற்றும் விளவங்கோடு தாலுகாவிற்குட்பட்ட கொல்லங்கோடு, ஏழுதேசம் பேரூராட்சிகளும், மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளாகிய மஞ்சாலுமூடு, முழுக்கோடு, வெள்ளாங்கோடு, மருதங்கோடு, மாங்கோடு, புலியூர்சாலை, தேவிகோடு, வன்னியூர், மலையடி, விளவங்கோடு மற்றும் கிராத்தூர், தூத்தூர், அடைக்காக்குழி, குழித்துறை நகராட்சி உண்ணாமலைக்கடை, நல்லூர் பேரூராட்சிகளும், கருங்கல், வாள்வச்சகோஷ்டம், முளகுமூடு அகிய பேரூராட்சிளும் மார்த்தாண்டத்தை மையமாக வைத்துச் செயல்படுவதால், மார்த்தண்டத்தில் வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் மிக முக்கியமானதும், அவசரமானதும், அவசியமானதும்கூட. தமிழக

அரசின் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் அவர்கள் எங்கள் சொந்த மாவட்டத்தைச் சார்ந்தவர். எனவே, அவர் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நன்கு அறிந்திருக்கிறார். இவற்றையெல்லாம் தெரிந்தவர் என்பதால் வெறும் ஆன்லைனில் நீங்கள் பதிவு செய்து கொள்ளுங்கள் என்று கூறுவது சரியானதாக இருக்காது.

நேரில் சென்று தகவல்களைப் பெற வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். ஆன்லைனில் பதிவு செய்வதை சென்னையில் மட்டும் வைத்துக்கொண்டாலே தமிழ்நாடு முழுவதும் பதிவு செய்து கொள்ளலாம், மாவட்ட அலுவலகம்கூட தேவையில்லை. ஆகையால், அவ்வாறில்லாமல், கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக மக்கள் மார்த்தாண்டத்தை மையமாகக் கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே கன்னியாகுமரி மாவட்டம் 98.3% படித்தவர்களைக் கொண்ட முதல் மாவட்டமாக இருக்கிறது. கல்குளம், விளவங்கோடு தாலுகாவில் படித்த மக்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இதனைக் கருத்தில்கொண்டு, மார்த்தாண்டத்தில் வேலைவாய்ப்பு பதிவு அலுவலகத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரமான நாகர்கோவிலில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சிறப்பாக இயங்கிவருகிறது. விளவங்கோட்டினை உள்ளடக்கிய மாவட்ட தொழில் நிறுவனங்கள் அனைத்தும் மனித வள தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை அணுகி, பட்டியல்களைப் பெற்று பூர்த்தி செய்து கொள்ளலாம். தமிழகத்திலே ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும் பிரதி மாதம் 2—வது வெள்ளிக்கிழமையன்று தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை அலுவலக வளாகத்திலேயே நடத்தி வருகின்றன. தற்போது வேலைவாய்ப்புத் துறைக்கென கணினி இணையதளம் ஏற்படுத்தப்பட்டு, கல்வித் தகுதிகளை ஆன்லைனிலேயே பதிவு செய்ய, கூடுதல் பதிவு செய்ய மற்றும் பதிவுகளைப் புதுப்பிக்கச் செய்யும் பணிநாடுனர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால் இதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.





மேலும், போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு தேர்ச்சி பெற ஏதுவாக நாகர்கோவிலில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தன்னார்வப் பயிலமைப்பு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் மத்திய மற்றும் மாநில அரசால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு, பணிநாடுனர்களுக்கு அளிக்கப்படுகின்றன. இவ்வசதிமூலம் அதிக அளவிலான பணிநாடுனர்கள் பயன்பெற்று வருகின்ற காரணத்தினால், கன்னியாகுமரி மாவட்டத்தில், மார்த்தாண்டம் பகுதியில் அரசால் புதிதாக வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 2011 முதல் எத்தனைப் பணிநாடுனர்கள் தேர்வுகளுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்? எத்தனை பேர் தேர்வு பெற்று பணியமர்த்தப்பட்டிருக்கின்றனர் என்ற தகவல்களைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 660 பேர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் பணி வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சர், உலகத் தமிழர்களின் உயிர்த் துடிப்பு, இன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டை; நாளை செங்கோட்டை (மேசையைத் தட்டும் ஒலி) செல்லவிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு

வணங்குகிறேன். தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 40 ஆண்டுகால பழமையான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் புதிதாகக் கட்டுவதற்கு முதற்கட்டமாக 10 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நிதி அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் கடந்த நிதிநிலை அறிக்கையிலே 7 புதிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, வருகின்ற நிதியாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**39—**

## உதவி ஆணையர் அலுவலகம்

***19177—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதியில் உணவுப்பொருள் வழங்கல் துறையின் உதவி ஆணையாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதியில் உதவி ஆணையாளர் அலுவலகம் அமைக்கத் தற்பொழுது சாத்தியக் கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தொடர்புடைய பகுதிகளுக்குட்பட்ட அங்காடிகளை இணைத்து புதிய உதவி ஆணையர் அலுவலகம் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து, அதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப உரிய நேரத்தில் உதவி ஆணையர் அலுவலகம் அமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னகமே! திராவிடமே! செந்தமிழே! சீரும், சிறப்பும் பெற்ற கன்னித் தமிழ்நாட்டினுடைய முதல்வரே! எண்ணிச் செயலாற்றும் நுண்ணறிவே! தருமம் நித்தம் தழைத்திடும் தாயே! நல்ல திட்டங்கள் பல தந்த பைந்தமிழே! இமை கண்ணைக் காப்பதுபோல், கடமை காக்கும் அரசின் தலைமை தருவார்! இதய தெய்வம் அம்மா வருவார், தமிழ்நாட்டைப்போல் பாரதத்தைப் பெறுவார் (மேசையைத் தட்டும் ஒலி) பாரத மாதாவிற்கு ஜெ! பாரத மாதா இனி அம்மா ஜெ! (மேசையைத் தட்டும் ஒலி) பாரத மாதாவிற்கு ஜெ! பாரத மாதா இனி அம்மா ஜெ! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே அதிக வாக்களார்களைக்கொண்ட வேளச்சேரி தொகுதியில், வேளச்சேரியில் உள்ள 45,117 குடும்ப அட்டைகளும் சைதாப்பேட்டை மண்டலத்தில் உள்ளன. தரமணி, அடையாறு, திருவான்மியூர் பகுதிகளிலுள்ள 65,000 குடும்ப அட்டைகள் மயிலாப்பூர் மண்டலத்திலே இணைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு மண்டலங்களிலுள்ள, வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட குடும்ப அட்டைகளைப் பிரித்து வேளச்சேரி தொகுதிக்கு என்று தனியாக

[2014 பிப்ரவரி 3

*ஓர் உதவி ஆணையர் அலுவலகம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அமைத்துத் தர முன்வந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**40—**

### பகுதிநேர கால்நடைக் கிளை நிலையம்

***7356—திரு. சு. பவுன்ராஜ்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், எடுத்துக்கட்டி ஊராட்சியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*செம்பனார்கோவில் ஒன்றியம், எடுத்துக்கட்டி ஊராட்சிப் பகுதியில் பகுதிநேர கால்நடைக் கிளை மருத்துவமனையை அமைத்துத் தருமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். அரசு விதிகளின்படி அங்கே கால்நடைகளின் எண்ணிக்கை போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தினால், எடுத்துக்கட்டி ஊராட்சிக்கு அருகில் உள்ள திருகாளச்சேரி ஊராட்சியையும் இணைத்து அங்கே ஓர் பகுதிநேர கால்நடைக் கிளை மருத்துவமனை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப்பெற்று அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*



2014 பிப்ரவரி 3]

**திரு. சு. பவுன்ராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் தந்து மக்களைப் பாதுகாப்பதுபோல், கால்நடைகளுக்கும் பல்நோக்கு மருத்துவமனையைத் தந்து, ஸ்கேன் வசதி, எக்ஸ்-ரே வசதி உட்பட, அதிநவீன வசதிகளைக்கொடுத்து, கால்நடைகளைப் பாதுகாக்கும் திட்டம் தந்தவர் மாண்புமிகு அம்மா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மனிதர்களுக்கு மட்டும் வாழ்வு தந்தவரல்ல. வாயில்லா ஜீவன்களையும் வாழ வைத்தவர் எங்களது தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். எனது தொகுதியில், பகுதிநேர கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**41—**

### பட்டா

***21352—திரு. ஏ.கே. போஸ்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை மாநகராட்சி, வடக்குத் தொகுதி, 5—வது வார்டிலுள்ள குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டா வழங்கக்கோரும் இடம் மதுரை வடக்கு வட்டம், சாத்தமங்கலம் உள்வட்டம், பீ.பீ.குளம், டவுன் சர்வே எண் 1, வார்டு 5, பிளாக் 6, பரப்பு 9 எக்டேர் 4,899 சதுர மீட்டர் உள்ள புலமாகும். இது கிராமக் கணக்கில் பீ.பீ.குளம் கண்மாய் எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இப்புலம் பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள கண்மாய்ப் புறம்புகல் ஆகும்.*

இப்புலத்தில் தற்போது சுமார் 300 வீடுகளும், 4 மேல்நிலைத் தொட்டிகளும், 4 கோயில்களும், 2 பள்ளிவாசல்களும், மதுரை மாநகராட்சியினரால் பராமரிக்கப்படும் 3 கழிப்பறைகளும் உள்ளன. இப்புலத்தின் கண்மாய்க் கரை வழியாக பீ.பீ. குளம் மெயின்ரோடு செல்கிறது. இச்சாலையின் இருமருங்கிலும் சுமார் 96 கடைகளும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டடப்பட்டுள்ளன. இப்புலம் பீ.பீ. குளம் கண்மாய் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாலும், மதுரை மாநராட்சி எல்லைக்குள் இருப்பதாலும், அதிக விலை மதிப்பு உள்ள இடமாக இருப்பதாலும், இப்புலத்தில் இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்களின் இதய தெய்வம், ஏழு கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட மதுரை மாநகராட்சி வார்டு 5–ல் உள்ள பாக்கியநாதபுரம், குலமங்கலம் மெயின் ரோடு, முல்லை நகர், ராஜீவ் காந்தி நகர், காவாங்கரை, ஜவஹர்புரம், மருதங்குளம் ஆகிய பகுதிகளில் ஏறத்தாழ சுமார் 1,500 குடும்பத்தினர் கடந்த 35 ஆண்டுகளாக வசிக்கிறார்கள். ஆகவே, இப்பகுதி மக்களுக்கு உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆட்சேபணை உள்ள புறம்போக்குகள், நீர்நிலைப் புறம்போக்குகளில் உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவின்





அடிப்படையில் பட்டா வழங்க இயலாது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 35 ஆண்டுகளாக அந்தப் பகுதி மக்கள் பட்டா இல்லாமல் இருக்கிறார்கள் என்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். எனவே, அரசு சட்ட விதிகளுக்குட்பட்டு உச்ச நீதிமன்ற ஆணையையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுடுகாட்டுக்குப் பக்கத்தில் உள்ள பாக்கியநாதபுரத்தில் பிணவாடையை சகித்துக்கொண்டு கடந்த 35 ஆண்டுகளாக அந்தப் பகுதி மக்கள் குடியிருந்து வருகிறார்கள். எப்பொழுதோ வந்த வெள்ளத்தின்போது அங்கு நீர்ப்பிடிப்பு இருந்தது உண்மைதான். ஆனால், இன்னும் நீர்ப்பிடிப்பு, நீர்ப்பிடிப்பு என்று அதிகாரிகள் காரணம் சொல்லி காலதாமதம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய வேலைப் பளுவைக் குறைப்பதற்காக இப்படி ஒரு முடிவை எடுத்து விடுகிறார்கள். சிறிய மேடு இருந்தால் அதை forest என்கிறார்கள். இதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்திலே ஒரு கமிட்டி அமைத்து, அதில் எவை எவை புறம்போக்கு நிலங்கள், எவை எவை நீர்ப்பிடிப்பு நிலங்கள் என்பதையெல்லாம் அறிந்து Supreme Court–ல் அந்த அறிக்கையைத் தாக்கல் செய்து வீடில்லாதவர்களுக்குப் பட்டா வழங்குமாறு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல இது வேலைப் பளுவைக் குறைப்பதற்காக சொல்லப்படுகிற காரணம் கிடையாது. பட்டா வழங்குவது சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவு இருக்கிறது. இருப்பினும் ஏழை மக்களுடைய நலனைக் காக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு,

[2014 பிப்ரவரி 3

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாக கவனத்துடன் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசு பட்டாக்களை வழங்கி வருகிறது. அந்தப் பட்டாக்களை வழங்குவதற்காக ஒருமுறை பட்டா வழங்குகிற சிறப்புத் திட்டத்திற்கான அரசாணை 684 கடந்த சில மாதங்களுக்கு முன்பாக காலாவதியாகிவிட்டது. அரசு அதை நீட்டித்துப் பட்டா வழங்குவதற்கு வழி செய்யவும், அதை அடிக்கடி நீட்டிப்பதற்குப் பதிலாக ஒரு நிரந்தர அரசாணையாக மாற்றித் தந்து, நிரந்தரமாகப் பட்டா வழங்குவதற்கும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. நிச்சயமாக அதற்குண்டான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

முற்பகல் 11–30

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியில் இருக்கிற மாநகராட்சி வார்டு எண் 27–ல் உள்ள ஜபதலாபுரம் என்ற கிராமத்தில் நானும் வசித்துவந்த காரணத்தினால், இந்த கோரிக்கையை இங்கே வைக்கின்றேன். சுமார் 62 ஆண்டுகள் பட்டா இல்லாமல் அந்த மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, நமது தமிழக அரசின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, முதலாம் ஆண்டு ஒரு இலட்சம் பட்டாக்கள் வழங்கவேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து முதலாம் ஆண்டில் 1,21,804 பயனாளிகளுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இரண்டாம் ஆண்டிலும் ஒரு இலட்சம் பட்டாக்கள் வழங்கவேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,31,299 பயனாளிகளுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அதேபோல, மூன்றாம் ஆண்டில் இரண்டு இலட்சம் பட்டாக்கள் வழங்கவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 15–1–2014 வரை 1,99,382 பயனாளிகளுக்குத் தமிழ்நாடு முழுவதும் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து அரசு சட்ட விதிகளின்படி ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மிலிடெரி காலனி பகுதியில் ஏற்கெனவே ஒரு பகுதி மக்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டு, மீதியிருக்கக்கூடிய மக்களுக்குப் பட்டா கொடுக்காமல் நீண்ட நாட்களாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே கொடுக்கப் பட்டதைப்போல அந்த மக்களுக்கும் பட்டா கொடுக்க அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து அரசு விதிகளின்படி ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**42—**

## ஹெலிகாப்டர் சேவை

***28796—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து தேக்கடி, கொடைக்கானல், திருச்செந்தூர் ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு பயணம் செய்ய ஹெலிகாப்டர் சேவை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து கொடைக்கானலுக்கு ஹெலிகாப்டர் சேவை செயல்படுத்த M/s. Pawan Hanshelicopters Limited, புது தில்லி நிறுவனத்தின்மூலம் 2012 மார்ச் மாதம் 25 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையில் மதுரையிலிருந்து கொடைக்கானல் உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களுக்கு ஹெலிகாப்டர் சுற்றுலா சேவை தற்போது உடனடியாக இயக்க சாத்தியக் கூறுகள் இல்லையென்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.





மேலும் மதுரையிலிருந்து தேக்கடி மற்றும் மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு ஹெலிகாப்டர் சேவை செயல்படுத்த இத்துறையின்மூலம் தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தோடு தமிழகத்தில் நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற 37 துறைகளும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் சுற்றுலாத் துறைக்குத் தனிக் கவனம் செலுத்தி ஒரு சிறப்பான திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி, கிழக்குக் கடற்கரைச் சாலை சுற்றுலாச் சுற்று மற்றும் தென்னகச் சுற்றுலாச் சுற்று ஆகிய திட்டங்களின்கீழ் சுற்றுலாத் தலங்களை அழகுபடுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறப்பான திட்டத்தைத் தொகுத்து 500 கோடி ரூபாயையும் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியதோடு நின்றிருந்தால் மற்ற முதல்வர்களைப் போல் நம் அம்மா அவர்களும் முதலமைச்சராகவே இருந்திருப்பார்கள். ஆனால், நமது முதல்வர் அம்மா அவர்கள் இதற்கும் மேலாக உயர்ந்த சிந்தனையில், முற்போக்கான சிந்தனையில் தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றி எங்கு தெரியப்படுத்த வேண்டுமோ அங்கு தெரிவிப்பதற்காக, லண்டனில் நடைபெற்ற சர்வதேச பயணச் சந்தை (World Travel Mart) மற்றும் ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலாச் சந்தை (International Tourism Fair), ஆகியவற்றில் தமிழகத்தின் சார்பாக சுற்றுலாத் துறை கலந்துகொள்ளச் செய்து, தமிழ்நாடு பற்றிய தகவல்கள் அடங்கிய pen drive என்று நாம் சொல்லக்கூடிய அந்தக் குறும்பதிவின் மூலமாக பல நாடுகள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் தெரியப்படுத்தி தமிழகத்திற்கு சிறப்பு செய்தவர் ஒப்பற்ற முதல்வர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிச் செய்ததன் காரணமாகத்தான் இன்று முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக தமிழக முதல்வர் அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[2014 பிப்ரவரி 3

*முற்பகல் 11–35*

*என் சட்டமன்றத் தொகுதி ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி என்பது இங்கு எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினராக 10 ஆண்டுக் காலம் இருந்திருக்கிறார்கள். சிறப்பான திட்டங்களைக் கொடுத்து ஆண்டிப்பட்டி தொகுதியை ஒரு சிறப்பான தொகுதியாக மாற்றி இருக்கிறார்கள். அந்தத் தொகுதியில் கிராமப்புறங்கள் அதிகமாக இருப்பதால் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளரிடம் போய் நான் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தேன். அப்பொழுது நான் கேட்டேன், ஏன் சார், எங்கள் அம்மா ஆட்சி இந்த தடவை எப்படி இருக்கிறது என்று கேட்டேன். அவர் சொன்ன வார்த்தை, உண்மையிலேயே எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவர் சொன்ன வார்த்தை, “நான் தமிழக முதல்வர் அம்மா அவர்களிடம் 3 முறையும் வேலை பார்த்திருக்கிறேன், ஆனால், இந்தத் தடவை நான் வேலை பார்க்கும்போது அவர்களிடம் நான் கண்ட புதுமை என்னவென்று சொன்னால், சென்ற முறை முதலமைச்சராக இருந்தபோது நாங்கள் சொல்வதை அம்மா அவர்கள் கேட்டுக்கொள்வார்கள், ஆனால், இந்த முறை, மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்தவுடனேயே, அம்மாவே ஒவ்வொரு துறையிலும் என்னென்ன திட்டங்கள் தீட்ட வேண்டுமென்ற செய்தியை எங்களுக்குச் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)* Amma is not only Chief Minister but also Chief Secretary”*என்று சொன்னவர் அந்தத் துறைச் செயலர். அனைத்துத் துறைகளினுடைய நுணுக்கத்தைப் புரிந்து மக்களுக்கு வேண்டிய திட்டங்களைச் செய்யக் கூடிய ஒப்பற்ற முதல்வர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா. ‘தாய் திட்டம்’ என்பது சிறப்பான திட்டம். குக்கிராமத்திற்கு வேண்டிய அடிப்படை வசதிகள் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று அம்மா சிந்தனையில் உருவான திட்டம். இப்படி ஒவ்வொரு துறையிலும் சிறப்பான திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசின் பல்வேறு திட்டங்களின் பயன்களை அனுபவிக்காத நபர்கள்கூட அம்மாவினுடைய திறமையைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.*

*ஒரு கோடியே 86 இலட்சம் குடும்பங்களுக்கு இலவசமாக 20 கிலோ அரிசி வழங்கி சாதனைப் படைத்த ஒப்பற்ற முதல்வர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் பல்லாயிரம் ரூபாய்க்கு மேலே இலவசத் திட்டங்களை வழங்கி சாதனை படைத்த முதல்வர் தமிழக முதல்வர் அம்மா அவர்கள். ஆகவே, தமிழக மக்கள் அம்மாவினுடைய செயல்பாட்டைப் பாராட்டுகிறார்கள், வணங்குகிறார்கள். நிச்சயமாக நடக்க இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெற்று அம்மா அவர்கள் நல்ல நிலைக்கு வருகின்றபோது ஹெலிகாப்டர் சேவையை மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கும், மதுரையிலிருந்து தேக்கடிக்கும், மதுரையிலிருந்து கொடைக்கானலுக்கும் மற்றும் மதுரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கும் நிச்சயமாக அம்மா அவர்கள் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்தச் செய்தியைக் கூறி, வணங்கி அமர்கிறேன். வணக்கம்.*



2014 பிப்ரவரி 3]

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**43—**

### தரம் உயர்த்துதல்

***4127—முனைவர் கோவி. செழியன்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவிடைமருதூர் தொகுதி, கூகூர், நல்லாடை அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், கூகூர் ஊராட்சி, நல்லாடை கிராமத்தில் இயங்கி வருகின்ற அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை அப்பள்ளி இருக்கும் பகுதியில் உள்ள ஆதி திராவிட மக்களின் தேவையை அறிந்து நிதி*

நிலைமையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உத்தரவினைப் பெற்று மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியத் தலைவர் தெய்வத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடம் இருக்கின்ற பசும்பொன்னுக்கு வருகின்ற பிப்ரவரி 9 ஆம் நாள் அன்று தான் சென்று அங்கு இருக்கின்ற விக்ரகத்திற்குத் தங்கக் கவசம் அணிவிக்கவிருப்பதாக அறிவிப்பு செய்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவர்கள் விடுதியில் தங்கிப் படித்து வருகிறார்கள். அந்த விடுதியின் பெயர் காந்தி ஹாஸ்டல். இந்த விடுதியினைக் கட்டி கிட்டத்தட்ட 50, 60 வருட காலம் ஆகிவிட்டது. மிகவும் பழமையாகவும், சீர்குலைந்தும் இருக்கின்றது. அதற்கு புதுக் கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு நிறைய தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். எனவே, அவ்விடத்தில் புதிய கட்டடம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோருகின்ற, உசிலம்பட்டியில் இயங்குகின்ற அந்த விடுதிக்கு வரும் நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு





எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

### பேருந்து வசதி

***25025—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரிலிருந்து திருவண்ணாமலை, வேலூர் வழியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் மற்றும் திருப்பதி வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, அடுத்து நடக்க இருக்கும் தமிழ்நாடு–ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களின் ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல் கழகத்தையும், ஏழையெளிய மக்களையும் கட்டிக் காத்து இன்றைய தமிழகத்தின்

[2014 பிப்ரவரி 3

நம்பிக்கை நட்சத்திரமாய், நாளைய பாரதத்தின் விடிவெள்ளியாய் விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கிட துறைகள் தோறும் திட்டங்கள் தீட்டி, நலிந்துகிடந்த போக்குவரத்துத் துறையினைத் தலைநிமிரச் செய்து தொலைநோக்குப் பார்வையோடு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில்தான் எங்களது துறையூர் தொகுதிக்கு கிளை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்ட ரூ.98 இலட்சத்திற்கும், உப்பிலியாபுரத்தில் கூடுதல் பணிமனை அமைக்க ரூ.1 கோடியே 25 இலட்சத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்து, புதிய வழித்தடங்களில் 6 நெடுந்தூரப் பேருந்து வசதிகளை செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையூரிலிருந்து திருவண்ணாமலை, வேலூருக்குப் புதிய பேருந்து வசதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காணொளிக் காட்சிமூலம் செய்து கொடுத்திருக்கிறார்கள். வேலூரிலிருந்து திருப்பதிக்கு சுமார் 80 கி.மீ. தூரம்தான் உள்ளது. எனவே, மரியாதைக்குரிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, துறையூரிலிருந்து திருப்பதிக்கு பேருந்து நீட்டிப்பு வசதி செய்து தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர்–திருப்பதி வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையேயான Interstate agreement சம்பந்தப்பட்டது. இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தையின்போது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று அந்த பேருந்து வழித்தடத்திற்கு உண்டான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு பேருந்து இயக்குவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற காலங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**45—**

### மான் பூங்கா

***7835—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டான் பகுதியிலுள்ள மான் பூங்காவில் மான்களுக்கு குடிநீர் வசதி செய்யவும், சுற்றுச் சுவர் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களால் நான், மக்களுக்காக நான் என்ற உயரிய கோட்பாடோடு எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு, நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும், வனவிலங்குகளுக்கும், வனத் துறைக்கும் நல்ல பல திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக

[2014 பிப்ரவரி 3

முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2–5–2013 அன்று சட்டமன்றப் பேரவையிலே 110 வது விதியின்கீழ் திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் புள்ளிமான்கள் சரணாலயம் ஏற்படுத்தப்படும் எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து 1972 ஆம் வருட வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், பிரிவு 26அ(1)(ஆ)-ன்படி திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், கங்கைகொண்டான் மற்றும் அலங்காரபேரி கிராமங்களை உள்ளடக்கிய கங்கைகொண்டான் பகுதியில் 288.40 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட பகுதியை புள்ளிமான் சரணாலயமாக அரசாணை எண் 150, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 1–10–2013–ன்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த புள்ளி மான்கள் சரணாலயத்தில் தற்போது சுமார் 167 மான்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மேற்படி மான் பூங்காவில் தற்போது தண்ணீர் தட்டுப்பாடு ஏதும் ஏற்படாதவண்ணம் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

2013–2014 ஆம் நிதியாண்டில் 13–வது நிதிக் குழுவின் திட்டத்தின்கீழ் ரூ.0.25 இலட்சம் செலவிலும் மற்றும் திட்டம் சாரா நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ.0.90 இலட்சம் செலவிலும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பைப் லைன்கள் அமைத்து நிரந்தரக் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர, புள்ளிமான் சரணாலயத்தில் ஒரு கசிவுநீர்க் குட்டையினைத் திட்டம் சாரா தலைப்பின்கீழ் ரூ.0.10 இலட்சம் செலவில் தூர் வாரி ஆழப்படுத்தி, மழைக் காலங்களில் பெறப்படும் மழைநீரைத் தேக்கி மான்களுக்குக் குடிநீராகப் பயன்படுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், 13–வது நிதிக் குழுவின் திட்டத்தின்கீழ் ரூ.3.99 இலட்சம் செலவில் ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்சார மோட்டார்மூலம் நீரினைப் பெற்று மான்கள் அருந்துவதற்கு ஏதுவாக குடிநீர் ஆதார அமைப்புகள் உருவாக்குவதற்கான பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. கங்கைகொண்டான் புள்ளி மான்கள் சரணாலயம் திருநெல்வேலி–மதுரை தேசிய நெடுஞ்சாலையின்



2014 பிப்ரவரி 3]

முகப்பிலே 1,500 மீட்டர் நீளமுள்ள சுற்றுச் சுவர் பகுதியில் பழுதடைந்த நிலையிலுள்ள 30 மீட்டர் நீளம் திட்டம் சாரா தலைப்பின்கீழ் ரூ.0.95 இலட்சம் செலவில் பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. எஞ்சிய 3 பகுதிகளைச் சுற்றிலும் மின் கம்பி வேலி ஏற்கெனவே உள்ளது. எனவே, தற்போது கங்கைகொண்டான் புள்ளி மான் சரணாலயத்தில் மான்களுக்கு குடிநீர் வசதி குறைவு ஏதுமின்றிக் கிடைத்திடவும், சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டும் கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை, மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** அதர்மம் அழிந்திட, அவதரித்த அன்னைத் திருமகளே, அண்டியோருக்கு ஆல்போல் நிழல் கொடுக்கும் அன்பு சரணாலயமே, மூவேந்தர் நாடாண்ட முத்தமிழர் சேவைக்கு முகவரியாய் அவதரித்த முழுமதியே, பொதுவுடைமை இயக்கங்களும் போற்றி வந்து புகழ் பாடும் புரட்சியே, பூமிக்கு வந்த பொது வாழ்வுப் புனிதமே, நாட்டைக் கெடுக்கும் நயவஞ்சகப் போக்குக்குச் சாட்டையடி கொடுக்கும் சாணக்கியமே, (மேசையைத் தட்டும் ஒலி) முப்புறமும் பகை சூழ்ந்த பாரதத்தை முன்னேற்றி வல்லரசாய் வடிவமைக்க வரமாகக் கிடைத்திட்ட வல்லமையே, (மேசையைத் தட்டும் ஒலி) காவியும் வேண்டாம், கதரும் வேண்டாம், கருணா போன்றவரும் வேண்டாம், உளுந்தூர்பேட்டை உதாரும் வேண்டாம், (மேசையைத் தட்டும் ஒலி) மதர்தான் வேண்டும் என்று அம்மா, மதர்தான் வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) மதச்சார்பற்ற மக்களெல்லாம் கூடி மகுடம் சூட்டக் காத்திருக்கும் மாதரசே, தாய் நாட்டை வழி நடத்த தமிழருக்கோர் வாய்ப்பு, விழித்திரு தமிழினமே விடை இருக்கு தாயிடமே, (மேசையைத் தட்டும் ஒலி) விழித்திரு தமிழினமே விடை இருக்கு தாயிடமே என்னும் வேட்கையுடனும், விழிப்புணர்வோடும், தரணியே வரவேற்க காத்திருக்கும் எங்கள் தமிழ் பிரதமராம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2014 பிப்ரவரி 3

*முற்பகல் 11–50*

எனது வினா இந்த அவைக்கு வரும் முன்பே, அந்தப் பணிகளை நடத்திட ஆணையிட்ட அம்மா அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். எனது தொகுதி மக்களின் கோரிக்கைகள் பலவற்றையும் நிறைவேற்றித் தந்த அம்மா அவர்களுக்கு நன்றிகூற இந்த நேரத்தில் நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். உதாரணத்திற்கு ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில், 50 கோடி ரூபாயில் ஒரு மேம்பாலம் கட்டித் தர ஆணையிட்டிருக்கிறார்கள். ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும் விதமாக ராதாபுரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க 5.6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, எனது தொகுதியின் மீனவ சகோதரர்களின் நலன் கருதி உவரியில் 63 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தூண்டில் வளைவு அமைக்க ஆணையிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கடலோரக் கிராம மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக 70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கூடங்குளத்தில் பொது மருத்துவமனை அமைக்க 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அது நிறைவேறும் தருவாயில் இருக்கின்றது. அதேபோல, மீனவ மக்களுக்காக உவரியில் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி மீன் பதனிடும் கிட்டங்கி அமைக்கும் வேலை நடைபெறவிருக்கிறது. இன்னும் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் விதமாக 10,000 பசுமை வீடுகள் அமைக்க 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட அனைத்து கோரிக்கைகளையும் எனது தொகுதி மக்களுக்காக நிறைவேற்றித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்னும் இரண்டு முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டுமாய்க் கோரி இந்த நேரத்தில் என்னுடைய கோரிக்கைகளை முன்வைக்கின்றேன்.

ராதாபுரம் தொகுதியில், திசையன்விளையைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு தனி தாலுகா அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அந்தக் கோரிக்கையையும் மனமுவந்து நிறைவேற்றித் தர வேண்டும்.

அதேபோல, தாமிரபரணி–கருமேனியோறு–நம்பியாறு–வெள்ளியோடை இணைப்புக் கால்வாய்த் திட்டத்தின் முதலாவது



2014 பிப்ரவரி 3]

மற்றும் இரண்டாவது நிலைகள் முடிவடைந்த நிலையில் இருக்கின்றன. அதேபோல மூன்று மற்றும் நான்காவது நிலைகளுக்கும் உடனடியாக நிதி ஒதுக்கி வேளாண் மக்களின், அந்தப் பகுதியினுடைய மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் விதமாக அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கோரிக்கை வைத்து வணங்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**46—**

## பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***493—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செக்கானூரணியில் கள்ளர் சீரமைப்புத் துறையின்மூலம் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செக்கானூரணி மற்றும் உசிலம்பட்டி, தேனி மாவட்டத்தில், ஆண்டிப்பட்டி ஆகிய மூன்று இடங்களில் உயர் கல்வித் துறையின்மூலம் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தொடங்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அனுமதிக்கப்பட்டு, அரசாணை நிலை எண் 17 உயர் கல்வித் துறை (பி2), நாள் 31–1–2013 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2014 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதிகளையெல்லாம் முன்னேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் கல்வித் துறையிலே மிகப் பெரிய புரட்சிகளை ஏற்படுத்திவருகின்ற தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், நாளைய இந்தியத் திருநாட்டினுடைய பிரதமர், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, மதுரை மாவட்டம், செக்கானூரணி, கொக்குளம் பகுதியில், பாலிடெக்னிக் கல்லூரி தொடங்கப்பட்டு, மாணவர்கள் சேர்க்கப்பட்டு, கட்டடப் பணிகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையில், மதுரை மாவட்டம், உசிலம்பட்டியிலும் ஒரு கல்லூரியை வழங்கியதோடு ஒரு பாலிடெக்னிக் கல்லூரி கேட்டதற்கு 2 பாலிடெக்னிக் கல்லூரிகளை கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமங்கலத்தில் அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி ஒன்றினை கொடுத்து 'தாய் நானிருக்கிறேன் படிக்க முன்வருகின்ற மாணவர்களையெல்லாம் முன்னேற்ற' என்று புரட்சிகரமான அறிவிப்பினை வழங்கிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மதுரை மாவட்ட மக்களின் சார்பில் நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் நகரத்து மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த, மழைக்காலங்களில் எல்லாம் அச்சுறுத்திக்கொண்டிருந்த கக்கன் காலனி, அண்ணா நகர், மம்சாபுரம் கால்வாய்களைச் சீரமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலே ஒரு உத்தரவும், சாத்தங்குடி வரை சென்றுகொண்டிருந்த குண்டாற்றினைச் சீர்செய்து, வெள்ளப்பெருக்கு வருகின்றபோது மக்களைப் பாதுகாக்க உத்தரவிட்டதோடு, திருமங்கலம் நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற அரசு ஹோமியோபதி கல்லூரியை மேம்படுத்துவதற்கு மூன்று கோடி ரூபாயையும், திருமங்கலம் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மையம் உருவாக்குவதற்கு ஐம்பது இலட்சம் ரூபாயையும் அளித்ததற்காக தொகுதி மக்களின் சார்பில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன்.



2014 பிப்ரவரி 3]

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**47—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***5465—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், அரிகிலபாடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எங்கேயோ மூலையில் மருத்துவக் கல்லூரி மாணவனாய் கழகக் கொடிபிடித்து தாயின் முகம் காணத் துடித்த எனக்கு கழகத்தில் பல்வேறு நிலைகளில் பல்வேறு பொறுப்புகளை வழங்கி, இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் மகத்தான சேவைத் துறையாம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அமைச்சராக்கி வினாவிற்கு விடையளிக்கக்கூடிய அரிய, பெரிய வாய்ப்பை எளியவன் எனக்கு வழங்கிய வாழும் ஒவ்வொரு நொடியும் நான் வணங்கிடும் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், ஈடு இணையில்லாத தமிழ்நாடு முதலமைச்சர், நாளைய பாரதப் பிரதமர் இதய தெய்வம் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, விடை அளிக்க விழைகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடித் துடித்த ஏழை மக்களின் நாடித் துடிப்பை அறிந்தவர்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்

[2014 பிப்ரவரி 3

தலைவி அம்மா அவர்கள். மக்களின் நாடித் துடிப்பை அறிந்த காரணத்தினால், வினா எழுப்பி விவாதத்திற்கு வரும் முன்னே நிறைவேற்றும் வண்ணமாக, வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், அரிகிலபாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க ஆணைப் பிறப்பிக்கப்பட்டு, நிலையம் திறக்கப்பட்டு, தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தீயை நீரால் அணைத்து விடலாம், வயிற்றினுள் பசி என்ற தீ எரியும்போது அதை எப்படி போக்குவது' என்ற வள்ளலாரின் கேள்விக்கு 'அம்மா உணவகம்' என்று பதிலை தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளியோர் வயிற்றுப் பசியைப் போக்கிய வாழும் வள்ளல் அம்மா நீங்கள் மட்டும்தான். எல்லோரும் எல்லாமும் பெற நித்தம் ஒரு திட்டம் தந்து, சத்தமில்லாமல் சாதனைகளைத் தடையில்லாமல் செய்துகொண்டிருப்பவர் அம்மா நீங்கள் மட்டும்தான்.

எங்கள் அரக்கோணம் தொகுதியில் ஏழையெளியோர் ஏற்றம் பெற இருநூறு ஆண்டுகளாகச் செய்ய முடியாதவற்றை இரண்டரை ஆண்டுகளுக்குள் செய்து, ரூபாய் 70 இலட்சத்தில் அரக்கோணம் அரசு பொது மருத்துவமனைக்கு மகப்பேறு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், அறுவை சிகிச்சை அரங்கிற்கு ரூபாய் 50 இலட்சத்தில் நவீன உபகரணங்கள் வாங்குவதற்கும் நிதி வழங்கியதோடு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரக்கோணம் நகரத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டம், ரூபாய் 200 கோடி செலவில் நான்கு வழிச்சாலை, சார்பு நீதிமன்றம், ரூபாய் 20 கோடியில் உயர்மட்டப் பாலம் என அடுக்கடுக்கானத் திட்டங்களைத் தந்த சாதனைத் தலைவி அம்மா நீங்கள் மட்டும்தான்.

மத்தியில் ஆட்சியைப் பிடிக்க ஆலாய்ப் பறந்து, ஓடாய் தேய்ந்துவரும் கட்சிகளுக்கு தக்க பாடம் புகட்டி நாற்பது தொகுதிகளையும் வென்றெடுத்து, நாளைய பாரதத்தை



2014 பிப்ரவரி 3]

ஆளப்போகும் இந்திய தேசத் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

இந்த அவையிலே வினா கொடுத்து விடை பெறுவதற்கு முன்னே அவ்வை பிராட்டியார் கால் பதிந்து பெயர் சூட்டிய என் சொந்த ஊரான அரிகிலபாடி கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக்கொடுத்து. பிறர் தேவை அறிந்து வாரி வழங்கி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், எனது சொந்த ஊர் மக்களின் சார்பிலும், என் சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேட்காமலேயே கொடுக்கும் இதய தெய்வம் அம்மா அவர்கள், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நோயாளி காத்திருப்புக் கட்டடமும், ஒரு செவிலியர் குடியிருப்புக் கட்டடமும் கட்டித் தர வேண்டுமாய் பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிகிலபாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போது தினமும் 150 புறநோயாளிகளும், சராசரி 10—லிருந்து 15 உள்நோயாளிகளும் மிகச் சிறப்பாகச் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசின் சார்பில் ரூபாய் 38 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, வருங்காலங்களில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப செவிலியர் குடியிருப்பும், பார்வையாளர் கூடமும் கட்டுவது குறித்து துறையின்மூலம் உரிய கருத்துருக்கள் பெறப்பட்டு, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

[2014 பிப்ரவரி 3

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் *12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட எருமைப்பட்டி ஒன்றியத்தில், செவந்திப்பட்டி கிராமத்தில் ஒரு சுகாதார மையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

உலகத்திலிருக்கின்ற அத்தனைபேரும் பாராட்டும் திட்டம் மழைநீர் சேமிப்புத் திட்டம் அம்மா. தமிழகத்தின் தாயாக விளங்கும் அம்மா, நீங்கள் வேளாண்மையில் புதிய யுக்தியைப் படைத்து அகில உலகமே பாராட்டும் சக்தி நீங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தடைக் கற்களைப் பொடியாக்கிய தாயே, தடுத்தவர்களை வீழ்த்திய வீராங்கனையே, ஜகத்தை ஆளவந்த மக்களின் ஞானியாக, (மேசையைத் தட்டும் ஒலி) வான்புகழ் பாரி வள்ளலை வீழ்த்தி நம் கண் முன்னே 8–வது வள்ளலாகத் திகழும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், கழகத்தின் காவல் தெய்வம், சமூக நீதி காத்த நீதி தேவதை, தமிழக நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) புனிதப் பொற்பாதங்களிலே எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புண்ணிய பூமியில் உழைக்கும் வர்க்கத்தார், ஏழ்மையில் வாழ்கின்ற உழைப்பாளர்கள், உழவர்கள், பெண்கள், ஏழை சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் இதய சிம்மாசனத்தில் நீங்காது இடம்பிடித்தவர் எங்கள் இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி, நீங்கள்தான் அம்மா! சரித்தர சாதனை வெற்றிகண்ட இந்தியாவின் மாதர் குல தெய்வமே,



2014 பிப்ரவரி 3]

தமிழகத்தின் குல விளக்கே, திருடர்களின் கொட்டத்தை அடக்கிய எங்கள் பட்டத்து அரசியே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசியல் வரலாற்றிலே புதிய அத்தியாயத்தை உருவாக்க மக்கள் கடலலையில் தாங்கள் எழுச்சியுற்றதை நாடே அறியும். வறுமைக்கும், வேலையின்மைக்கும் தீர்வுகாண வந்த தீர்க்கதரிசியே! (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதாரத்திற்குப் புத்துயிர் அளித்த புண்ணிய பூமியின் மாதரசியே! நீதி தவறாது ஆட்சி நடத்தும் தமிழ்த் தாயே! அசுரர்களின் அநீதிகளை அடக்கி குடிமக்களை காத்த குல தெய்வமே! மற்ற அரசுகளுக்கெல்லாம் ஒளிவிளக்காகத் திகழும் தீபத் திருவிளக்கே!

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக தொலைநோக்கு சிந்தனையுடன் “தமிழ்நாடு 2023 தொலைநோக்குப் பார்வை” என்ற ஆவணத்தின்மூலம் அனைத்துத் துறைகளிலும் நம் மாநிலம் வளர்ச்சியடைவதற்கு திட்டம் போட்டு, அடுத்தத் தலைமுறைக்கும் வாழ்வு கொடுத்து, வயிற்றில் பால் வார்த்து, வரலாற்றுத் தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கும் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவாய்த் துறை மூலமாக ஓர் அருமையான திட்டத்தை, ‘அம்மா’ திட்டத்தை ஆரம்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறை அதிகாரிகள் அனைவரும் மக்களிடத்தில் நேரடியாகச் சென்று, அம்மா திட்டம் மூலமாக அனைத்து குறைகளும் உடனடியாகத் தீர்க்கப்படுகின்றன.

கடந்த ஆட்சியிலே முதியோர் ஓய்வூதியமாக 500 ரூபாய் கொடுத்தார்கள். அதை வாங்குவதற்கு மக்கள் ஒரு வருட காலமாகப் போராடினார்கள். ஆனால், இப்பொழுது அப்படியா? நமது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, இன்றைக்கு மனு கொடுத்து ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தயவால் வெற்றிப் பெற்ற நாங்கள், உலக நாடுகளே பாராட்டுகின்ற அம்மாவின் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தால், அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத நயவஞ்சகர்கள் எங்களைப் பார்த்து துரோகிகள் என்றனர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் துரோகி தெரியுமா? அம்மாவின் வாக்குறுதியால், அம்மாவின் தயவால்

[2014 பிப்ரவரி 3

சட்டமன்றப் பேரவைக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் புகழுக்குக் களங்கம் விளைவிப்பவர்தான் உண்மையான துரோகி. கொள்கையே இல்லாமல், வாக்குறுதி கொடுக்காமல், கூட்டணி மட்டும் என்ற கொள்கையுடனே உலவிக்கொண்டு இருப்பவர்கள்தான் உண்மையான துரோகிகள் என்று கூறி, எனது தொகுதி, செவந்திப்பட்டி கிராமத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும் உறுதுணையாக இருந்து செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட செவந்திப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 3] [பேரவைத் தலைவர்]

***மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப் பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 3

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. வேளாண் உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ள நிலையில் கரும்பு மற்றும் நெல்லுக்கு ஏற்கெனவே அறிவித்துள்ள விலையினை உயர்த்தி வழங்குவது குறித்தும்;

2. கோவில்கள் மற்றும் மடங்களுக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகள் இயற்கை இடர்ப்பாடுகளால் பாதித்து, சாகுபடி அழிந்த ஆண்டுகளுக்கான குத்தகை பாக்கியினை கடந்த காலங்களைப்போல அவசர சட்டம் இயற்றி இரத்து செய்வது குறித்தும்;

3. ஊராட்சிகளில் செயல்படுத்திவரும் பசுமை வீடு திட்டத்தினை நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்துவது குறித்தும், குறைந்தபட்சம் பேரூராட்சி மற்றும் நகராட்சியில் தீ விபத்தால் நாசமடைந்த வீடுகளை பசுமை வீடு திட்டத்தின்கீழ் கட்டித் தருவது குறித்தும்;

4. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் சில மாதங்களுக்கு முன்பு பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தினால் உயிர்நீத்த பத்து பேர் குடும்பத்தினருக்கும், சிதம்பரம் வட்டம், சிவபுரி கிராமத்திலிருந்து ஐயப்பன் கோவிலுக்குச் செல்லும் வழியில் கரூருக்கு அருகில் விபத்து ஏற்பட்டு மரணமடைந்த மூன்று



2014 பிப்ரவரி 3] [திரு. க. பாலகிருஷ்ணன்]

ஆதி திராவிடர்களின் குடும்பத்தினருக்கும், கடலில் குளித்தபோது மரணமடைந்த சிதம்பரம் நகரைச் சேர்ந்த இரண்டு மாணவர்களின் குடும்பத்தினருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதி வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அமர்ந்து கொண்டு பதிலுரையாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பல்வேறு கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களது கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையில் உள்ள நல்ல அம்சங்களை, பாராட்ட வேண்டியவைகளைப் பாராட்டியும், அதில் உள்ள குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை எல்லாம் தீர்த்து வைக்க ஆவன செய்ய வேண்டும் என்ற அளவிலேயும், இங்கே உறுப்பினர்கள் தங்களது உரைகளை ஆற்றியிருக்கிறார்கள்.

இந்த அவையில் கருத்துகளை தெரிவிக்க வாய்ப்பு இருந்தும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இந்த அரசின்மீது குற்றங்களை மட்டுமே சுமத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அவைக்கு வெளியே இந்த ஆளுநர் உரை குறித்து மனம் போன போக்கில் சிலர் பேசியிருக்கிறார்கள். பொத்தாம் பொதுவாக பொறுப்பிலே இருந்தவர்கள், பொறுப்பிலே இருக்கின்றவர்கள், பொறுப்பற்ற முறையில் பேசி இருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில், மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் திட்டங்களைத் தீட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு தீட்டப்பட்ட திட்டங்கள் மக்களைச் சென்றடைகின்றன. திட்டங்களிலே ஒரு சில குறைகள் இருக்கலாம். திட்டங்கள் மக்களைச் சென்றடைவதிலே சில இடங்களில் சில குறைகள் இருக்கலாம். அவற்றைச் சுட்டிக்காட்டினால், அவற்றைச் சரி செய்ய நாங்கள் தயங்கமாட்டோம். அதற்காக ஒட்டுமொத்தமாக குற்றம் சாட்டுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. எந்தத் திட்டமானாலும், எந்தச் செயலானாலும் நல்லதைக் காண்பதென்றாலும் காணலாம், கெட்டதைக் காண்பதென்றாலும் காணலாம். நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதுதான் ஒவ்வொரு செயலிலும் நல்லதும், கெட்டதும். அவரவர்களுடைய மனதைப் பொறுத்து நல்லதும், கெட்டதும் தெரியும்.

இங்கே பேசியவர்களில் சிலர் அரசு இயந்திரத்தில் உள்ள சில குறைகளைச் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் அவற்றைக் குற்றங்களாக, குற்றச்சாட்டுகளாக எடுத்துக் கூறவில்லை. ஆனால், ஒரு சிலர் குறைகளையும், குற்றங்களாகச் சித்தரித்தனர்.

பிற்பகல் 12–10

இதை ஒர் உதாரணத்தின்மூலம் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். +2 படிக்கும் மாணவி நூற்றுக்கு நூறு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் படிக்கிறார். அவளுடைய பெற்றோரும் அந்த மாணவியின் நலனில் அக்கறை உள்ளோரும் அதைத்தான் விரும்புவார்கள். ஒருவேளை அந்த மாணவி 96 மதிப்பெண் பெற்றால்கூட நூற்றுக்கு நூறு வாங்கும் திறமை இருந்தும் 4 மதிப்பெண்கள் குறைந்துவிட்டதே என்ற ஆதங்கம்தான் அவர்களிடம் வெளிப்படும். எஞ்சிய 4 மதிப்பெண்களை வரும் காலங்களில் பெற்றுவிட வேண்டும் என்ற துடிப்புதான் அந்த ஆதங்கத்தின் வெளிப்பாடு. இதேபோன்றுதான் இங்கே குறைகளைச் சுட்டிக்காட்டியவர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துரைத்திருக்கிறார்கள் என நான் கருதுகிறேன். ஆனால், அதேநேரத்தில் அந்த மாணவியின் நலனில் அக்கறை இல்லாதவர்கள் 96 மதிப்பெண் என்ன பெரிய மதிப்பெண்? நூற்றுக்குக் குறைவாக பெற்றால் 96 மதிப்பெண்ணும் ஒன்றுதான், 40 மதிப்பெண்ணும் ஒன்றுதான் என்று தங்கள் பொறாமையை, அழுக்காறை, ஆற்றாமையை வெளிப்படுத்துவார்கள். இல்லை



என்றால் “சுலபமாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நூற்றுக்கு நூறு வாங்கியிருக்க வேண்டும். 96 மதிப்பெண் என்பது குறைவுதான்” என்று கூறி, அந்த மாணவியின் சாதனையைச் சிறுமைப்படுத்துவார்கள். இவர்களைப் போன்றவர்கள்தான், இந்த அரசின் திட்டங்கள் குறித்தும், அவற்றைச் செயல்படுத்தும் விதம் குறித்தும், நியாயமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தியவர்கள்.

நிறைகளையும், குறைகளையும் ஆராய்ந்துப் பார்த்து, அவற்றில் மிகுதியாக, இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு தெளிவான முடிவுக்கு வர வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

1961 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நிறைவுக் கூட்டம். அடுத்து தேர்தல் நடைபெற இருந்தது. புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவை புதிதாக அமைக்கப்பட வேண்டும். இந்த நிறைவுக் கூட்டத்தில் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மக்களவைத் தேர்தலில் நிற்கப் போகிறார் என்பதைத் தெரிந்து, அவரை வாழ்த்தி உறுப்பினர்கள் பேசினார்கள்.

அப்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டிப் பேசினார். அப்போது, “இன்றையதினம் என்னுடைய கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, நம் நிதி அமைச்சராகவும், காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தராகவும், இன்றையதினம் சட்டசபையின் நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் தலைவராகவும் அமர்ந்து நல்ல பணி ஆற்றிக்கொண்டு வருகிற கனம் சுப்பிரமணியம் அவர்களை ஏசுநாதருக்கு ஒப்பிட்டுச் சொன்னார்கள். நல்ல உபதேசங்களை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மனதில் வைத்துக்கொண்டு ஏசுநாதருக்கு ஒப்பிட்டுச் சொன்னதைக் கேட்டு ஒரு கணம் சந்தோஷம் அடைந்தேன். ஐந்து வருடம் அவர்களோடு பழகிய நட்புரிமையோடு, கனம் சுப்பிரமணியம் அவர்களோடு, ஏசுநாதரோடு, நாமும் கூடிப் பழகி இருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம் என்று மகிழ்ந்தேன்” எனப் புகழாரம் சூட்டினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எழுந்து “சிலுவையில் அறையாமல் இருக்க வேண்டும்!” என்று கூறினார்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

அதற்கு அண்ணா அவர்கள் தந்த அருமையான பதில் என்ன தெரியுமா?

“மறுகணம் மருட்சி அடைந்தேன். ஏனென்றால், ஏசுநாதரின் சீடர்களில் ஒருவர் அவரைக் காட்டிக் கொடுத்ததுபோல், இந்த ஏசுநாதருக்கு ஆபத்து வராமல் இருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டேன்” என்று கூறினார். அதாவது, உங்கள் கட்சிக்காரர்களால்தான் நீங்கள் எதிர்பார்க்கின்ற தொந்தரவு ஏற்படலாமே தவிர, எங்களால் அல்ல என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு அழகாக, நகைச்சுவையுடன் பதில் அளித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

நாணயத்தின் ஒரு பக்கத்தைக் கண்டார் திரு. சி.எஸ் அவர்கள். அதன் மறு பக்கம் கண்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

எனவே, எல்லாவற்றிலும் இருக்கும் இரு பக்கங்களில், ஒன்றை மட்டும் பாராமல் இரு பக்கமும் பார்த்து கருத்துகளைத் தெரிவிப்பது நல்லது என்ற என் கருத்தை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

எனது தலைமையிலான அரசின்மீது புழுதிவாரி இறைக்க வேண்டுமே என்பதற்காக, மக்கள் மத்தியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உள்ள நற்பெயருக்கு களங்கம் கற்பிக்க வேண்டுமே என்பதற்காக, நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டும் பார்த்து இந்த அரசின்மீது குற்றங்களை சில உறுப்பினர்கள் சுமத்தி இருக்கிறார்கள்.

மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டுவரும் எனது தலைமையிலான அரசின்மீது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக புழுதிவாரி இறைக்கின்றவர்கள் பக்கம் மக்கள் இல்லை. அவர்களும் மக்கள் பக்கம் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல, அவர்களது வீழ்ச்சிக்கு, அவர்களது அழிவுக்கு, அவர்களது கட்சிக்காரர்கள்தான் காரணமாக இருப்பார்கள். அவர்களது குடும்ப உறுப்பினர்கள்கூட காரணமாக இருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்தவரையில் எவ்விதத் தடுமாற்றமும் இல்லாமல் இருக்கிறோம். ஏனெனில், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற எங்கள் பக்கம் மக்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் பக்கம் நாங்கள் இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரை குறித்து தெரிவிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் ஆக்கபூர்வமான கருத்துகள் நிச்சயம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும், எதிர்க்கட்சி உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகளில் உண்மை இருக்குமானால் அவை நிச்சயம் களையப்படும் என்பதையும் நான் முதலில் தெளிவுபடுத்திக் கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைமையிலான அரசைப் பொறுத்தவரையில், பயனற்ற இலவசங்களைக் கொடுத்து மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பயனற்ற இலவசங்களைக் கொடுத்து மக்களை ஏமாற்றுபவர்களை வித்தை காட்டி குழந்தையை ஏமாற்றுபவர்களோடு ஒப்பிட்டு இதே சட்டமன்றத்தில் பேசினேன். இதைப் புரிந்து கொண்ட மக்கள், 2011 ஆம் ஆண்டு அவ்வாறு ஏமாற்றியவர்களைத் தூக்கி எறிந்தார்கள். மக்கள் வாழ்வில் வளம் பெற வேண்டுமென்றால், மாநிலம் செழிக்க வேண்டுமென்றால், மனித வள வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். இந்தக் கொள்கையைத்தான் எனது அரசு பின்பற்றி வருகிறது. எனவேதான், எதிர்கால சந்ததியினருக்குப் பயன்தரக்கூடிய கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டுக்கும் நான் முக்கியத்துவம் அளித்து வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியே, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலும் என்பதால், அனைத்துத் தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழை. எளிய, ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் கல்வி அறிவைப் பெறும்வகையிலான திட்டங்கள் எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில், பள்ளிக் கல்விக்கென 16,965 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2010–2011 ஆம் ஆண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பள்ளிக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 11,274 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஆகும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், நான்கு இணைச் சீருடைகள், புத்தகப் பைகள், காலணிகள், கணித உபகரணப் பெட்டிகள், கிரேயான்ஸ் மற்றும் வண்ணப் பென்சில்கள், புவியியல் வரைபடப்

புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவியருக்கு, கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதுதவிர, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் குறித்த நேரத்தில் பள்ளி செல்ல வசதியாக விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்படுகின்றன, மடிக்கணினிகளும் வழங்கப்படுகின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இடைநிற்றலைக் குறைக்கும்பொருட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 11 ஆம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியருக்குத் தலா 1,500 ரூபாயும், 12 ஆம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியருக்குத் தலா 2,000 ரூபாயும் கல்வி ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்தத் தொகை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு, மாணவ, மாணவியர் மேல்நிலைக் கல்வியை முடித்தவுடன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் மட்டும் இந்தத் திட்டத்தின்மூலம் கிட்டத்தட்ட 23 இலட்சம் மாணவ, மாணவியர் பயன் அடைந்துள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வருவாய் ஈட்டும் பெற்றோரை இழக்க நேரிடும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் கல்வி எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் பெயர்களில் 50,000 ரூபாய் பொதுத் துறை நிறுவனத்தில் வைப்பு நிதியாகச் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த இரண்டரை ஆண்டுகளில் 1,080 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–20*

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு முடித்துச் செல்லும் மாணவ, மாணவியர் தங்களது கல்வித் தகுதியைப் பதிவு செய்வதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சென்று அலைவதைத் தவிர்க்கும்வகையில், இந்த வேலைவாய்ப்புப் பதிவு முறையைப் பள்ளிகளிலேயே நாங்கள் அறிமுகப்படுத்தி இருக்கிறோம். இதேபோன்று, சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருவாய்ச் சான்றிதழ் ஆகியவற்றையும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து பள்ளித் தலைமை ஆசிரியர் பெற்று மாணவ, மாணவியருக்கு வழங்கும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.





மாணவ, மாணவியர் மன அழுத்தமின்றி, தேர்வு பயமின்றி மகிழ்ச்சியுடன் கல்வி கற்க ஏதுவாக, முப்பருவ முறைத் திட்டம், ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு பாடநூல் வழங்கப்படுவதால், மாணவ, மாணவியரின் கடுமையான புத்தகச் சுமை குறைக்கப்பட்டு உள்ளது. மாணவர்களது, படைப்புச் சிந்தனை மற்றும் திறன்களை வளர்க்கும் செயல்பாடுகள் பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் மன அழுத்தத்தைக் குறைக்கும்பொருட்டு, நகரும் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், இதுவரை 46,794 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

மாணவர்களது ஒருமுகத் தன்மையை மேம்படுத்துதல், பகுப்பாய்வுத் திறன் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறனை அதிகரித்தல் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கான போட்டிகளில் 11 இலட்சத்து, 25 ஆயிரத்து 628 மாணவ, மாணவியர் பங்கு பெற்றுள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தங்களுடைய குழந்தைகள் ஆங்கில மொழியைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர்களிடையே இருப்பதால், கூடுதல் செலவையும் பொருட்படுத்தாமல் ஆங்கிலவழிக் கல்வியினைப் போதிக்கும் தனியார் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடையே மேலோங்கி நிற்கிறது. ஏழை, எளிய பெற்றோர்களின் நிதிச் சுமையினைக் குறைக்கும் வகையிலும், ஆங்கில மொழியில் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணமும், அதற்குரிய ஆற்றலும் உள்ள குழந்தைகளுக்கு அதற்கான வாய்ப்பை அரசுப் பள்ளிகளிலேயே ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற நோக்கத்துடன், கடந்த ஆண்டு சில பள்ளிகளில் ஆங்கிலவழிப் பிரிவு தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு 6,594 பள்ளிகளில் ஒன்றாம் மற்றும் 6 ஆம் வகுப்புகளில் ஆங்கிலவழிப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. இது தவிர, ஆங்கில பேச்சாற்றல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இந்த அரசின் நடவடிக்கைமீது அவதூறு பரப்பவேண்டும் என்ற எண்ணத்தில் சிலர் இதைக் குறை கூறி வருகின்றனர்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

ஆனால், அவ்வாறு குறை கூறுவோர் தங்கள் பிள்ளைகளைத் தமிழ் மொழிவழிக் கல்வியில் படிக்க வைத்தார்களா? தி.மு.க.வின் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், தனது பிள்ளைகளைத் தமிழ் மொழிவழிக் கல்வியில் படிக்க வைத்தாரா? இல்லையே! அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் வைத்திருக்கும் பள்ளிகளிலாவது தமிழ் மொழிவழிக் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறதா என்றால், அதுவும் இல்லை. பள்ளிகளின் பெயர்கள்கூட ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. 'துர்காவதி கல்வி அறக்கட்டளை' என்ற அமைப்பு, சென்னை–29, மேத்தா நகர், ராஜேஸ்வரி தெருவில் சன்ஷைன் அகாடமி (Sunshine Academy) மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி என்ற பள்ளியை இயக்கி வருகிறது. இந்தப் பள்ளியின் இயக்குநர் திரு. மு.க. ஸ்டாலினின் மகள் திருமதி செந்தாமரை சபரீசன். திரு. மு.க. ஸ்டாலினின் மருமகள் திருமதி கிருத்திகா உதயநிதியும் இந்த அறக்கட்டளையில் உறுப்பினராக இருக்கிறார். இங்கு என்ன தமிழ்மொழிவழிக் கல்வி போதிக்கப்படுகிறதா?

இதேபோன்று, சென்னை, வேளச்சேரி, டாக்டர் சீதாபதி நகர், ராணி தெருவில் சன்ஷைன் மாண்டிசோரி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியும், மடிப்பாக்கத்தில் Sunshine Chennai Senior Secondary Schoolம் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு பள்ளிகளுக்கும் இயக்குநராக இருப்பவர், திரு. மு.க. ஸ்டாலினின் மகள் திருமதி செந்தாமரை சபரீசன். இங்கு ஆங்கிலவழிக் கல்வி மாத்திரம் இல்லை, இந்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மழலையர் வகுப்பிற்கான ஆண்டுக் கட்டணம் ரூ.9,000/–, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான கட்டணம் ரூ.15,400/–.

தனியார் பள்ளிகள் எல்லாம் இதேபோன்று ஆங்கில மொழிவழியில் வகுப்புகளை நடத்தி அதிக கட்டணம் வசூலிக்கின்றன. எனவேதான், கட்டணம் ஏதும் செலுத்தாமல் ஏழை, எளிய மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காகத்தான், 6,594 அரசுப் பள்ளிகளில், ஒரு பிரிவில் ஆங்கிலவழிக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

மாணவ, மாணவியர் தரமான கல்வியைப் பெற வேண்டுமெனில் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, கடந்த இரண்டே முக்கால் ஆண்டுகளில் 68,481 ஆசிரியர்ப் பணியிடங்களை நிரப்ப நான் உத்தரவிட்டுள்ளேன்.



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

(மேசையைத் தட்டும் ஒலி) இதுநாள்வரை 51,757 ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். இந்தப் பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு முற்றிலும் பின்பற்றப்பட்டது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே நாளில் 20,920 ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கி சாதனைபுரிந்த அரசு எனது தலைமையிலான அரசு என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியர் அல்லாத பணியிடங்களைப் பொறுத்தவரையில் இதுவரை, 19,673 பணியிடங்களுக்கு என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 10,220 பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன.

பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன், நடப்பு நிதியாண்டில் மட்டும் கிட்டத்தட்ட 366 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேவைக்கேற்ப புதிய தொடக்கப் பள்ளிகளை ஆரம்பித்தல், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. 300–க்கு மேற்பட்ட மக்கள்தொகை உள்ள இடத்தில் ஒரு கிலோ மீட்டர் சுற்றுவட்டத்தில் தொடக்கப் பள்ளிகள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் 54 புதிய தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 1,125 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் தோல்வியுறும் மாணவ, மாணவிகள் அதே ஆண்டிலேயே உயர் கல்வியைத் தொடர ஏதுவாக, தேர்ச்சி பெறாத பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் கொள்ளாமல், அனைத்துப் பாடங்களையும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் உடனடித் தேர்வு எழுத அனுமதித்தல், புகைப்படம், இருபரிமாணப் பட்டக் குறியீடு மற்றும் கூடுதல் இரகசியக் குறியீடு ஆகியவற்றுடன்கூடிய பொதுத் தேர்வுக்கான சான்றிதழ்கள் வழங்குதல் என பல்வேறு புதுமையான நடவடிக்கைகள் எனது தலைமையிலான அரசால் எடுக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வியில் இவ்வாறு பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் காரணமாகவும், மேல்நிலை வகுப்புகளில் இடைநிற்றலைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதன்

காரணமாகவும், பத்தாம் வகுப்புப் பயின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. 2010–2011 ஆம் ஆண்டு 8 இலட்சத்து 38 ஆயிரத்து 165 என்று இருந்த பத்தாம் வகுப்பு மாணவ, மாணவியரின் எண்ணிக்கை, 2013–2014 ஆம் ஆண்டு 11 இலட்சத்து 40 ஆயிரமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பன்னிரண்டாம் வகுப்பைப் பொறுத்தவரையில், 2010–2011 ஆம் ஆண்டு 7 இலட்சத்து 16 ஆயிரத்து 543 என்று இருந்த எண்ணிக்கை, 2013–2014 ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 40 ஆயிரமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்ச்சி விகிதத்தை எடுத்துக்கொண்டால், 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 85.3 விழுக்காடு என்றிருந்த தேர்ச்சி விகிதம், 2013 ஆம் ஆண்டு 89 விழுக்காடாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோன்று, 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 85.9 விழுக்காடாக இருந்த தேர்ச்சி விகிதம், 2013 ஆம் ஆண்டு 88.1 விழுக்காடாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்வியை எடுத்துக்கொண்டால், திருச்சிராப்பள்ளி, தேனி, தருமபுரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

தமிழ்நாடு முழுவதும் இதுவரை 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிக்கென 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரிகளில் காலியாகவுள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிரப்பப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் ஒரு கல்விப் புரட்சியை தமிழ்நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவில் 100 விழுக்காடு கல்வியறிவு





பெற்ற மாநிலமாகத் தமிழகம் திகழும் என்பதை மிகுந்த பெருமிதத்துடன் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் வாழ்வு வளம் பெற கல்விக்கு இணையாக உள்ளது மக்கள் நல்வாழ்வு. தரமான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் காலத்தே நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், இந்தியாவிலேயே முதலாவதாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மட்டும் 2,334 மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்படுவதற்குமுன், 2,027 மருத்துவர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகமொத்தம், 4,361 மருத்துவர்கள் காலமுறை ஊதியத்தில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோன்று, 912 மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏழை, எளிய, நலிந்த மக்கள் பயன்பெறும் வண்ணம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ஒரு குடும்பத்திற்கு ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 4 ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாய் வரையும், சில குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கு ஆண்டிற்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் வரையும் வழங்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருந்தால், அக்குடும்பத்தினர் வருமான வரம்பின்றி, இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், இதுவரை 1,256 கோடி ரூபாய் செலவில் 5,84,000 ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் அரசு மருத்துவமனைகள்மூலம் 447 கோடி ரூபாய் செலவில் 2,25,000 பேர் பயனடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தத் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு ஏற்படும் சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கான முழு செலவுத் தொகையை வழங்க வழிவகை செய்யும் ஏற்பாடாக, 10 கோடி ரூபாய் முதலீட்டில் சிறப்பு நிதியம்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் 926 பேர் பயன் பெற்றுள்ளனர்.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், AIIMS மருத்துவமனைக்கு இணையான பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று, 2,000–க்கும் மேற்பட்ட புற நோயாளிகள் சிகிச்சை பெறும் சென்னை பல் மருத்துவக் கல்லூரிக்கென ஒரு புதிய அடுக்குமாடிக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர, தமிழ்நாடு பல் மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், புதிய பணியிடங்களைத் தோற்றுவிப்பதற்கும், இதனை Centre of Excellance in Dentistry ஆகத் தரம் உயர்த்துவதற்குமான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

அரசு ஊழியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நான்கு ஆண்டுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை பெற தனியார் காப்பீட்டு நிறுவனத்தின்மூலம் வழிவகை செய்யப்பட்டிருந்தது. ஆனால், 2011–ல் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நான்கு ஆண்டுகளுக்கு நான்கு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை பெற வழிவகை செய்ததோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் காப்பீட்டு நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மாற்றி மத்திய அரசு நிறுவனத்துடன், அதாவது, United India Insurance நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவும் வழிவகை செய்துள்ளேன்.

பிற்பகல் 12–35

நகர்ப்புற மக்களுக்கு இணையாக, கிராமப்புற மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்கவேண்டும் என்பதன் அடிப்படையில், கிராமப்புறங்களில் உள்ள 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 42 ஆரம்ப சுகாதார மையங்களில், தாய்–சேய் நல மையங்கள் 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. அவசர மகப்பேறு அறுவை சிகிச்சை போன்றவற்றிற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் அந்த மருத்துவமனைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இதுவன்றி,



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

28 கோடி ரூபாய் செலவில் புதிதாக 47 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 27 மாவட்ட மருத்துவமனைகளுக்கு சுமார் 13 கோடி ரூபாய் செலவில் புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மதுரை மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தாய்–சேய் நலப் பிரிவுகளை மேன்மைமிகு மையங்களாக மேம்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையின் தாய்–சேய் நலப் பிரிவு மேம்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. 55 மருத்துவமனைகளில், மகப்பேறு தீவிர கிசிச்சைப் பிரிவு தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்கள் குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் ஆகியோர் பற்றிய விவரங்களைப் பதிவு செய்யும் கிராம சுகாதார செவிலியர்களின் பணியினை மேம்படுத்தும்வகையில், அவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவையன்றி, கிராமப்புற மக்களுக்கான மருத்துவ வசதியை மேலும் மேம்படுத்தும்வகையில், 100 கோடி ரூபாய் செலவில் 118 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் புதிதாக ஏற்படுத்தவும், (மேசையைத் தட்டும் ஒலி) 77 கோடி ரூபாய் செலவில் 64 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடு கட்டும்வகையிலும், கர்ப்ப காலத்தில் சத்தான உணவு உண்டு, நிறைவான எடையுள்ள குழந்தையை ஈன்றெடுக்கும் வகையிலும், இரத்த சோகை மற்றும் பேறு காலத்திற்குப் பின் ஏற்படும் நோய்களைத் தடுக்கவேண்டும் என்பதன் அடிப்படையிலும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டு வந்த மகப்பேறு நிதி உதவியை 6,000/– ரூபாயிலிருந்து 12,000/– ரூபாயாக நாங்கள் உயர்த்தி இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கர்ப்ப கால சேவைகளை அரசு மருத்துவ நிலையங்களில் பெறும்போது 4,000 ரூபாய், அரசு மருத்துவ நிலையங்களில் பிரசவம் மேற்கொண்ட பிறகு 4,000 ரூபாய், முத்தடுப்பு ஊசி மற்றும் போலியோ சொட்டு மருந்து கொடுத்த பிறகு 4,000 ரூபாய் என மொத்தம் 12,000 ரூபாய் மகப்பேறு நிதி உதவியாக

வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், கர்ப்ப கால சேவைகளைப் பெறுவதற்கு ஊக்கம் அளிக்கப்படுவதுடன், மருத்துவமனைகளில் பிரசவம் மேற்கொள்ளப்படுவதும், சிசுக்களுக்கு தடுப்பு ஊசி வழங்கப்படுவதும் உறுதி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட ஆறு இலட்சம் பேர் பயனடைகிறார்கள். இதுவரை 1,667 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்விற்கு எடுக்கப்பட்ட முன் முயற்சிகள் காரணமாக, நல்வாழ்வுக் குறியீடுகள் வளர்ச்சி அடைந்துள்ளன. 2010 ஆம் ஆண்டு, 1,000 குழந்தை பிறப்புகளுக்கு 24 என இருந்த ஒரு வயதிற்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம், தற்போது 21 ஆகக் குறைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டு 27 என இருந்த 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம் 2012 ஆம் ஆண்டு 24 ஆகக் குறைந்துள்ளது. அதுபோலவே, 2010 ஆம் ஆண்டு தாய் இறப்பு விகிதம் ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 79 என இருந்தது, தற்போது 73 ஆகக் குறைந்துள்ளது. இப்படி நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்கும் மக்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த எண்ணற்ற நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் எதிர்காலத்திற்குத்தான் பயன் அளிக்கும். நல்ல உடல் நலமுள்ள கல்வியில் தேர்ந்த இளைஞர்களை உருவாக்கவும், மக்களின் நல்வாழ்வினை உறுதி செய்யவும் இத்திட்டங்கள் பயனளிக்கும். அதேநேரத்தில் ஒதுக்கப்பட்ட மக்களின் நலன் காக்கவும் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இதன் அடிப்படையில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை 1,000 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) தாய்மார்களின் நலனைக் கருத்தில் கொண்டு, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறோம். இதுவரை 71 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்ப





அட்டைதாரர்களுக்கு இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 32,052 கறவைப் பசுக்கள் மற்றும் 14,97,624 வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் 1,80,000 நபர்கள் பயனடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைப் பெண்களுக்கு, 25,000 ரூபாய் திருமண உதவித் தொகையுடன், 4 கிராம் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு 50,000 ரூபாய் திருமண உதவித் தொகையுடன், 4 கிராம் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்கீழ் 2.86 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஏழைப் பெண்கள் பயன் அடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன்மூலம் ஏழையெளிய மக்கள் குறைந்த கட்டணத்தில் நிறைவான சேனல்களைக் கண்டுகளிக்க வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது.

இதேபோன்று, மாற்றுத் திறனாளிகளுக்கென பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்காரணமாக, “மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் (Empowerment)” என்ற பிரிவின்கீழ் 2013 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாநிலமாக மத்திய அரசால் தமிழ்நாடு தெரிந்தெடுக்கப்பட்டு, அதற்கான விருது வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினாலும், தவறான டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு விலை நிர்ணயத்தாலும், விலைவாசி உயர்ந்து கொண்டே வருகிறது. விலைவாசி உயர்வைக் குறைக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசு தவறி உள்ளது என்பதை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே ஒப்புக்கொண்டுள்ளார். “We have also not been as successful in controlling inflation as we would have wished. This is primarily because food inflation has increased” என்று கூறியுள்ளார். அதாவது, “பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு எங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இதற்கு முக்கியக் காரணம் உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் உயர்ந்ததுதான்” என்று கூறியிருக்கிறார் பாரதப் பிரதமர்.

விலைவாசியைக் கட்டுப்படுத்துவது மத்திய அரசின் நிதிக் கொள்கை மற்றும் பாரத ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கை ஆகியவைதான். மத்திய அரசின் விரிவான பொருளாதாரக் கொள்கை மற்றும் இதர பொருளாதாரக் கொள்கைகள் சரி செய்யப்பட்டால்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த இயலும். எனினும், மாநில அரசால் என்னென்ன செய்ய இயலுமோ அவை அனைத்தையும் எனது தலைமையிலான அரசு செய்து வருகிறது. விலைவாசியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் 20 கிலோ விலையில்லா அரிசியை நாங்கள் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) வெளிச் சந்தையில் விற்கப்படும் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த ஏதுவாக, விலை நிலைப்படுத்தும் நிதியம் ஏற்படுத்தப்பட்டு, 100 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலமாக ஒரு கிலோ அரிசி 20 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்லாமல், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ், ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும், 1 கிலோ துவரம் பருப்பு 30 ரூபாய்க்கும், ஒரு கிலோ உளுத்தம் பருப்பு 30 ரூபாய்க்கும் வழங்கப்படுகின்றன. காய்கறி விலையைக் கட்டுப்படுத்த நகர்ப்புறப் பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகள் மூலமும், தோட்டக்கலைத் துறை மூலமும் விவசாயிகளையும், நுகர்வோரையும் நேரடியாக இணைக்கக்கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

ஏழை, எளிய தாய்மார்களின் நலனைக் கருத்தில்கொண்டு, சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரி 1–7–2011 முதல் எனது தலைமையிலான அரசால் முழுவதுமாக இரத்து செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வண்ணம், ‘அம்மா உணவகங்கள்’ அனைத்து மாநகராட்சிகளிலும் திறக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உணவகங்களில் இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல், சாம்பார் சாதம், கருவேப்பிலை சாதம், எலுமிச்சம்பழ சாதம் ஆகியவை 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.





*பிற்பகல் 12–45*

இது தவிர, “மக்களை நாடி அரசு” என்பதற்கேற்ப, மக்கள் குறை தீர்க்கும் ‘அம்மா திட்டம்’, (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 10 ரூபாய்க்கு ஒரு லிட்டர் மினரல் வாட்டர் வழங்கும் ‘அம்மா குடிநீர்த் திட்டம்’, (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகர மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில், போக்குவரத்து இணைப்பு இல்லாத பகுதிகளிலிருந்து அருகிலுள்ள பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையத்தை இணைக்கும் வகையில், சிற்றுந்துகள் அறிமுகம், (மேசையைத் தட்டும் ஒலி) புதிய வழித் தடங்கள் அறிமுகம், புதிய பேருந்துகள் அறிமுகம், கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் செல்ல மானியம், இந்துக்கள் மானசரோவர் மற்றும் முக்திநாத் செல்ல மானியம், (மேசையைத் தட்டும் ஒலி) உலமாக்களுக்கான ஓய்வூதியம் அதிகரிப்பு, உலமாக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு, வக்ஃபு வாரியத்திற்கு நிதி உதவி என எண்ணற்ற மக்கள் நலம் பயக்கும் திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய பல உறுப்பினர்கள் மின்சாரப் பிரச்சினை குறித்து தங்கள் கருத்துகளை எடுத்துரைத்தார்கள். மின்சாரத்தை எடுத்துக்கொண்டால், பல தடைகளைத் தகர்த்தெறிந்து, கடந்த இரண்டே முக்கால் ஆண்டுகளில் எனது தலைமையிலான அரசு எடுத்த பகீரத முயற்சிகளின் காரணமாக, இருளில் மூழ்கியிருந்த தமிழகம் வெளிச்சத்திற்கு வரத் தொடங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 1991 முதல் 1996 வரையிலான எனது முதல் ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 1,300 மெகாவாட் மின் நிறுவுதிறன் கூடுதலாக சேர்க்கப்பட்டது. 2001 முதல் 2006 வரையிலான எனது இரண்டாவது ஆட்சிக் காலத்தில், 2,500 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின் நிறுவுதிறன் சேர்க்கப்பட்டது.

தற்போது மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தேவைக்கேற்ப மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை நான் முனைப்புடன் எடுத்துவருகிறேன்.

*மேட்டூர் அனல் மின் திட்ட மூன்றாம் அலகிலிருந்து 600 மெகாவாட், வல்லூர் கூட்டு மின் திட்டத்தின் இரு அலகுகளிலிருந்து 700 மெகாவாட், வடசென்னை அனல் மின் திட்டத்தின் இரு அலகுகளிலிருந்து 1,200 மெகாவாட் எனக் கிட்டத்தட்ட 2,500 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின்சாரம் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 8,000 மெகாவாட், 9,000 மெகாவாட் என இருந்த மின் உற்பத்தி, இதுவரை இல்லாத அளவுக்கு 29–1–2014 அன்று 12,799 மெகாவாட்டை எட்டி, சாதனை படைத்துள்ளது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*கடந்த சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரின்போது புதிய மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதன்மூலம் கூடுதலாக 1,700 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைத்து வருகிறது என்று நான் தெரிவித்தேன். உடனே, தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, “இந்த 1,700 மெகாவாட் மின்சாரம் முழுவதும் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களின்மூலம் கிடைத்ததுதான்” என்று தெரிவித்து சாதனையில் பங்கு போட முயற்சி செய்தார்.*

*இதனையடுத்து ஒரு சில நாட்களிலேயே தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்படாத புதிய கூட்டு மின் திட்டங்கள் உட்பட, மத்திய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள்மூலம் பெறப்பட்டு வந்த மின் உற்பத்தி சுமார் 2,500 மெகாவாட் அளவுக்குக் குறைந்தது. மீண்டும் மின்வெட்டினை நடைமுறைப்படுத்தும் சூழ்நிலைக்கு எனது அரசு தள்ளப்பட்டது. இவற்றைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு நான் 25–11–2013 அன்று கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், ‘தேசிய அனல் மின் கழகத்தின் கீழுள்ள கூட்டு நிறுவனம் உள்ளிட்ட மத்திய மின் உற்பத்தி நிலையங்களும், பாரத மிகுமின் நிறுவனத்தால் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுவரும் மின் உற்பத்தி நிலையங்களும், ஒரே சமயத்தில் இவ்வளவு மோசமாகச் செயல்படுவதைத் தமிழக மக்களால் நம்ப முடியவில்லை. மத்திய அரசின் கீழுள்ள பொதுத் துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்களில் 2,500 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி குறைந்திருப்பது, தமிழகத்தை இருளில் மூழ்கச் செய்யும் செயல், திட்டமிட்ட சதி என்று தமிழக மக்கள் நம்பும் நிலைக்குக் கொண்டு சென்றுவிடும்’ என்று குறிப்பிட்டிருந்தேன்.*



*பிற்பகல் 12–50*

*இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய திரு. கருணாநிதி, ‘இதைப்பற்றிய குற்றச்சாட்டினைத் தமிழக முதலமைச்சரே, பிரதம அமைச்சருக்குக் கடிதம் மூலமாக எழுதியிருக்கிறார். அதற்குப் பிரதமரின் பதில் வந்த பிறகு, அந்த விவரத்தை அறிந்து நான் விளக்கம் அளிக்கிறேன்’ என்று கூறினார். பின்னர், ஓரிரு நாட்களிலேயே, பிரதமரிடமிருந்து எவ்வித பதிலும் வரப்பெறாமலேயே, மத்திய மின் தொகுப்பிலிருந்து வரும் மின்சாரம் ஏன் குறைந்துள்ளது என்பது குறித்து விளக்கமளித்தார். அதன் பின்னர், மாண்புமிகு பாரதப் பிரதமர் தனது 16–12–2013 நாளிட்ட கடிதத்தில், மத்திய மின் உற்பத்தி நிலையங்களில் என்ன காரணங்களினால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து,* “Thus it may be seen that by sheer coincidence various problems have hit the power sector in Tamil Nadu at the same time. However, efforts are being made to resolve these problems at the earliest.” *என்று கூறியுள்ளார். அதாவது, ‘தமிழ்நாட்டில் மின்சாரத் துறையில் ஒரே சமயத்தில் பல்வேறு பிரச்சினைகள் நிகழ்ந்துள்ளது எதேச்சையாக ஏற்பட்டது. இருப்பினும், விரைவில் அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்’ என்று தெரிவித்துள்ளார். இதற்கு என்ன பொருள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்களின் முடிவிற்கே நான் விட்டுவிடுகிறேன்.*

*சற்றுமுன் தெரிவித்ததைப்போல், 2,500 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின்சாரம் தற்போது நமக்குக் கிடைத்து வருகிறது. இதுதவிர, 3,330 மெகாவாட் அளவு மின்சாரத்தை 15 ஆண்டுகளுக்குப் பெறத்தக்க வகையில், நீண்டகால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 74 மெகாவாட், தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரு தனியார் மின் நிலையத்திலிருந்து 1–1–2014 முதல் பெறப்பட்டு வருகிறது. மேலும், 1,098 மெகாவாட் மின்சாரம் தமிழகத்தில் தூத்துக்குடி மற்றும் கடலூர் மாவட்டங்களில் நிறுவப்பட்டுவரும் தனியார் மின் நிலையங்களிலிருந்து 2014–2015–ல் பெறப்படும். மீதமுள்ள 2,158 மெகாவாட் மின்சாரம், சத்தீஸ்கர், ஒடிசா, ஜார்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களிலுள்ள தனியார் மின் நிலையங்களிலிருந்து பெறப்படும். தற்போது பரிசோதனையில் உள்ள சோலாப்பூர்–ரெய்ச்சூர் மின் வழித்தடம் வணிக உபயோகத்திற்கு விரைவில் கொண்டு வரப்படும்போது, வரும் ஆகஸ்ட் மாதத்திலிருந்து*

1,426 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான அரசின் தொடர் முயற்சி காரணமாக, கூடங்குளம் அணுமின் திட்டமும் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. விரைவில் இந்தத் திட்டம், தனது முழு உற்பத்தித் திறனையும் எட்டும் நிலையில் உள்ளது.

இதுமட்டுமல்லாமல், எதிர்கால மின் தேவையைக் கருத்தில்கொண்டு, 3,300 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் திட்டங்களுக்கு சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பெறப்பட்டுள்ளன. இவை வெகு விரைவில் இறுதி செய்யப்படும். 2,000 மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்திற்கான தொடக்க ஆய்வுப் பணிகள் முடிவு பெற்றுள்ளன. விரைவில் முதல் கட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

5,000 கோடி ரூபாய் முதலீட்டில் 3,572 கோடி ரூபாய் ஜப்பானிய நிதியுதவியுடன் புதிதாக ஐந்து 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும், பதினான்கு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும் அமைத்து, தமிழ்நாட்டின், குறிப்பாக சென்னையின் மின் கட்டமைப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஐந்து 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களில், இரண்டு துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. ஒரு 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மீதம் உள்ள இரு துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ளன. பதினான்கு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களில் 4 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுவிட்டன. 6 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வில் உள்ளன. 4 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் இந்த மாதம் கோரப்படவுள்ளன.

பிற்பகல் 12–55

1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம், திருவலத்தில் 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும், அதனைச் சார்ந்த மின் தொடரமைப்பும் அமைப்பதற்கான ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்யப்பட்டு, பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதேபோன்று, 8,000 கோடி ரூபாய்





மதிப்பீட்டில் 56 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவித்திருந்ததில், 9 துணை மின் நிலையங்கள் இயக்கிவைக்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 24 துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 8 துணை மின் நிலையங்கள் அமைக்க ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 9 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இவை விரைவில் இறுதி செய்யப்படும். மீதமுள்ள 6 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ளன. மின் நுகர்வோர்களுக்குச் சீரான மின்சாரம் வழங்கும்பொருட்டு, இந்த நிதியாண்டில் இதுவரை 16,151 புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த அரசு 2011 ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பேற்றது முதல் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 27.5 இலட்சம் புதிய மின் இணைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே உறுதியளித்தபடி மின்வெட்டே இல்லை என்ற நிலைமையை தமிழகம் விரைவில் எட்டிவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும்வகையில், முதன்மைத் துறையான வேளாண் துறைக்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், அதன்மூலம் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கவும் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் தேதி முன்கூட்டியே மேட்டூர் அணையைத் திறந்துவிட உத்தரவிட்டேன். இதன் காரணமாகவும், புதிய உத்திகளைக் கடைப்பிடித்ததன் காரணமாகவும் 2011–2012 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி 101.52 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்தது. இந்தச் சாதனைக்காக மத்திய அரசின் கிரிஷி கர்மான் விருது தமிழகத்திற்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

2012–2013 ஆம் ஆண்டில் பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும், கர்நாடகம் காவேரி தண்ணீரைத் திறந்துவிட மறுத்ததன் காரணமாகவும், உணவு தானிய உற்பத்தியில் புதிய சாதனையைப் படைக்க முடியவில்லை. இருப்பினும், நுண்ணீர்ப் பாசனம், 12 மணி நேர தடையில்லா மும்முனை மின்சாரம் உட்பட பல்வேறு உத்திகளைக் கையாண்டதன் காரணமாக உணவு தானிய உற்பத்தி வெகுவாகக் குறைவது தடுக்கப்பட்டது. இருப்பினும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும்வகையில் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன. சுமார் 5.32 இலட்சம் விவசாயிகளுக்கான முழு பிரிமியத் தொகையான 27 கோடியே 67 இலட்சம் ரூபாயினை எனது தலைமையிலான அரசே காப்பீட்டு நிறுவனத்திற்குச் செலுத்தியது.

பிற்பகல் 1–00

டெல்டா பகுதிகளில் 3.61 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்த நெற்பயிர் வறட்சியினால் பாதிப்படைந்ததால் ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் வீதம் சுமார் 524 கோடி ரூபாய் வறட்சி நிவாரணமாக 3,52,613 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) டெல்டா அல்லாத மாவட்டங்களைப் பொறுத்தவரையில் 22.89 இலட்சம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்த பயிர் பாதிக்கப்பட்டது. 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்ட நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் வீதமும், பாசனம் பெறும் இதர பயிர்களுக்கும், பல்லாண்டு பயிர்களுக்கும் ஏக்கருக்கு 4,000 ரூபாய் வீதமும், பாசனம் பெறாத பயிர்கள் மற்றும் மல்பெரி பயிர்களுக்கு ஏக்கருக்கு 3,000 ரூபாய் வீதமும், சுமார் 804 கோடியே 24 இலட்சம் ரூபாய், 17 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மொத்தத்தில் 1,328 கோடியே 24 இலட்சம் ரூபாய், 20 இலட்சத்து 90 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

2013–2014 ஆம் ஆண்டில் 24–1–2014 முடிய 40.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. இதுமட்டுமல்லாமல், பிற பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டன. இதன்மூலம் இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி சுமார் 100 இலட்சம் மெட்ரிக் டன்னை எட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டை ஒப்பிடுகையில் உணவு தானிய உற்பத்தி 59 விழுக்காடு அதிகரிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

திருந்திய நெல் சாகுபடி ஒட்டுமொத்த கிராமத் திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் 2,000 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு, இன்றைய நிலவரப்படி 4.70 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 13 விழுக்காடு கூடுதல் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

2013–2014 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பயறு சாகுபடி திட்டத்தின்கீழ் 1,695 கிராமங்களில் 2.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டை ஒப்பிடும்போது கூடுதலாக 11 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயறுவகை பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

நெல் கொள்முதல் விலை மற்றும் கரும்பு ஆதரவு விலை ஆகியவற்றில் மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் கூடுதல் விலையை எனது தலைமையிலான அரசு நிர்ணயித்துள்ளது.

விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை இருப்பில் வைத்து, நியாயமான விலை கிடைக்கும்போது அவற்றை விற்பனை செய்ய ஏதுவாக, சந்தை உட்கட்டமைப்பு வசதிகள், குளிர்சாதன வசதி அமைப்புகள், கிடங்குகள் ஆகியவை அமைத்துத் தரப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1.13 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க் குட்டைகள், தடுப்பணைகள் ஆகியவை அமைக்கப்பட்டதன்மூலம் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நுண்ணீர்ப் பாசனத்திற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகிறது. வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு 141 கோடியே 67 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நீண்ட நாட்களாக மத்திய அரசிதழில் வெளியிடப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்த காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்தத்

தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கால்நடை, மீன்வளம் ஆகிய முதன்மைத் துறைகளுக்கும் எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. 643 கால்நடை மருந்தகங்கள் மற்றும் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 882 கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 485 கால்நடைக் கிளை நிலையங்கள் ஊரக கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 50 புதிய கால்நடைக் கிளை நிலையங்களும், 20 மருந்தகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 798 கால்நடை மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 289 கால்நடை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிற்பகல் 1–05

கோழி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்த கோழி அபிவிருத்தித் திட்டம் என்ற ஒரு திட்டம் செயல்படுத்தபட்டு வருகிறது. புதிதாக 1,214 கோழிப் பண்ணைகள் அரசு உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2 இடங்களில் மீன் பதனிடும் பூங்காக்களை ஏற்படுத்த ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. 4 இடங்களில் துறைமுகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 11 இடங்களில் மீன் இறங்குதளங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நாகப்பட்டினத்தில் மீன் வளப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் வகையில் தற்போதுள்ள படகுகளை சூரை மீன் பிடிப்பிற்கு ஏதுவாக மாற்றியமைக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென 149 படகுகள் சுமார் 3½ கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. 3,848 மீன்பிடிப் படகுகள் இயந்திரமயம் ஆக்கப்பட்டுள்ளன. மீனவர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையை எடுத்துக்கொண்டால், இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில் முன்னணியில் உள்ள மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் மேலும் சிறந்த வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். இதில் தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17 விழுக்காடாக





உள்ள தொழில்களின் தற்போதைய பங்களிப்பை 22 விழுக்காடாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இலக்கினை எய்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இன்று வரை 1 இலட்சத்து 46 ஆயிரம் பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்வகையில், 17 இந்திய மற்றும் பன்னாட்டு பெரும் நிறுவனங்களுடன் 26,625 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதுநாள் வரை 10,660 கோடி ரூபாய் முதலீடுகள் கிடைக்கப்பெற்று, 10,022 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பல ஆயிரம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுதவிர, தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனம்மூலம், 21 நிறுவனங்கள் 3,108 கோடியே 88 இலட்சம் ரூபாய் முதலீட்டினைத் தமிழகத்தில் செய்ய உள்ளன.

ஜப்பான் நாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஏதுவாக, ஜப்பான் வெளி வர்த்தக அமைப்பு, Japan External Trade Organisation (JETRO) சென்னையில் ஒரு வர்த்தக ஆதரவு மையத்தினை ஏற்படுத்தியுள்ளது. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு அரசு மற்றும் தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் 970 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது சுமார் 5,900 கோடி ரூபாய் முதலீட்டில் 18 ஜப்பானிய பெரும் தொழில் நிறுவனங்களை நிறுவ, ஜப்பான் வர்த்தக அமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இவை தவிர, 300–க்கும் அதிகமான ஜப்பானிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமையப்பெற்றுள்ளன. இதன்மூலம், ஜப்பானிய நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது என்ற பெருமையை நாம் அடைந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தென் தமிழ் மாவட்டங்களான இராமநாதபுரம், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தொழில் பூங்காக்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், பல்வேறு சலுகைகளை நான்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

அறிவித்துள்ளேன். இந்தப் பகுதிகளில் தொழில் துவங்க முனைவோருக்கு, 50 விழுக்காடு மானிய விலையில் சிப்காட் நிறுவனம்மூலம் நிலம் ஒதுக்கீடு செய்தல், நில குத்தகை பத்திரப் பதிவிற்கான முத்திரைத்தாள் கட்டணத்தில் 100 விழுக்காடு விலக்கு, மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிப்பு, உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், மதிப்புக் கூட்டு வரி அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைந்தபட்ச முதலீட்டுத் தொகையான 50 கோடி ரூபாய் என்பதை 10 கோடி ரூபாயாகக் குறைத்தல் போன்ற சலுகைகள் கிடைக்கும். இதற்கான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

எனது தலைமையிலான அரசின் இதுபோன்ற நடவடிக்கைகள்மூலம், தொழில் வளர்ச்சியில் தமிழகம் விரைவில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது தொழில் துறை வளர்ச்சி அடையவில்லை என்றும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க., ஆட்சியின்போது அதிக அளவில் தொழில் முதலீடுகள் வந்ததாகவும், அதனால்தான் மின்வெட்டுப் பிரச்சினை ஏற்பட்டதாகவும், உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை எதிர்க்கட்சியினர், தி.மு.க.வினர், குறிப்பாக தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் ஆகியோர் சொல்லி வருகின்றனர்.

Times of India நாளிதழுக்குப் பேட்டியளித்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 51 உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் 62,340 கோடி ரூபாய் முதலீடு செய்து 2,35,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாகக் கூறியுள்ளார். தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியும், தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொழில்கள் வளர்ச்சி அடைந்ததாக அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால், இதன் உண்மை நிலை என்ன என்பதை இந்த மாமன்றத்திற்கு விளக்குவது எனது கடமையெனக் கருதுகிறேன்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமும், அரசாணைகள் மூலமும் 54 தொழில்



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நிறுவனங்கள் முதலீடு செய்வதாகச் சொல்லப்பட்ட தொகை 66,664 கோடி ரூபாய் ஆகும். இதில் 15,982 கோடி ரூபாய்க்கான 12 தொழில்கள் தொடங்கப்படவே இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 2,500 கோடி ரூபாய் முதலீடு செய்ய ஒப்பந்தம் செய்த 'TATA STEEL' ஒரு ரூபாய்கூட முதலீடு செய்யவில்லை. அதேபோல், 4,320 கோடி ரூபாய் முதலீடு செய்வதாகத் தெரிவித்து, அரசாணையும் வழங்கப்பெற்ற Indian Oil Corporation நிறுவனமும், 2,000 கோடி ரூபாய் முதலீடு செய்வதாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்ட 'Signet Solar' நிறுவனமும், 2,000 கோடி ரூபாய் முதலீடு செய்வதாகச் சொன்ன 'Moser Baer Infrastructure & Developers India Ltd' நிறுவனமும் தொழில் எதையும் ஆரம்பிக்கவும் இல்லை; ஒரு ரூபாய்கூட முதலீடும் செய்யவில்லை. எஞ்சிய தொழில் நிறுவனங்கள் இன்று வரை செய்த முதலீடு 36,336 கோடியே 28 இலட்சம் ரூபாய்தான். இதில் 2011 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு செய்யப்பட்ட முதலீடுகளும் அடங்கும். எனவே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தொழில் நிறுவனங்கள் செய்த முதலீடு 62,000 கோடி ரூபாய் என்பது முற்றிலும் உண்மைக்கு மாறானது ஆகும்.

எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், கடந்த இரண்டரை ஆண்டுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் ஒற்றைச் சாளர அனுமதிமூலம் தமிழகத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மொத்த முதலீடுகள் 29,558 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முதலீட்டுத் திட்டங்களுக்கான நில ஒதுக்கீடு மற்றும் அனுமதிகள் வழங்குதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 10,660 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, தற்போது மேலும் புதிய முதலீடுகளாக 16 நிறுவனங்கள் தமிழகத்தில் 42,400 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன. அவை, இன்னும் ஓரிரு மாதங்களில் இறுதி செய்யப்பட்டு செயல்வடிவம் பெறும்.

தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிவரங்களைப் பார்த்தால், தற்போது தமிழ்நாட்டில் அதிக அளவு தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது தெரியவரும். Central Statistical Organisation என்ற மத்திய புள்ளிவிவர நிறுவனம் வெளியிடும் புள்ளிவிவரங்களின்படி, திரு. மு. கருணாநிதியே குறிப்பிட்டுள்ளதுபோல், 2008–2009 ஆம் ஆண்டு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 26,122. மார்ச் 2013 முடிவில், தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 40,352 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், வேலைவாய்ப்புகளும் தற்போது எனது ஆட்சியில் அதிகரித்துள்ளன என்பதுதான் உண்மை.

பிற்பகல் 1–15

தொழில்கள் வளர்ந்துள்ளனவா என்பதை கணிக்க முக்கியமான அளவுகோல் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகும். எனது தலைமையிலான அரசு ஏற்பட்ட பின், தமிழகத்தில் தொழிலாளர்கள் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில தொழிலாளர் ஆயுள் காப்பீட்டு நிறுவனம், அதாவது Employees Provident Fund Organisation–ல் உள்ள கணக்குப்படி பார்த்தால், 31–3–2006 ஆம் நாளைய நிலவரப்படி, பதிவு செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 55 இலட்சத்து 10 ஆயிரம் ஆகும். 31–3–2011 அன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில், பதிவு செய்த மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 84 இலட்சத்து 21 ஆயிரத்து 904 ஆகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனவே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டுக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட கூடுதல் தொழிலாளர்கள் எண்ணிக்கை 29 இலட்சத்து 11 ஆயிரம்தான். 31–12–2013 அன்றைய நிலவரப்படி இந்த எண்ணிக்கை 1 கோடியே 60 இலட்சத்து 61 ஆயிரத்து 58 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, எனது தலைமையிலான ஆட்சியின் இரண்டரை ஆண்டுகளில், 76 இலட்சத்து 39 ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனவே, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? இதுவன்றி, EPF தகுதி இல்லாத வேலைவாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், அது பற்றிய புள்ளிவிவரங்கள் எந்த நிறுவனத்தாலும் சேகரிக்கப்படுவதில்லை.

தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி தன்னுடைய அறிக்கையில், 2010 ஆம் ஆண்டு ஜூலை 8 ஆம் நாளிட்ட Wall Street Journal இதழில், அரசுத் துறை சார்ந்த 12–க்கும் மேற்பட்ட அனுமதிகளை ஒற்றைச் சாளர முறையில் ஒரே இடத்தில் வழங்குகிறது தமிழகம் என்று பாராட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார். இது போன்ற 12–க்கும் மேற்பட்ட அரசுத் துறை சம்பந்தப்பட்ட அனுமதிகளை



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஒற்றைச் சாளர முறையில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதலுக்கான மையமாக தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மையம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (GUIDANCE BUREAU) செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தினை எனது தலைமையிலான அரசுதான் 1992 ஆம் ஆண்டில் துவக்கியது. எனவே, அந்தப் பாராட்டு என்னையே சாரும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின், அதாவது Centre for Monitoring Indian Economy–ன் 2010 அக்டோபர்–டிசம்பர் காலாண்டிற்கான அறிக்கையில் தமிழகம் இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் 3–வது இடத்தில் உள்ளது என்று தெரிவித்துள்ளதாக முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதே இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின், CMIE–யின் 2013 டிசம்பர் காலாண்டிற்கான புள்ளிவிவர அறிக்கையில், ஜூன் 2011–ல் தமிழகத்தில் செய்யக் கருதப்பட்ட தொழில் முதலீடு 8 இலட்சத்து 6 ஆயிரத்து 376 கோடியே 90 இலட்சம் ரூபாய் ஆகும் என்றும், அது டிசம்பர், 2013–ல் 9 இலட்சத்து 45 ஆயிரத்து 337 கோடியே 40 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மேலும், ஜூன் 2011–ல் இந்தியாவில் செய்ய கருதப்பட்ட மொத்த தொழில் முதலீட்டில் தமிழகத்தின் பங்கு 6.1 விழுக்காடாக இருந்தது என்றும், இது டிசம்பர் 2013–ல் 6.5 விழுக்காடாக உயர்ந்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இதுமட்டுமல்லாமல், ஜூன், 2011 முதல் டிசம்பர் 2013 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் தொழில் செய்வதற்குக் கருதப்பட்ட மொத்த முதலீடு 9.76 விழுக்காடு உயர்ந்துள்ளது என்றும், இந்த முதலீடு தமிழகத்தைப் பொறுத்தவரையில் 17.23 விழுக்காடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்தியாவில் உள்ள 17,474 திட்டங்களில், தமிழகத்தில் மட்டும் 1,538 திட்டங்கள் தொடங்கக் கருதப்பட்டுள்ளது என்றும் CMIE தெரிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பொதுத் துறை நிறுவனங்கள் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் என்பதால், இந்த அரசு அதற்கு அதிக

முக்கியத்துவம் அளித்து சிறந்த முறையில் நிருவகித்து வருகின்ற காரணத்தினால், கடந்த 2012–2013 ஆம் ஆண்டில் தொழில் துறையின்கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் துறைகள் ஈட்டிய மொத்த வருவாய் 1,521 கோடியே 26 இலட்சம் ரூபாய் ஆகும். இது கடந்த 2010–2011 ஆம் ஆண்டில் 1,084 கோடியே 48 இலட்சம் ரூபாயாக மட்டுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. SIPCOT நிறுவனத்தின்மூலம், 300 தொழில் நிறுவனங்களுக்கு 2,326 ஏக்கர் நிலம் சிப்காட் தொழிற்பேட்டையில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களின்மூலம் 42,500 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இந்த நிறுவனங்களின் மொத்த முதலீடு ஏறத்தாழ 9,700 கோடி ரூபாயாகும்.

பிற்பகல் 1–20

மேலும், பல்வேறு புதிய முயற்சிகள் இத்துறையில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நாளொன்றுக்கு 600 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்றினை 100 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கியுள்ளது. இந்தியாவிலேயே காகித ஆலையில் தொடங்கப்பட்ட முதல் சிமெண்ட் உற்பத்தி ஆலை இதுவே ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமன்றி, அரசுத் துறை நிறுவனங்களிலேயே அதிக முதலீட்டுடன் அதாவது 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய காகித ஆலை ஒன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் பிற்பட்ட பகுதியான மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டிசம்பர் 2015–ல் இந்த ஆலை உற்பத்தியைத் துவங்கும். பல ஆண்டுகளாக பரிசீலனையில் மட்டுமே இருந்து வந்த அரியலூர் சிமெண்ட் ஆலையை நவீனமயமாக்கும் பணிக்காக, திட்ட ஆலோசகரின் அறிக்கை ஏற்கப்பட்டு 542 கோடி ரூபாய்க்கான திட்டத்திற்கு மாநில தொழில் திட்ட முதலீட்டுக் குழு, (மேசையைத் தட்டும் ஒலி) Project Investment Committee அனுமதி அளித்துள்ளது. இதற்கான பணிகள் விரைவில் துவங்கும்.

எனவே, புதிய தொழில் முதலீடுகள், புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவது, பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு என அனைத்திலும் பன்மடங்கு வளர்ச்சியை தமிழகம் எட்டியிருக்கிறது





என்பதை எவராலும் மறுக்க இயலாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து மீனவப் பிரச்சினையைப் பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக மீனவர்களின் தற்போதைய பிரச்சினைக்கு மூல காரணமாக விளங்குவது கச்சத் தீவு. இந்திய நாட்டிற்குச் சொந்தமான இந்த கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், திரு. கருணாநிதி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த போது, 1974 ஆம் ஆண்டு இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின்மூலம் மத்திய அரசால் இலங்கை நாட்டிற்கு தாரைவார்க்கப்பட்டது.

கச்சத் தீவு இலங்கை நாட்டிற்கு தாரைவார்க்கப்படுவதற்கு முன்பே, அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதியுடன் மத்திய அரசு இரண்டு முறை ஆலோசனை செய்திருக்கிறது. மத்திய அரசிடம் இதுபோன்றதொரு எண்ணம் இருப்பதை அறிந்த திரு. கருணாநிதி, அதுகுறித்து நாடு தழுவிய போராட்டத்தை நடத்தி, மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கலாம். ஆனால், அதைச் செய்யவில்லை. 1960 ஆம் ஆண்டிற்கு முன்பு, மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள பெருபாரி பகுதியை கிழக்கு பாகிஸ்தானுக்கு அளிக்க மத்திய அரசு முயன்றபோது, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, மத்திய அரசின் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. இதனைப் பின்பற்றி, கச்சத் தீவினைத் தாரைவார்க்கும் மத்திய அரசின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டிருக்கலாம். ஆனால் திரு. கருணாநிதி, அதையும் செய்யவில்லை. கச்சத் தீவை திருமதி இந்திரா காந்தி அவர்கள் இலங்கைக்குக் கொடுத்தது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக ஜன சங்கத் தலைவர் திரு. வாஜ்பாய் அவர்கள் அப்போது அறிவித்தார். இதைச் சுட்டிக் காட்டி, 29–6–1974 அன்று செய்தியாளர்கள் திரு. கருணாநிதியிடம் கேள்வி கேட்டபோது, “அது பற்றி நான் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை” என்று பதில் அளித்துள்ளார். அதாவது, 1974 ஆம் ஆண்டு கச்சத் தீவினை மத்திய அரசு இலங்கை நாட்டிற்குத் தாரைவார்க்க முயற்சி செய்தபோது, அதை முன்கூட்டியே அறிந்த திரு. கருணாநிதி, அதற்கு மிகப் பெரிய எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை; மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மத்திய அரசுக்கு எதிராக மிகப் பெரிய, போராட்டங்களையும் நடத்தவில்லை. உச்ச நீதிமன்றத்தில் வழக்கையும் தொடுக்கவில்லை,

இன்னும் சொல்லப்போனால், திரு. வாஜ்பாய் அவர்களின் கருத்திற்கு ஆதரவாகக்கூட தனது கருத்தைத் தெரிவிக்கவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், அடக்கமாக, சாத்வீக முறையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியதைத் தவிர வேறு எதையும் திரு. கருணாநிதி செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–25

தமிழக மீனவர்களின் உயிர்நாடியாக விளங்கும் கச்சத் தீவு பிரச்சினைக்கு நான் 1991 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு தீர்வுகளை முன்மொழிந்துள்ளேன். இவை எதையும் மத்திய அரசு நிறைவேற்றிடாத சூழ்நிலையில், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் பெருபாரி வழக்கினை மேற்கோள்காட்டி, 2008 ஆம் ஆண்டு நான் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கினைத் தொடுத்தேன். உச்ச நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "1974 மற்றும் 1976 ஆம் ஆண்டைய இந்திய–இலங்கை ஒப்பந்தங்கள் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல" என்று உத்தரவிட வேண்டுமென்றும் கோரியிருந்தேன். இந்த வழக்கில் மத்திய அரசுடன் தமிழ்நாடு அரசையும் ஒரு பிரதிவாதியாகச் சேர்த்திருந்தேன். ஆனால், அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி, தமிழகத்திற்கு சாதகமான எவ்வித மனுவையும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மாறாக, "மத்திய அரசு எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்த பிறகு மாநில அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட வேண்டிய எதிர் உறுதி ஆவணம் பற்றி முடிவு செய்யலாம்" என்று முடிவு செய்தவர் திரு. கருணாநிதி.

தி.மு.க. ஆதரவுடன் ஆட்சி நடத்தி வந்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசோ, 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இந்திய–இலங்கை நாடுகளுக்கு இடையேயான கச்சத் தீவு தாரைவார்ப்பு ஒப்பந்தங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டியதில்லை என்றும், கச்சத் தீவு இந்திய நாட்டின் ஒரு பகுதியே இல்லை என்றும் தெரிவித்து, என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினைத் தள்ளுபடி செய்யுமாறு உச்ச நீதிமன்றத்தில் எதிர் உறுதி ஆவணத்தை தாக்கல் செய்தது.



இந்தச் சூழ்நிலையில், 2013 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் தனி நபர் ஒருவரால் தொடுக்கப்பட்ட பொது நல வழக்கில், பதில் மனுவைத் தாக்கல் செய்த மத்திய அரசு, "1974 மற்றும் 1976 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்களின்படி, இந்திய கடல் எல்லைக்குள்தான் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க வேண்டும்; கடல்எல்லையைத் தாண்டிச் சென்று அண்டை நாட்டின் வளத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது" என்று தெரிவித்துள்ளது. மேலும், 1974 மற்றும் 1976 ஒப்பந்தங்களின்படி, இலங்கை கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கான எந்த உரிமையும் இந்திய மீனவர்களுக்கு இல்லை என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்திய–இலங்கை நாடுகளுக்கு இடையேயான கடல் எல்லை மற்றும் கச்சத் தீவு மீதான உரிமை ஆகியவை ஏற்கெனவே முடிந்துவிட்ட ஒன்று என்றும், மத்திய அரசால் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு விரோதமான இந்த மத்திய அரசுக்குத்தான் திரு. கருணாநிதி ஆதரவு அளித்தார், அளிக்கிறார், அளிப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட திரு. கருணாநிதி, மிக சமீபத்தில் கச்சத் தீவு குறித்து உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துவிட்டு, அதைப்பற்றி பெருமைபட்டுக்கொள்வது நகைப்புக்குரியதாக உள்ளது. திரு. கருணாநிதியின் இந்தச் செயல் தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பதற்குச் சமம். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, என்னால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமிழக அரசின் வருவாய்த் துறையையும் இணைத்துக்கொள்ளும் வகையிலான தீர்மானத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றினேன். இதன் அடிப்படையில் தமிழக அரசின் வருவாய்த் துறை கச்சத் தீவு வழக்கில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதற்கும், தாக்கப்படுவதற்கும், சிறைப் பிடிக்கப்படுவதற்கும் கச்சத் தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டதுதான் காரணம். கடந்த இரண்டே முக்கால் ஆண்டுகளில் 1,131 தமிழக மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டிவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு, இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டனர். இருப்பினும் எனது தொடர் முயற்சியின் காரணமாகவும், தூதரக நடவடிக்கைகள் காரணமாகவும் அனைத்து மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

இந்தச் சூழ்நிலையில், மீனவச் சங்கப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து தமிழக மற்றும் இலங்கை மீனவர்கள் சந்தித்துப் பேசுவதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்தனர். இவர்களின் கோரிக்கையினை ஏற்று இரு நாடுகளின் மீனவச் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தைக்கு நான் ஏற்பாடு செய்தேன்.

பிற்பகல் 1–30

இந்தப் பேச்சுவார்த்தை ஒரு சுமுகமான சூழ்நிலையில் நடைபெற ஏதுவாக, பேச்சுவார்த்தைக்கு முன்பே இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசிடம் வைக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு தமிழக சிறைச்சாலைகளில் உள்ள இலங்கை மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இதன் அடிப்படையில் கடல் எல்லையைத் தாண்டி மீன் பிடித்ததாக குற்றம் சாட்டப்பட்டு இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 295 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களது உடைமைகளும் திருப்பித் தரப்பட்டுள்ளன. இதேபோன்று, தமிழக சிறைச்சாலைகளில் இருந்த இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சுமுகமான சூழ்நிலையில், 27–1–2014 அன்று தமிழக–இலங்கை நாட்டு மீனவர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் இரட்டை மடி, pair trawling மற்றும் சுருக்கு மடி, purse seine மூலம் மீன் பிடிப்பது இந்தியாவில் தமிழகம் உட்பட பல மாநிலங்களிலும், உலக அளவில் பல நாடுகளிலும் தடை செய்யப்பட்டுள்ளதால் இதனை முழுமையாகச் செயல்படுத்துவது என்றும், இதனை மீறுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழக மீனவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை இலங்கை வட மாகாணத்தைச் சார்ந்த மீனவர்களிடம் கொண்டுசென்று அவர்களின் நம்பிக்கையினைப் பெறுவதற்காகவும், மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு மேலும் முன்னேற்றத்தை அளிக்கும் நல்லெண்ண நோக்கத்துடன் 2014 பிப்ரவரி 10 ஆம் தேதி முதல் 30 நாட்களுக்கு இழுவைப் படகுகள், இலங்கை மற்றும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இலங்கை கடற்பகுதியில் மீன் பிடிப்பதை நிறுத்தி வைக்க இலங்கை மீனவப் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர். தமிழக–இலங்கை மீனவர்களிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையை நல்லமுறையில் முன்னெடுத்துச் செல்ல இந்தக் கோரிக்கையை தமிழக மீனவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இலங்கை நாட்டின் கரையோரப் பகுதிகளில் இழுவலைப் படகுகள் மீன் பிடிப்பில் ஈடுபடுவதால், இலங்கை மீனவர்களின் வலைகள் சேதம் அடைவதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட ஒரு மாத கால தடை நடைமுறைக்கு வரும் வரை, இலங்கை நாட்டின் கரையோரப் பகுதிகளில் இழுவலைப் படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபடக் கூடாது என்பது இருநாட்டு மீனவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்காக இலங்கை நாட்டிற்கு வரும்படி தமிழக மீனவர்களுக்கு இலங்கை மீனவப் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்ததை ஏற்று, அடுத்தகட்ட பேச்சுவார்த்தையை இலங்கை நாட்டில் நடத்தி சுமுக முடிவுகள் எடுக்கப்படும்.

இலங்கை மற்றும் இந்திய நாட்டில் சிறைப் பிடித்து வைக்கப்பட்டுள்ள மீதமுள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடிப் படகுகளை உடனடியாக பரஸ்பரம் விடுதலை செய்ய வேண்டும் என இரு நாட்டு அரசுகளையும் இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளும் ஒரு மனதாகக் கேட்டுக்கொண்டனர். இந்தப் பேச்சுவார்த்தையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையினால், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னரும், இலங்கை கடற்படை இந்திய மீனவர்களை சிறைப்பிடித்துள்ளது கவலை அளிப்பதாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். எங்களைப் பொறுத்தவரையில், இலங்கை உள்நாட்டுப் போரில் சர்வதேச போர் நெறிமுறைகளை மீறி நடந்து கொண்டவர்களை போர்க் குற்றவாளிகள் என அறிவிக்கவேண்டும், இனப் படுகொலையை நடத்தியவர்கள் தண்டிக்கப்படவேண்டும், அதுவரை இலங்கை நாட்டின்மீது பொருளாதாரத் தடை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

விதிக்கவேண்டும், தமிழ் ஈழம் குறித்து இலங்கையில் உள்ள மற்றும் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தி, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கை நாட்டில் நடைபெறும் அனைத்துக் கூட்டங்களையும் இந்தியா புறக்கணிக்கவேண்டும், இலங்கை வீரர்கள் எவருக்கும் இராணுவப் பயிற்சியை இந்தியாவில் அளிக்கக்கூடாது, இலங்கை நாட்டுடனான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடாது என்பனவற்றில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுகுறித்து பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. எந்த ஒரு தீர்மானத்தின்மீதும் மத்திய அரசு இதுநாள் வரை நடவடிக்கை எடுக்கவில்லை. மத்திய அரசுக்கு அப்போது ஆதரவு அளித்த தி.மு.க.–வும் வாய் மூடி மவுனியாகத்தான் இருந்தது. காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா சார்பில் யாரும் கலந்துகொள்ளக்கூடாது என இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பும், மத்திய அரசு வெளியுறவுத் துறை அமைச்சரை அந்த மாநாட்டிற்கு அனுப்புவதில் உறுதியாக உள்ளது என்பதை அறிந்து கடைசி முயற்சியாக, மாநாடு கூடுவதற்கு இரு நாட்கள் முன்பு இந்த மாமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக்கூட்டி, காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா சார்பாக எவரும் கலந்துகொள்ளக்கூடாது என்ற தீர்மானத்தினை நிறைவேற்றினோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தத் தீர்மானத்தினைத் தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வினை முற்றிலும் புறக்கணிக்கும் வகையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொண்டார். மத்திய அரசின் இந்தச் செயல் மிகுந்த வேதனை அளிக்கிறது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1–35*

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கைக்கு எதிராக நான்கு நாடுகள் தீர்மானம் கொண்டு வரப்போவதாக செய்திகள் வந்துள்ளன. எங்களைப் பொறுத்தவரையில், இந்தியாவே, இனப் படுகொலையை நிகழ்த்தியவர்களை தண்டிக்கத் தனித் தீர்மானத்தை இலங்கைக்கு எதிராக கொண்டு வந்து, அதற்கு ஆதரவாக மற்ற நாடுகளை வாக்களிக்க வைத்து, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஆனால், தற்போதைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு இதனை நிச்சயம் நிறைவேற்றாது.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் விரைவில் வர இருக்கிறது. அப்போது ஆட்சி மாறும், காட்சிகளும் மாறும். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* மத்திய அரசின் கொள்கைகளைத் தீர்மானிக்கக்கூடிய நிலையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* அப்போது, ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வந்து அதனை வெற்றி பெறச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு நிலையை குறித்து சில குற்றச்சாட்டுகளை எதிர்கட்சியினர் தெரிவித்து வருகிறார்கள். மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு சரிவர பராமரிக்கப்படுவதில்லை, குற்றங்கள் அதிகரித்துள்ளன என்று உண்மைக்கு மாறான ஒரு தொடர் பிரச்சாரம் தி.மு.க.வினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுகுறித்த எனது விளக்கத்தை இந்த மாமன்றத்திற்கு நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், மதுரையில் பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டது. இந்தக் கொடூரக் காட்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாயின. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இதுதான் சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டிய இலட்சணமா? சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் இரு பிரிவினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதைத் தடுக்க வேண்டிய காவல் துறையின் கைகளை கட்டிப் போட்டது யார்? இது என்ன சட்டத்தை நிலைநாட்டியதன் அடையாளமா? சென்னை, உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, உயர் நீதிமன்ற நீதிபதிகள், முதலமைச்சர், காவல் துறை தலைமை இயக்குநர் ஆகியோர் முன்னிலையில் ஒரு ரவுடிக் கும்பல் வழக்கறிஞர்களைத் தாக்கியது. அவர்கள்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையே? இதற்குப் பெயர்தான் சட்டத்தின் ஆட்சியா? இதுபோன்ற எண்ணற்ற குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவை வெறும் குற்றச்சாட்டுகள் அல்ல–உண்மைச் சம்பவங்கள்! சுருக்கமாகச் சொல்ல

வேண்டுமென்றால், சட்டத்தின் ஆட்சிக்கு பதிலாக சமூக விரோதிகளுக்கான ஆட்சிதான் நடைபெற்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆட்சியில் இருந்த போதுதான் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டார் என்றால், ஆட்சியில் இல்லாதபோதும் சட்டத்திற்கு விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மதுரை புறநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் உட்பட ஐந்து பேர்மீது ஒருவர் தீண்டாமை வன்கொடுமைச் சட்டத்தின்கீழ் காவல் துறையிடம் புகார் கொடுத்தார். இதனுடைய உண்மைத் தன்மையை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது காவல் துறை.

ஆனால், இதுகுறித்து திரு. கருணாநிதியே நடவடிக்கை எடுத்து இருக்கிறார். இந்தப் பிரச்சினை குறித்து *28–1–2014* அன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த திரு. கருணாநிதி, "கட்சியிலே உள்ள மதுரை மாவட்ட கழகச் செயலாளர் மூர்த்தி அவர்கள்மீது பி.சி.ஆர். சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போலீசாருக்கு எழுதிக் கொடுத்தவரை, கட்சித் தலைவர் என்ற முறையில் நான் விசாரிப்பதும், கண்டிப்பதும் எப்படிக் குற்றமாகும். . . ?" என்று வினவியுள்ளார். அதாவது சட்டத்திற்குப் புறம்பாக செயல்பட்டவர்மீது காவல் துறையில் புகார் கொடுப்பதே தவறு என்று கூறி இருக்கிறார். ஆட்சியில் இல்லாதபோதே இப்படி என்றால், ஆட்சியில் இருந்தபோது சட்டம்–ஒழுங்கு எப்படி நிலைநாட்டப்பட்டிருக்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை உங்களின் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

பிற்பகல் *1–40*

மதுரை பத்திரிகை அலுவலக எரிப்புச் சம்பவத்திற்கும், தா. கிருட்டிணன் கொலை வழக்கிற்கும் மூல காரணம் யார் என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. மேற்கண்ட இரண்டு சம்பவங்களும் தானாகவே நடந்தது போல், இந்த இரண்டு வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

தற்போது, தன்னுடைய இளைய மகன் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் வாழ்வு பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அழகிரி சொல்லியவற்றை பத்திரிகையாளர்களிடம் திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார். இதோடு நின்றுவிடாமல், பாரதப் பிரதமருக்கு திரு. டி.ஆர். பாலு மூலம் கடிதம் எழுதச் சொல்லியிருக்கிறார். திரு. பாலுவும், *27–1–2014* அன்று பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில், L.T.T.E., மத அடிப்படைவாதிகள் மற்றும் அரசியல் விரோதிகளால் திரு. மு.க. ஸ்டாலினுக்கு ஆபத்து உள்ளது என்று குறிப்பிட்டு, Z PLUS பாதுகாப்பு கொடுக்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது எனச் செய்திகள் வெளி வந்துள்ளன. இலங்கை இனப் படுகொலையில் தமிழ் ஈழ விடுதலை அமைப்பினர் மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்ட நிலையில், L.T.T.E. அமைப்பிடமிருந்து ஆபத்து என்பது இல்லாத ஒன்றாகும். எந்த ஒரு பெயரும் குறிப்பிடாமல், மத அடிப்படைவாதிகளிடம் இருந்து அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதுவும் கற்பனையான ஒன்று. கடைசியாக, பல தரப்பட்ட அரசியல் விரோதிகளிடமிருந்து அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. யார் யார் அந்த அரசியல் விரோதிகள் என்பது குறிப்பிடப்படவில்லை. கடிதம் எழுதியுள்ள தருணத்தையும், தற்போது திரு. கருணாநிதியின் குடும்பத்தில் நடக்கும் குழப்பதையும் ஒப்பிடுகையில் திரு. மு.க. அழகிரியின்மூலம் ஆபத்து என்பது மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தனது இளைய மகனுக்கு, மூத்த மகனால் ஆபத்து என்றவுடன் பாரதப் பிரதமருக்கு வரிந்து கட்டிக் கொண்டு கடிதம் எழுதச் சொல்லும் திரு. கருணாநிதி, பத்திரிகை எரிப்புச் சம்பவம் மற்றும் தா. கிருட்டிணன் கொலை வழக்குகளில் என்ன நிலைப்பாட்டை எடுத்தார்? தனக்கு ஒரு நீதி; தன் குடும்பத்திற்கு ஒரு நீதி; மற்றவர்களுக்கு ஒரு நீதி, *(மேசையைத் தட்டும் ஒலி)* தனக்கு ஒரு நீதி, தன் குடும்பத்திற்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு ஒரு நீதி என்ற ரீதியில் செயல்படும் திரு. கருணாநிதியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தி.மு.க.–வினர் சட்டம்–ஒழுங்கு குறித்துப் பேசுவது நகைப்புக்குரியதாக உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

எங்களைப் பொறுத்தவரையில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு வருகிறோம். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே எங்களின் தாரக மந்திரம்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சமூக விரோதிகளின் ஆட்சி என்று இருந்த நிலைமை மாற்றப்பட்டு சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையினர் யாருக்காகவும், எதற்காகவும், அஞ்சாமல் சட்டப்படியான நடவடிக்கையை எடுப்பதற்கான சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர். இதன் காரணமாக, தமிழகத்தில் பொது அமைதி சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. கொள்ளை, வழிப்பறி, ஆட்கடத்தல், கள்ளக் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடுவோர்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2005 ஆம் ஆண்டு எனது முந்தைய ஆட்சியில் 1,366 ஆக இருந்த கொலைகளின் எண்ணிக்கை, 2010 ஆம் ஆண்டு முந்தைய தி.மு.க. ஆட்சியில் 1,715 ஆக உயர்ந்தது. இதேபோல் ஆதாயக் கொலைகள் 74–ல் இருந்து 153 ஆக உயர்ந்தது.

2005 ஆம் ஆண்டு 73 என்றிருந்த கூட்டுக் கொள்ளைகள் 2010 ஆம் ஆண்டு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 85 ஆகவும், கொள்ளைகள் 437–ல் இருந்து 1,817 ஆகவும், கன்னக் களவுகள் 3,738–ல் இருந்து 4,715 ஆகவும் உயர்ந்தன.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த ஐந்து ஆண்டு கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கொலை வழக்குகள் 25.5 விழுக்காடும், ஆதாயக் கொலை 106.75 விழுக்காடும், கூட்டுக் கொள்ளை 16.44 விழுக்காடும், கொள்ளைகள் 315.8 விழுக்காடும், கன்னக் களவு 26 விழுக்காடும் அதிகரித்துள்ளன.

பிற்பகல் 1–45

கொலைகளின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால் முந்தைய தி.மு.க. ஆட்சியில், ஆண்டொன்றுக்கு 5.11 விழுக்காடு கூடியுள்ளது. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2011 ஆம் ஆண்டு 1,747 கொலைகளும், 2012 ஆம் ஆண்டு 1,806 கொலைகளும், சென்ற 2013 ஆம் ஆண்டு 1,806 கொலைகளும் நடந்துள்ளன. தி.மு.க. ஆட்சியின் போதான அதிகரிப்பு விகிதத்துடன் ஒப்பிடும்போது, கடந்த இரண்டு ஆண்டுகளில் கொலைகளின் அதிகரிப்பு 3.42 விழுக்காடு குறைந்துள்ளது என்பதே உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

கொலைகளிலேயே மிகவும் கொடியவை ஆதாயக் கொலைகளாகும். இவற்றின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 153 ஆக இருந்தது. ஆனால் 2011 ஆம் ஆண்டு ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 123 ஆகக் குறைந்தது. 2013 ஆம் ஆண்டு 121 ஆக மேலும் குறைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2013 ஆம் ஆண்டு ஆதாயக் கொலைகள் 1.63 சதவிகிதம் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வழக்குகளின் சதவிகிதம் இவ்விரு ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 0.81 சதவிகிதம் குறைந்துள்ளது. ஆனால் இதற்கு நேர்மாறாக, தி.மு.க. ஆட்சியின்போது, ஆண்டிற்கு சராசரியாக 21.35 சதவிகிதம் ஆதாயக் கொலைகள் அதிகரித்திருந்தன.

கூட்டுக் கொள்ளை வழக்குகளைப் பொறுத்தவரையில், 2011 ஆம் ஆண்டு 101 வழக்குகள் என்றிருந்த எண்ணிக்கை, 2012 ஆம் ஆண்டு 97 ஆகக் குறைந்தது. 2013 ஆம் ஆண்டு 83 ஆகக் குறைந்துவிட்டது. இவ்வழக்குகள் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2013 ஆம் ஆண்டு 17.82 விழுக்காடு குறைந்துள்ளது. இவ்விரு ஆண்டுகளில் சராசரியாக 8.91 சதவிகிதம் குறைந்துள்ளது. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கூட்டுக் கொள்ளை வழக்குகள் சராசரியாக ஆண்டொன்றுக்கு 3.29 சதவிகிதம் அதிகரித்தன.

களவு வழக்குகளைப் பொறுத்தவரையில் 2010 ஆம் ஆண்டு 14,583 வழக்குகள் என்று இருந்த எண்ணிக்கை, 2011 ஆம் ஆண்டு 13,924 ஆகவும், 2012 ஆம் ஆண்டு 11,996 ஆகவும், 2013 ஆம் ஆண்டு 11,950 ஆகவும் படிப்படியாகக் குறைந்துள்ளன. 2011 ஆம் ஆண்டு வழக்குகளை 2013 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில் 14.18 விழுக்காடு குறைந்துள்ளது. இது ஆண்டிற்கு 7.09 விழுக்காடு குறைந்து வருவதைக் காட்டுகிறது.

சொத்து தொடர்பான வழக்குகளைப் பொறுத்தவரையில் 2010 ஆம் ஆண்டு 21,353 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இந்த எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டில் 21,062 ஆகவும், 2012 ஆம் ஆண்டு 18,585 ஆகவும் குறைந்தது. ஆனால், 2013 ஆம் ஆண்டு 19,465 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு தாக்கலான மொத்த சொத்து வழக்குகளை 2013 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடும்போது 1,888 வழக்குகள் குறைந்துள்ளன. இதிலிருந்து காவல் துறையினர் எடுத்துவரும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளினால் சொத்து சம்பந்தமான ஒட்டுமொத்த குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பது தெரியவரும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி, மற்ற மாநிலங்களில் தாக்கலான குற்றங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் தாக்கலான குற்றங்களின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகின்றன. உதாரணத்திற்கு, 2012 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநிலத்தில், 4,966 கொலை வழக்குகளும், பீகாரில் 3,566 கொலை வழக்குகளும், ஆந்திராவில் 2,717 கொலை வழக்குகளும், மகாராஷ்டிராவில் 2,712 கொலை வழக்குகளும், மத்தியப் பிரதேசத்தில் 2,373 கொலை வழக்குகளும் மற்றும் மேற்கு வங்கத்தில் 2,252 கொலை வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. ஆனால், இவற்றுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் கொலை வழக்குகளின் எண்ணிக்கை 1,806 தான்.

பிற்பகல் 1–50

குற்ற நிகழ்வுகளை ஒப்பிடும்போது, குற்ற விகிதம் என்ற எண்ணிக்கை பயன்படுத்தப்படுகிறது. இது 1 இலட்சம் மக்கள்தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்பதன் குறியீடு ஆகும். 2012 ஆம் ஆண்டு நடந்த சொத்து சம்பந்தமான குற்றங்களில் தமிழ்நாடு குற்ற விகிதம் 27.16 ஆகும். இது தேசிய சராசரியான 36.78 சதவிகிதத்துடன் ஒப்பிடும்போது, 9.62 புள்ளிகள் குறைவாக உள்ளது. ஆனால், இக்குற்ற விகிதம் அரியானாவில் 91.6 ஆகவும், மகாராஷ்டிராவில் 62.07 ஆகவும், மத்தியப் பிரதேசத்தில் 47.98 ஆகவும், கர்நாடகாவில் 45.10 ஆகவும், ஆந்திரப் பிரதேசத்தில் 42.82 ஆகவும், ராஜஸ்தானில் 41.64 ஆகவும், குஜராத்தில் 37.16 ஆகவும், ஒடிஸாவில் 36.81 ஆகவும் உள்ளது.

காவல் துறையினர், குற்ற வழக்குகளில் திறமையாக புலன் விசாரணை செய்து பல முக்கிய கொலை, கொள்ளை வழக்குகளில் எதிரிகளைக் கைது செய்து, களவு போன பொருட்களை மீட்டு வருவதுடன், தொடர்ந்து குற்றம் செய்யும் குற்றவாளிகளைத் தடுப்புக் காவலில் வைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு பல்வேறு தடுப்புக் காவல் சட்டங்களின்கீழ் 2,158 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இந்த எண்ணிக்கை கடந்த 2013 ஆம் ஆண்டு 3,433 ஆக உயர்ந்தது.

2012 ஆம் ஆண்டு தாக்கலான சொத்து சம்பந்தமான வழக்குகளில், 13,275 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, எதிரிகள் கைது செய்யப்பட்டு, களவு போன 80 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சொத்துகள் மீட்கப்பட்டன. சென்ற 2013 ஆம் ஆண்டு



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தாக்கலான சொத்து சம்பந்தமான வழக்குகளில், இதுவரை 73 சதவிகித வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, எதிரிகள் கைது செய்யப்பட்டு, களவு போன 146 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையினர் சொத்து சம்பந்தமான வழக்குகளில் குற்றவாளிகளைக் கைது செய்து, களவு போன சொத்துகளை மீட்பதுடன், குற்றவாளிகள் மீண்டும் பிணையில் வெளிவந்து குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளையும் சிறப்பாக எடுத்து வருகின்றனர்.

குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகள் குறித்து மாநில உளவுத் துறையினர் முன்கூட்டியே அளிக்கும் தகவல்களின் அடிப்படையில், மாவட்டக் காவல் துறையினர் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கைது செய்து வருவதுடன், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் மக்கள்தொகை அதிகரிப்பு, வளர்ந்து வரும் பொருளாதாரம், தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம், மாறி வரும் சமுதாயச் சூழ்நிலை மற்றும் நகரமயம் ஆகுதல் போன்றவற்றால் குற்ற நிகழ்வுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. நமது மாநிலத்தைப் பொறுத்தவரை, காவல் துறையினர் குற்றவாளிகள்மீது எடுத்துவரும் கடும் நடவடிக்கைகளினால் குற்ற நிகழ்வுகள் குறைந்து வருகின்றன.

மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறிப்பாக வரதட்சணைக் கொலைகள், பாலியல் கொடுமைகள், மானபங்க வழக்குகள் போன்ற முக்கிய குற்றங்கள் குறைந்து வருவதோடு, மற்ற குற்றங்களும் கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருகின்றன. உதாரணமாக, தி.மு.க. ஆட்சியின் இறுதியில் 2010 ஆம் ஆண்டு, 165 ஆக இருந்த வரதட்சணைக் கொலைகள், 2011 ஆம் ஆண்டு 152 ஆகவும், 2012 ஆம் ஆண்டு 110 ஆகவும் குறைந்துள்ளன. 2013 ஆம் ஆண்டு வரதட்சணைக் கொலை வழக்குகள் 118 மட்டுமே தாக்கலாகியுள்ளன. 2010 ஆம் ஆண்டு தாக்கலான வரதட்சணைக் கொலை வழக்குகளை 2013 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில், இக்கொலை வழக்குகள் 28.48 சதவிகிதம் குறைந்துள்ளன.

மேலும், கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாலியல் கொடுமைகள் 638. இது 2011 ஆம் ஆண்டு 464 ஆகவும்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

*2012 ஆம் ஆண்டு 382 ஆகவும், 2013 ஆம் ஆண்டு 313 ஆகவும் குறைந்துள்ளன. 2010 ஆம் ஆண்டு தாக்கலான பாலியல் கொடுமை வழக்குகளை 2013 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில், இவ்வழக்குகள் 51 சதவிகிதம் குறைந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1–55*

*கடந்த தி.மு.க. ஆட்சியில், 2010 ஆம் ஆண்டு 1,405 மானபங்க வழக்குகள் தாக்கலாகி உள்ளன. ஆனால், 2013 ஆம் ஆண்டு 1,271 மானபங்க வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. 2010 ஆம் ஆண்டு தாக்கலான மானபங்க வழக்குகளை 2013 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில், இவ்வழக்குகள் 9.53 சதவிகிதம் குறைந்துள்ளன.*

*மேலும், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிவர அறிக்கையின்படி, 2012 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் 30,942 பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இது ஆந்திரப் பிரதேசத்தில் 28,171 ஆகவும், உத்தரப் பிரதேசத்தில் 23,569 ஆகவும், ராஜஸ்தானில் 21,106 ஆகவும், மத்தியப் பிரதேசத்தில் 16,832 ஆகவும், மகாராஷ்டிராவில் 16,353 ஆகவும், அசாமில் 13,544 ஆகவும், ஒடிசாவில் 11,988 ஆகவும், பீகாரில் 11,229 ஆகவும், கேரளாவில் 10,930 ஆகவும், கர்நாடகாவில் 10,366 ஆகவும், குஜராத்தில் 9,561 ஆகவும் உள்ளன. ஆனால் 2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடந்த பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 7,192 மட்டுமே. இதிலிருந்து தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிராகத் தாக்கலாகும் மொத்த குற்றங்களை பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் குற்றங்கள் குறைவாகவே உள்ளன என்பது தெரிய வரும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சென்னை மாநகரத்தை எடுத்துக்கொண்டால், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குற்றங்களின் எண்ணிக்கை 30 விழுக்காடு குறைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டு 3,172 என்று இருந்த குற்றங்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டு 2,232 ஆகக் குறைந்துள்ளது.*

*ஆதாயக் கொலைகளைப் பொறுத்தவரையில், 2010 ஆம் ஆண்டில் 20 ஆக இருந்த குற்றங்கள் 2013 ஆம் ஆண்டு 15 ஆகக் குறைந்துள்ளன.*

*இதேபோன்று 2010 ஆம் ஆண்டு 173 ஆக இருந்த வழிப்பறிக் குற்றங்கள் 2013 ஆம் ஆண்டு 81 ஆகக் குறைந்துள்ளன.*



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*வீடு புகுந்து திருடும் குற்றங்களைப் பொறுத்தவரையில், 2010 ஆம் ஆண்டு 743 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 2013 ஆம் ஆண்டு 467 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன.*

*திருட்டுக் குற்றங்களை எடுத்துக்கொண்டால், 2010 ஆம் ஆண்டு 1,122 என்று இருந்த குற்றங்கள் 2013 ஆம் ஆண்டு 658 ஆகக் குறைந்துவிட்டன.*

*கொடுங்காயங்களை விளைவிக்கும் குற்றங்களைப் பொறுத்தவரையில், 2010 ஆம் ஆண்டு 95 ஆக இருந்த குற்றங்கள் 2013 ஆம் ஆண்டு 48 ஆகக் குறைந்துவிட்டன.*

*ஆள் கடத்தல் குற்றங்களைப் பொறுத்தவரையில், 2010 ஆம் ஆண்டு 77 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால், 2013 ஆம் ஆண்டு 59 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன.*

*இதேபோன்று, 2010 ஆம் ஆண்டு 294 கொலை முயற்சி குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால், 2013 ஆம் ஆண்டில் 203 குற்றங்களே நிகழ்ந்துள்ளன.*

*பெண்களுக்கு எதிரான குற்ற விகிதம் புது டெல்லியில் 68.56 எனவும், பெங்களூருவில் 55.76 எனவும், ஐதராபாத்தில் 50.45 எனவும், கொல்கத்தாவில் 30.52 எனவும் உள்ள நிலையில் சென்னையில் இது 19.32 என்ற அளவில் மட்டுமே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*எனவே, தமிழ்நாட்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்ற எதிர்க்கட்சியினரின் பிரச்சாரம் உண்மைக்கு முற்றிலும் மாறானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் பேசும்போது அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பட்டயப் படிப்பு படிக்கும் 1,400 பேரில் 600 பேருக்குத்தான் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது என்றும், மற்றவர்களுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.*

*அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவியர் அனைவருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும், மாணவியரின் சேர்க்கை உயர்த்தப்பட்டதற்கு ஏற்ப கல்வி உதவித்*

தொகை வழங்கும் மாணவியரின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. தற்போது 23 அரசு செவிலியர் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் 2,000 மாணவியர் சேர்க்கப்பட்டு பட்டயப் படிப்பு பயின்று வருகின்றனர்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களின் வேண்டுகோளினை ஏற்று வரும் கல்வியாண்டு முதல் அரசு செவிலியர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இதன்மூலம் அரசுக்குக் கூடுதலாக ஆண்டொன்றுக்கு 3 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

இதேபோன்று, சிவகங்கை நகராட்சியின் பொன் விழா ஆண்டு வரும் ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் தொடங்குகிறது என்றும், அதற்கென சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றும் வகையில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களால் இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டது. இதனை ஏற்று, சிவகங்கை நகராட்சி பொன் விழா ஆண்டில் சில புதிய பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 25 கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், விருதுநகர் மாவட்டத்தில் 24–11–2013 அன்று குளத்தில் விழுந்து 5 மாணவிகள் இறந்துவிட்டார்கள் என்றும், இறந்த 5 மாணவிகளின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் வைத்தார். இந்தக் கோரிக்கை ஏற்கப்படுகிறது. குளத்தில் விழுந்து இறந்த 5 மாணவிகளின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் பேசும்போது, 23–1–2014 அன்று தடம் எண் 86, மார்த்தாண்டம், பத்தமடை நகரப் பேருந்தில் பயணம் செய்த 7 ஆம் வகுப்பு மாணவி பேருந்திலிருந்து விழுந்து உயிரிழந்தார் என்றும், அந்த மாணவியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இந்தக் கோரிக்கையை ஏற்று, அந்த மாணவியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சிவராத்திரி விழா கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுகிறது என்று தெரிவித்து, அன்றைய நாளை விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டுமெனவும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார். இவரது கோரிக்கையினை ஏற்று, சிவராத்திரி தினத்தன்று 12 சிவாலயங்களுக்கு பக்தர்கள் ஓடிச்சென்று வழிபடும் சிவாலய ஓட்டம் வெகு விமரிசையாக நடைபெறும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் பேசும்போது, பல்நோக்கு மருத்துவமனையில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டினைக் கூறியுள்ளார். இந்தப் பலதுறை உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவமனைக்காக தெரிந்தெடுக்கப்பட அறிவிக்கப்பட்ட 83 மருத்துவர் பணியிடங்களில் இதுவரை 72 மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 55 மருத்துவர்கள் ஏற்கெனவே அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். மாற்றுப் பணி அடிப்படையில் இவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அரசுப் பணிக்குத் தெரிந்தெடுக்கப்படும்போது இட ஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் இவர்கள் பணியமர்த்தப்பட்டவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் உள்ள 28 மருத்துவர் பணியிடங்களைப் பொறுத்தவரை, 17 பணியிடங்களுக்குத் தகுதியான மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 7 மருத்துவர்கள் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றி, ஓய்வுபெற்ற அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் ஆவர். 10 மருத்துவர்கள் தகுதியின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட தனியார் மருத்துவர்கள் ஆவர். இந்த

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

17 மருத்துவர்களில் 9 பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினையும், 4 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினையும், 3 பேர் ஆதி திராவிடர் வகுப்பினையும், ஒருவர் இதர வகுப்பினையும் சேர்ந்தவர்கள் ஆவர். மீதம் உள்ள 11 பணியிடங்களைப் பொறுத்தவரை, விண்ணப்பத்தின் அடிப்படையில், தகுதியான நபர்கள் கிடைக்காத நிலையில், அரசு மருத்துவமனைகளில் இருந்து மாற்றுப் பணிமூலம் இந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும். எனவே, பலதுறை உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவமனைப் பணியிடங்களில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சரியல்ல. இட ஒதுக்கீடு முழுமையாகப் பின்பற்றப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தகுதித் தேர்வு. அதாவது, Teachers' Eligibility Test தேர்வில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு மதிப்பெண்ணில் சலுகை வழங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளினை சில உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். 2009 ஆம் ஆண்டைய குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுபவர்கள் அரசால் நியமிக்கப்பட்ட நிறுவனத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம், அதாவது National Council for Teacher Education ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையிலான ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்வினைக் கட்டாயமாக்கி அறிவிக்கை வெளியிட்டுள்ளது. தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அறிவிக்கைகளின்படி ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புக்கான இடைநிலை ஆசிரியர்கள் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் ஒழுங்குமுறை விதிகள் 2002–ன்படி ஆசிரியர் பயிற்சியில் இரண்டு ஆண்டு பட்டயப் படிப்பும், மேல்நிலைத் தேர்வில் குறைந்தபட்சம் 45 சதவீதம் மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். 2002 ஆம் ஆண்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கு முன் இரண்டு ஆண்டு பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால், மேல்நிலைத் தேர்வில் குறைந்தபட்சம் 50 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். அதேபோன்று 6 முதல் 8 ஆம் வகுப்பிற்கான பட்டதாரி ஆசிரியர்கள்



2014 பிப்ரவரி 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் ஒழுங்குமுறை விதிகள் 2002–ன்படி ஓர் ஆண்டு பி.எட். பட்டமும், பட்டப் படிப்பில் 45 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். 2002 ஆம் ஆண்டுக்கு முன் பி.எட். பட்டம் பெற்றிருந்தால் பட்டப் படிப்பில் 50 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

இதன் பின்னர், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் 1–4–2011 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தில் அந்தந்த மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படும் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு ஏற்ப தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு மட்டும் மேல்நிலைத் தேர்வு மற்றும் பட்டப் படிப்புத் தேர்வில் குறைந்தபட்ச மதிப்பெண்களில் 5 சதவீதம் தளர்வு அளிக்கலாம் என தெரிவித்துள்ளது. இதன்படி 2002 ஆம் ஆண்டுக்குப் பின் ஆசிரியர் பயிற்சி பட்டயப் படிப்பை முடித்தவர்கள் மேல்நிலைத் தேர்வில் 40 சதவீத மதிப்பெண்ணும், அதற்கு முன்னர் தேர்வு பெற்றவர்கள் 45 சதவீத மதிப்பெண்ணும் பெற்றிருக்க வேண்டும். ஆனால், தற்பொழுது தமிழகத்தில் மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளவர்கள், அதாவது 35 சதவீதம் பெற்றவர்களும் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். எனவே, மத்திய அரசு அறிவித்துள்ளதைவிட அதிகச் சலுகை தமிழ்நாட்டில் அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, 2002 ஆம் ஆண்டிற்குப் பின் பி.எட். படித்தவர்கள் பட்டப் படிப்பில் 45 சதவீத மதிப்பெண்களும், அதற்கு முன்னால் பி.எட். படித்தவர்கள் பட்டப் படிப்பில் 50 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். தமிழக பல்கலைக்கழகங்கள் 40 சதவீத மதிப்பெண் பெற்றிருந்தாலே பட்டம் வழங்குவதால், மத்திய அரசு அறிவித்துள்ளதைவிட தமிழ்நாட்டில் அதிக சலுகை அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற 60 சதவீதம் பெற வேண்டும் என தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேசமயத்தில், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு அந்தந்த மாநிலத்திலுள்ள இட ஒதுக்கீடுக் கொள்கையின்படி தேர்ச்சி மதிப்பெண்களில் சலுகை வழங்கிட பரிசீலிக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர் தகுதித் தேர்வின் தேர்ச்சி, இட ஒதுக்கீட்டை நிர்ணயிப்பது இல்லை.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 3

ஆசிரியர்களை பணியிடங்களில் நியமிக்கும்போதுதான் இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுகிறது. ஆசிரியர் நியமனத்தில் 69 சதவீதம் இட ஒதுக்கீடு முழுமையாகப் பின்பற்றப்படுகிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனினும், இந்த அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற 60 சதவீதம் மதிப்பெண் பெறவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், இனி தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு 5 சதவீத மதிப்பெண் சலுகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் ஆசிரியர் தகுதித் தேர்வில் இனி 55 சதவீத மதிப்பெண் பெற்றாலே தேர்ச்சி பெற்றவர்கள் என அறிவிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சலுகை தற்போது ஆகஸ்ட் 2013 ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்டுள்ள தகுதித் தேர்வுக்கும் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தங்களது கருத்துகளை, யோசனைகளை, ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தக்க விளக்கங்களைத் தந்துள்ளேன். இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ நான் எடுக்கும் முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்ற வேண்டுகோளினை விடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரை ஆற்றியவர்களுக்கும், ஆக்கபூர்வமான கருத்துகளை வெளிப்படுத்தியவர்களுக்கும் என்னுடைய அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுமார்



2014 பிப்ரவரி 3] [திரு. சு. குணசேகரன்]

இரண்டு மணி நேரத்திற்கு மேலாக, தமிழக அரசினுடைய பல்வேறு சாதனைகளை, கடந்த ஆட்சியின் சாதனைகளோடு மட்டுமல்ல, இந்தியாவிலே பல மாநிலங்களில் இருக்கக்கூடிய ஆட்சிகளின் நிலைகளோடு ஒப்பிட்டு, எப்படி தமிழகத்தில் சாதனை புரிந்திருக்கிறோம் என்று விளக்கமாக உரையாற்றியதோடு மட்டுமல்லாமல், ஆளுநர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கெடுத்து, நான் முன்வைத்த சில கருத்துகளில், Hat Trick அறிவிப்புகளாக மூன்று அறிவிப்புகளை அறிவித்ததற்காக என் சார்பிலும், சிவகங்கை தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, எதிர்க்கட்சியினர், தோழமைக் கட்சியினர் என்ற பாகுபாடு இல்லாமல், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்பதைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலே ஆளுகிற அரசு பொருளாதாரக் கொள்கைகளில் இந்திய நாட்டு மக்களை வேதனையின் உச்சிக்கு இட்டுச்செல்கின்ற இந்த நேரத்தில், குறிப்பாக மத்திய அரசு தமிழகத்தைப் புறக்கணிக்கின்ற இந்த நேரத்தில், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளையும் ஏற்று, அறிவிப்புகளை வெளியிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ஜனநாயக நடைமுறையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த ஜனநாயக நடைமுறையை ஏற்படுத்திய செயல்பாட்டிற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டுகளைத் தெரிவித்து, நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தகுதித் தேர்விலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களிலே இஸ்லாமியர்களுக்கெல்லாம் 5 சதவிகித மதிப்பெண்கள் தளர்வை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2014 பிப்ரவரி 3

ஏற்கெனவே, இந்த அவையில் எதற்கெடுத்தாலும் வேறு மாநிலத்தை ஒப்பிட்டுப் பேசினார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அந்தத் தகுதித் தேர்வில் கால அளவை மாற்றினார்கள். பிற மாநிலங்களில் அந்தத் தேர்வு ஒன்றரை மணி நேரம்தான். இங்கே மாணவர்களுக்கு வசதிக்காக மூன்று மணிநேரம் என்று மாற்றி, ஒன்றரை மணி நேரம் அதிகமாக நீட்டித்துத் தந்தவர் நமது போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2 மணி நேரம் மூன்றாண்டுக் கால தமிழக அரசின் சாதனைகளையெல்லாம் முத்து முத்தாக இங்கே எடுத்துவைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கேயிருந்து பேசியவர்கள், வெளியே இருந்து அறிக்கை விட்டவர்கள் எல்லோருக்கும் பதில் தருகிற வகையிலே, புள்ளிவிவரங்களோடு அவருக்கே உரிய இயல்போடு பதிலை எடுத்துவைத்த பாங்கு இருக்கிறதே, அவர் இந்தியாவின் தலைசிறந்த பாராளுமன்ற ஜனநாயகவாதி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நிரூபிக்கும்வகையில், பதிலுரையை மகுடமாய் எடுத்துவைத்திருக்கிறார்கள். அவருக்கு எங்கள் நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

பிற்பகல் 2–15

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், இந்த அரசிடமும் சில கோரிக்கைகளை வைத்தேன். ஜனநாயக ரீதியிலே எதிர்க்கட்சி உறுப்பினர் என்று பார்க்காமல் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு தந்து, எனக்கு இந்த அவையிலே தேவையான பிரச்சினைகளைச் சொல்வதற்கும் வாய்ப்பு தந்தார்கள். குறிப்பாக, "சிவராத்திரி தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும். அந்த சிறப்பு நிகழ்ச்சிகளில் இந்துப் பெருமக்கள் கலந்துகொண்டு, 12 சிவாலயங்களுக்கும் செல்கின்றபோது நெருக்கடி வரும். எனவே, இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளக்கூடிய அந்த நிகழ்ச்சிக்கு பக்கபலமாக, உதவியாக இருக்க வேண்டும்; அந்த நாளை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும்" என்ற கோரிக்கையை நான் வைத்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, சிறப்பான அறிவிப்பை கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்குத் தந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2014 பிப்ரவரி 3] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

அதேபோன்று, 21–1–2014 அன்று விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஒரு ஏழை மாணவி பேருந்து விபத்தில் இறந்துவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாயை கொடுத்திருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். எனினும், அந்த மாணவியின் குடும்பம் ஏழைக் குடும்பமாக இருப்பதால், இன்னும் கொஞ்சம் அதிகமான நிவாரணத் தொகையை அந்தக் குடும்பத்திற்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அன்பிற்குரிய சக உறுப்பினர்கள்கூட, "நீங்கள் நிவாரணத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய்தானே கேட்டீர்கள்" என்று கூறினார்கள். நான் அப்படிக் கேட்கவில்லை. நான், "அதிகமான உதவித் தொகையைக் கொடுத்து அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டும்" என்றுதான் கேட்டேன். அதற்கு தகுந்த உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்தேன். அவர்கள் சொன்ன, செய்த அந்த அற்புதமான செயலுக்கு, எதிர்க்கட்சி என்றும் பாராமல் செய்த அந்த நன்மைக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சற்றேறக்குறைய இரண்டு மணி நேரத்திற்கு மேலாக, கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்றிருக்கிற ஏராளமான சாதனைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, மத்திய அரசு நம்மைத் தொடர்ந்து வஞ்சித்த போதும்கூட, அந்த வஞ்சகத்தையெல்லாம் எதிர்த்து, நிலைகொண்டு போராடி, தமிழகத்தை எப்படி முன்னேற்றியிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அவர் பேசியபோது, "வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மத்தியில் ஆட்சி மாறும்; காட்சிகளும் மாறும்" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தமிழகம் நிச்சயமாக நடத்திக் காட்டப்போகிறது என்பதை இந்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 பிப்ரவரி 3

அதேபோன்று, ஆசிரியர் தகுதித் தேர்வில், ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) ஆகியோருக்கு மதிப்பெண் தளர்வு செய்து தர வேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையினை ஏற்று, அவர்களுக்கு 5% மதிப்பெண் தளர்வு செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்றையதினம் நான் கொடுத்திருக்கிற திருத்தத்தில், “கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கிற, விபத்தில் இறந்திருக்கிற சில பேருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவிகள் வழங்க வேண்டும்” என்று கோரியிருக்கிறேன். அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தந்திருக்கக்கூடிய மதிப்பெண் தளர்வை ஒரு பெரிய விஷயமாக பார்க்கிறோம். இன்றையதினம் அந்த மதிப்பெண் தளர்வைத் தந்து, அந்த மக்களுக்கு ஆதரவு தந்து, அதிகமான இடங்களிலே அவர்கள் பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளித்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர் பிரச்சினையில், மத்திய அரசு எடுத்த சில முடிவுகளுடன் இணைந்து தமிழக அரசு எடுத்த முக்கிய முயற்சிகளின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கக்கூடிய சில தீர்வுகளைப் பற்றியும், அந்தச் சம்பவங்களைப் பற்றியும் இன்றைக்குத் தெரிவித்தார்கள். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இது தொடர்ந்து நடைபெற வேண்டும். மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் விதத்தில் தமிழக அரசு எடுத்த முயற்சிகள் நிச்சயமாக மக்கள் மத்தியில் சிறப்பாகச் சென்றடையும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.



2014 பிப்ரவரி 3] [திருமதி எஸ். விஜயதரணி]

*பிற்பகல் 2–20*

எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் சிவாலய ஓட்டம் என்னும் விழாவிற்கு உள்ளூர் விடுமுறை வழங்க வேண்டும் என்பது நாங்கள் நெடுநாட்களாக கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு விஷயம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் கடிதம் மூலம்கூட, சிவாலய ஓட்டம் விழாவிற்கு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன். தொடர்ந்து சட்டமன்றத்திலும் கேட்டிருக்கிறோம். அதை வழங்கியமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பத்துகாணி பகுதியில் இருந்த பெண் குழந்தை உயிர் நீத்த சம்பவத்தையடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள். அந்த குடும்பத்திற்கு நிவாரண உதவியாக ரூபாய் 10 இலட்சம் தாருங்கள் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம்மூலம் எழுதியிருந்தேன். இருந்தாலும், அந்தத் தொகை மிக அதிகமாக இருக்கிறதென்று நினைத்தால்—Brake failure–ன் காரணமாக அரசுப் பேருந்திலிருந்து குழந்தை விழுந்து இறந்துவிட்டது. அந்த குடும்பத்தினர் மிகவும் சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள்—அந்த குடும்பத்திற்கு நிவாரண உதவியாக வழங்கப்பட்ட ரூபாய் ஒரு இலட்சத்தை இன்னும் உயர்த்திக் கொடுத்தால், அந்த குடும்பத்திற்கு நிச்சயமாக உதவியாக இருக்கும். அந்த குடும்பத்தை நான் நேரில் சென்று சந்தித்தேன். அவர்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மனமுவந்து அந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு உதவிகளை, பலருக்கும் செய்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், இந்த உதவியை நிச்சயமாக பரிசீலனை செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த விதத்தில் இந்த கோரிக்கையை முன்வைத்து அவர் எடுத்த அனைத்து முயற்சிகளுக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

*(திருத்தம் வலியுறுத்தப்பெறவில்லை.)*

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றது.

*"2014 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் அன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்து அளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்களால் 31–1–2014 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2014) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2014 ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2014), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

---

@ 3-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 3

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.



2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–25

## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 3

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2–25 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*14. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*15. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*16. 2008–2009 ஆம் ஆண்டிற்கான அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*17. 2009–2010 ஆம் ஆண்டிற்கான அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*18. 2010–2011 ஆம் ஆண்டிற்கான அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*19. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*



2014 பிப்ரவரி 3]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—